
# பொன் அம்பலம்



921
பொன்
SL/PR

உ

சிவமயம்

# பொன் அம்பலம்

# நினைவு மலர்

**21-8-1992**

# சமர்ப்பணம்

கதிர்காமர் பொன்னம்பலம் அவர்கள் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து பாடும் பெற்றியர். புங்குடுதீவு அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தில் தன்னை மறந்து அபிராமி அந்தாதி பாக்களை ஓதுவது அவரது இளமைக்கால நிகழ்ச்சி. இறைவன் கருணையை புகழும்போதும், புகழ்ந்து விவாதிக்கும் போதும் அவர் இறைவனை தனது உள்ளத்திலிருத்தி வழிபட்டமை தெரியவரும்.

திருத்தொண்டர் பெருமையில் வியப்புறும் அன்னார் திருமுறைப்பாடல் பெற்ற தலங்களைத் தேடி வழிபடுகின்றமையிலும் அத்தலங்கட்குரிய திருமுறைகளை ஆங்காங்கே ஓதுவதிலும், மற்றும் அன்பர்கட்குத் தல விளக்கமும், செல்லும் வழியும் சொல்லிக் கொடுப்பதிலும் மகிழ்ச்சி காண்பார். அவர் பாடும் திருமுறைகளும் மற்றும் அருட்பாக்களும் யாவரும் கேட்டு உருகக் கூடியன.

சிவநெறிக் கருத்துக்களை பலர் அறியச் செய்தல் அவரது கருத்துக்கு முரணாகாது. அதற்கேற்ற வகையில் இந்நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளதையிட்டு அவரது ஆத்மா மகிழ்ச்சியுறும்.

"உன்னை மறந்திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்-
உயிர் விடுவேன் கணந்தரியேன் உன் ஆணை இது
நீ, என்னை மறந்திடுவாயோ மறந்திடுவாயெனில் யான்-
என்ன செய்வேன் எங்குறுவேன், எவர்க்கு உரரைப்பேன்
எந் தாய், அன்னையினுந் தயவுடையாய்
நீ மறந்தாய் யெனினும் அகிலமெல்லாம் அளித்திடும்
நின் அருள் மறவாதென்றே, இன்னும் மிகக் களித்திங்கே
இருக்கின்றேன், மறவேல்-இது தருணம் அருட்சோதி எனக்கு
விரைந்தருளே"

இந்நினைவு நூல் அன்னார்க்கு சமர்ப்பணம்.

அன்பார்ந்த தம்பி

க. ஆறுமுகம்.

21-08-1992
"முருகன் அருட் பிரவாகம்"
நல்லூர்.



# அமரர். கதிர்காமர் பொன்னம்பலம்

**தோற்றம்: 19 - 12 - 1924**
*10 ம் வட்டாரம்*
புங்குடுதீவு.

**மறைவு: 22 - 07 - 1992**
62, விவேகானந்த மேடு
கொழும்பு - *13*.

திருச்சிற்றம்பலம்

ஒருவனே போற்றி ஒப்புஇல் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருக என்று என்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருக நின்பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே.

— திருவாசகம்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| பஞ்சபுராணம் | – | – | 1 |
| தேவாரப் பதிகங்கள் | – | – | 3 |
| திருவாசகம் | | – | 17 |
| விநாயகர் அகவல் | | – | 35 |
| தேவிவழிபாடு | | – | 37 |
| முருகன் வழிபாடு | – | – | 54 |
| இரண்டாம் சைவ வினாவிடை தொகுப்பு | – | | 63 |
| அபிடேகப் பலன்கள் | – | – | 87 |
| திருமுறைத் தலங்கள் | – | – | 88 |
| திருத்தொண்டர் குருபூஜை | – | – | 147 |

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

### திருவலிவலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

# பஞ்சபுராணம்

## தேவாரம்

பண்-கொல்லி திருஞானசம்பந்தர் (3ம் திருமுறை)

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

## திருவாசகம்

மாணிக்கவாசகர் (8ம் திருமுறை)

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

## திருவிசைப்பா

திருமாளிகைத் தேவர் (9ம் திருமுறை)

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திதக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சேந்தனார் (9ம் திருமுறை)

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போ லகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம் விளங்க
அன்னநடை மடவாளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

சேக்கிழார் (12ம் திருமுறை)

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள,
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிற்தையே ஆகக் குணொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையிற் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்





உ

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரப்பதிகங்கள்

பண்-காந்தாரம் **திருநீற்றுப்பதிகம்** திருஆலவாய்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தருவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே.

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே.

ஆற்ற லடல்விடை யேறும் ஆல வாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

## கோளறு திருப்பதிகம்

பண்-பியந்தை காந்தாரம் வேதாரணியம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளேம புகுந்த வதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.





என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள வைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உரு வளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய் வமான பலவும்
அருநெறி நல்லநல்ல அவை நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோ துமெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வான்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேடில்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

செப்பிள முலைநன்மங்கை யொருபா கமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்புள மதியுமப்பு முடிமேல வணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையா னவந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடு முடனாய்
வாண்ம திவன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடும்
இடரா னவந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல வணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.





கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமா யவேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டணமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொள்ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம் பொன்எங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள் வர்ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த

# தேவாரப் பதிகங்கள்

திருவதிகை வீரட்டானம் பண்-கொல்லி
திருச்சிற்றம்பலம்

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்
கொடுமைபலசெய்தனநானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும்பகலும்
பிரியாதுவணங்குவனெப்பொழுதும்
தோற்றாதென்வயிற்றினகம்படியே
குடரோடுதுடக்கி முடக்கியிட
ஆற்றேனடியேன்திகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே

நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தே
    னினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பக்கண்டறியேன்
    வயிற்றோடுதுடக்கமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னைநலிவதனை
    நணுகாமற்றுரந்துகரந்துமடீர்
அஞ்சேலுமென்னீரதிகைக்கெடில
    வீரட்டானத்துறையம்மானே

பணிந்தாரனபாவங்கள்பாற்றவல்லீர்
    படுவெண்டலையிற்பலிகொண்டுழல்வீர்
துணிந்தேயுமக்காட்செய்துவாழலுற்றாற்
    சுடுகின்றதுசூலைதவீர்த்தருளீர்
பிணிந்தார்பொடிகொண்டு மெய்பூசவல்லீர்
    பெற்றமேற்றுகந்தர்சுற்றும்வெண்டலைகொண்
டணிந்தீரடிகேளதிகைக்கெடில
    வீரட்டானத்துறையம்மானே

முன்னம்மடியேனறியாமையினான்
    முனிந்தென்னைநலிந்துமுடக்கியிடப்
பின்னையடியேனுமக்காளும்பட்டேன்
    சுடுகின்றதுசூலைதவீர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றோ
    தலையாயவர்தங்கடனாவதுதான்
அன்னநடையா ரதிகைக்கெடில
    வீரட்டானத்துறையம்மானே

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற்
    கரைநின்றவர்கண்டுகொளென்றுசொல்லி
நீத்தாயகயம்புகநூக்கியிட
    நிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறியேன்
வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன்
    வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
ஆர்த்தார்புனலாரதிகைக்கெடில
    வீரட்டானத்துறையம்மானே





சலம்பூவொடுதூபமறந்தறியேன்
    றமிழோடிசைப்பாடன்மறந்தறியேன்
நலந்தீங்கிலுமுன்னைமறந்தறியே
    னுன்னமெமன்னனாவின்மறந்தறியேன்
உலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வா
    யுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளாய்
அலந்தேனடியேன்திகைக்கெடில
    வீரட்டானத்துறையம்மானே

உயர்ந்தேன்மனைவாழக்கையுமொண்பொருளு
    மொருவர்தலைகாவலிலாமையினால்
வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றால்
    வலிக்கின்றதுசூலைதவிர்த்தருளீர்
பயந்தேயென்வயிற்றினகம்படியே
    பறித்துப்புரட்டியறுத்துத்தீர்த்திடநான்
அயர்ந்தேனடியேன்திகைக்கெடில
    வீரட்டானத்துறையம்மானே

சலித்தாலொருவர்துணையாருமில்லைச்
    சங்கவெண்குழைக்காதுடையெம்பெருமான்
கலித்தேயென்வயிற்றினகம்படியே
    கலக்கிமலக்கிட்டுக்கவர்ந்துதினை
அலுத்தேனடியேன்திகைக்கெடில
    வீரட்டானத்துறையம்மானே

பொன்போலமிளிர்வதொர்மேனியினீர்
    புரிபுன்சடையீர்மெலியுமபிறையீர்
துன்பேகவலைபிணியெனறிவற்றை
    நணுகாமற்றுரந்துகரந்துமிடீர்
என்போலிகளும்மையினித்தெளியா
    ரடியார்படுவதிதுவேயாகில்
அன்பேயமையும்மதிகைக்கெடில
    வீரட்டாத்துறையம்மானே

போர்த்தாயங்கொரானையினீருரிதோல்
    புறங்காடரங்காநடமாடவல்லாய்
ஆர்த்தானரக்கன்றனை மால்வரைக்கீ
    ழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்

வேர்த்தும்புரண்டும்விழுந்தும்மெழுந்தா
லென்வேதனையானவிலக்கியிடாய்
ஆர்த்தார்புனல்சூழ்திகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே

திருச்சிற்றம்பலம்

# திருவங்கமாலை

திருச்சிற்றம்பலம்

பண்-சாதாரி

தலையே நீ வணங்காய் – தலை
மாலைதலைக்கணிந்து
தலையாலேபலி தேருந்தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

கண்காள் காண்மின்களோ – கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசி நின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ – சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோன் மேனிப்பி ரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீமுரலாய் – முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைமணாளனை
மூக்கே நீமுரலாய்.

வாயே வாழ்த்துகண்டாய் – மத
யானை யுரிபோர்த்துப்
பேய் வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய்.





நெஞ்சே நீநினையாய் –நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைமணாளனை
நெஞ்சே நீநினையாய்.

கைகாள் கூப்பித்தொழீர் – கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்.

ஆக்கையாற் பயனென் – னரன்
கோயில் வலம்வந்து
பூக்கை யாலட்டிப் போற்றியென் னாதவிவ்
ஆக்கையாற் பயெனன்.

கால்களாற் பயெனன் – கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக்கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயெனன்.

உற்றா ராருளரோ – வுயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல் லால்நமக்
குற்றாராருளேரா.

இறு மாந் திருப்பன் கொலோ – வீசன்
பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச் சென்று
இறுமாந் திருப்பன்கொலோ.

தேடிக் கண்டுகொண்டேன் – திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த
## தேவாரப் பதிகங்கள்

# திருத்தொண்டத் தொகை

பண்-கொல்லிக் கௌவாணம் திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத வியற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந் தாரமர் நீதிக்கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே
னேனாதி நாதன் றனடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற்கடியேன்
கடவூரிற்கலயன் தனடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள் வள்ளன் மானக்கஞ்சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனன்மங்கை யானாயற் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
றிருக்குறிப்புத்தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.





திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரயன் றனடியார்க்கும் மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பதற்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
னொலிபுனல்சூழ சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தியடி யார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியே
னாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கு மடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கும் மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துயசிஞ் புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள்கா டவர்கோ னடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டி ருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்.
புடைசூழ்ந்த புலியதள்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்)
அடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னூரூரி லம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிசார்ந்த வடியார்க்கு மடியேன்
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

மன்னிய சீர்மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவலூர்க் கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே.

திருச்சிற்றம்பலம்





# திருக்கேதீச்சர பதிகம்

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

நந்தார் படை ஞானன் பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறைக் கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்றிருக் கேதீச்சர த்தானே

அங்கம்மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய் தபிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே

கரியகறைக் கண்டன்னல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வணிடியாழ்செயு மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே

அங்கத்துறு நோய்கள்ளடியார் மேலொழித்தருளி
வங்கம் மலிகின்றகடன் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே

வெய்யவினை யா யவ்வடியார் மேலொழித் தருளி
வையமலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடன் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே.

அட்டன்னழ காகவ்வரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழின் மாதோட்டநன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் தரைமேல்
சிட்டன்னமை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்என்னை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

கறையார்க்கடல் சூழ்ந்தகழி மாதோட்ட நன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே

திருச்சிற்றம்பலம்.





# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த
# திருவாசகம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருப்பெருந்துறை (8ஆம் திருமுறை)

# சிவபுராணம்

(கலிவெண்பா)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விலமா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்சுடரே





தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடெராளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே.
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

## திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து
நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்
விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா
அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம்
உடையானே

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்
கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான்
மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம்
பெருமான்எம்
மானேயுன் அருள்பெறுநாள் என்றென்றே
வருந்துவனே.

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலியத் தனிய னேற்கே





என்னால் அறியாப் பதம்தந்தாய்
யான தறியா தேகெட்டேன்
உன்னால் ஒன்றுங் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியா ரொடுங் கூடா
தென் நாயகமே பிற்பட்டிங்
கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வ தொன்றறியேனே

யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந் துறுமாறே

கடையவ னேனைக் கருணையி னாற்கலந்
தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல்
வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பிரான் என்னைத்
தாங்கிக்கொள்ளே

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

திருச்சிற்றம்பலம்.

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம் திருவண்ணாமலை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்





ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவர் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையெலோ ரெம்பாவாய்





ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புலன்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கல்லோ ரெம்பாவாய்





போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

# திருப்பள்ளியெழுச்சி

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறை

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தருளாயே

கூவின பூங்குயில் கூவின கோழி
        குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
        தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
        திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
        எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
        இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
        தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
        திருப்பெருந்து துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
        எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
        போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
        கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
        சிந்தனைக் கும்அரி யாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
        எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
        பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
        வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
        திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
        எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே





அதுபழச் சுவையென அமுதென அறிதற்
        கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
        எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
        மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
        எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
        மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
        பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
        திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
        ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
        விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
        வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
        கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
        எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
        போக்குகின் றோம்அவ மே இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
        திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
        படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
        ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

திருச்சிற்றம்பலம்

# திருப்பொற் சுண்ணம்

எண்சீர் ஆசிரியவிருத்தம்

தில்லை

**திருச்சிற்றம்பலம்**

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்





பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

அறுகெடுப் பராய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப்ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந் துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையோ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே





மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாரு
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

திருச்சிற்றம்பலம்





உ
கணபதி துணை

## ஔவையார் அருளிச் செய்த

# விநாயகரகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யைடப்பதுங் காட்டி

ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என்செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத் தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.





# தேவி வழிபாடு

அபிராமிபட்டர்

## அபிராமி அந்தாதி

காப்பு

தாரமர் கொன்யையும் சண்பக மாலையும் சாத்தும் தில்லை
ஊரார்தம் பாகத்(து) உமைமைந்த னேஉலகே ழும் பெற்ற
சீரபி ராமி அந்தாதிஎப் போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே

நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே 1

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ(து) அறிந்தனமே 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின்அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே 3

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு) அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே 5

சென்னிய(து) உன்பொன் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உந்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய(து) என்றும்உன் றன்பர மாகம பத்ததியே 6

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய் சிந்து ரானன சுந்தரியே 7

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத் தாள்மலர் தாள்என் கருத்தனவே 8

கருத்தன எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும்அம்பும்
முருத்தன முரலும் நீயும்அம் மேவந்தென் முன்நிற்கவே 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளேஅரு ளேஉமை யேஇமயத்(து)
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே 10

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடி(வு) உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே 11

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து) உன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணிய(து) உன்னை நயந்தோர் அவையத்து நான்முன் செய்த
புண்ணியம் ஏ(து) என்அம் மேபுவி ஏழையும் பூத்தவளே 12

பூத்த வளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்(கு)இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே 13





வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம் எம்பிராட்டி நின்தண்ணளியே 14

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்தஅம்மே
அளியேன் அறிவள விற்(கு) அள வான(து) அதிசயமே 16

அதிசய மானவடி(வு) உடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே 17

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்வியும் காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே 18

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே 19

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைநின்ற வெண்திங்க ளோகஞ்ச மோ என்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே 20

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள் வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளஉடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே 21

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவைரப் பெற்றஅம்மே
அடியேன் இறந்(து) இங்(கு) இனிப்பிற வாமல்வந்(து)
ஆண்டுகொள்ளே 22

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லா(து) அன்பர்
கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு)
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே 24

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே 25

ஏத்தும் அடியவர் ஈரே முலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கேமணம் நாறும்நின்தாள் இணைக்(கு) என்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்(து) அழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே 27

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேகழி யா அரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே 28





சித்தியும் சித்திதரு ந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத் தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே 29

அன்றே தடுத்(து) என்னைஆண்டு கொண் டாய்கொண்தட(து)
அல்லவென்கை
நன்றே உனக்(கு) இனி நான் என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேஎன் உமையவளே 30

உமையும் உமையொரு பாகனும் ஏகஉருவில் வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமையங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் வேல்வைத்த ஆசையுமே 31

ஆசைக் கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் படஇருந் தேனைநின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே 32

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுது வந்(து) அஞ்சல்என் பாய்அத்தர்
சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழு(து)உ(ன்)னையே அன்னை யேஎன்பன்
ஓடிவந்தே 33

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே 34

திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்தவிண்ணோர்
தங்கட் கும்இந்தத் தவெமய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே 35

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளே தும்இன்றி ஒளிவெளி யாகி இருக்கும்உன்றன்
அருளேத்து) அறிகின் றிலேன்அம்பு யாதனத்(து) அம்பிகையே 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை, விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும், எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான் இடம்சேர்பவளே 37

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர்அம ராவதி ஆளுகைக்கே 38

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தா மரைகள்உண்(டு), அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் விழியின் கடையுண்டு, மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை யேஅன்று, முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாண்நுதலே 39

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம் அன்றோ முன்செய்
புண்ணியமே 40

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து, தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே 41

இடங்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங் கொண்ட கொங்கை மலைகொண்(டு) இறைவா
வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே 42





பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே 43

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்(கு) அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும்ஆம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு
செய்தே 44

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யாள் உன்னை வாழ்த்துவனே
46,

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்ப்பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போதுவளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்து அரிவையர் சூழவந்(து) அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே 49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே 50

அரணம் பொருள்என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய் தார் இந்த வையகத்தே 51

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயம் திருமனை யாள்அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே 52

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே 53

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே 54

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா(து) ஒழியினும் உன்னினும் வேண்டுவ(து) ஒன்றிலையே
55

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து) இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள் அறிவார்
அன்றா லிலையில துயின்றபெம் மானும்என் ஐயனுமே 56

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்(டு) அண்டம் எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே 57





அருணாம் புயத்தும் எண்சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை நேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் காரம்புயமும்
சரணாம் புயமும்அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே 58

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒன்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்(கு) அலர் ஆகநின் றாய்அறி யார் எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே 59

பாலினும் சொல்இனி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே 60

நாயே னையும்இங்(கு) ஒருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கச்சியே 61

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடைக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோனகச்
செங்கைக் கரும்பும் அலரும்எப் போதும்என் சிந்தையதே 62

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன் றில்கொட்டும் தறிக்குறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்(கு) அன்பு பூண்டுகொண் டேன்நின்
புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒரு பொழு தும்திரு மேனிப்ர காசமின்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே 64

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன்அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனுமந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே 65

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிசெம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்அவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே 66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே 67

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே 68

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே 69

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியல்
பண்களிக் குங்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே 70

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பணி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக்(கு) என்குறையே 71

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன்இனி யான் பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே 72





தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழு(து) எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு)ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே 74

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே 75

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரா(ன்)ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே 76

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தே(ன்)என் துணைவிழிக்கே 78

விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு) அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே 79

கூட்டிய வா என்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே 80

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் எனது) உனது) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றிலேன்என்கண் நீவைத்த பேரளியே 81

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும்நின்
ஒளியாகநின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுந்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே 82

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே 83

உடையாளை ஒல்கு செம்பட்(டு) உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்(கு)என்னைஇனிப்
படையாளை உங்களையும்படை யாவண்ணம் பார்த்திருமே 84

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறை வண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே 85

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலை வெங் காலன் என் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே 86





மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்திஎன்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகம்கொண் டாளும் பராபரையே 87

பரமென்றுஉனையடைந் தேன்தமி யேனும்உன் பத்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே 88

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே 89

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியலே 90

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே 91

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ் நகையே 92

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே மலைகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே 93

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னதெல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளம் எல்லாம்
அன்றே உனதென்(று) அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே 95

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே 96

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரர்க்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகஅறி யாமடப் பூங்குயிலே 98

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயன்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யாருக்(கு) அன்(று) இமவான் அளித்த கனங்குழையே 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும்
உதிக்கின்றவே 100

## நூல் பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை அங்குச பாசங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்(கு) ஒரு தீங்கில்லையே

முற்றிற்று





குமரகுருபர சுவாமிகள் அருளிய

# சகலகலா வல்லிமாலை

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே 2

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் நாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கைடக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலாவல்லியே 7

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தத் தடிமைகாள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே 8





சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல சலாவல்லியே 10

---

# முருகன் வழிபாடு

## அருணகிரிநாதர்
## கந்தரநுபூதி

### காப்பு

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்

### நூல்

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ?
எல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே

வளைபட் டகைமா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுள்நின் றுதயங் குவதே





திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா யெனவள் ளிபதம் பணியும்
தணியா வதிமோ கதயா பரனே

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே

மட்டூர் குழன்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே

முருகன் றனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிச்செல் லுமவா வினையே

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவடும் புவியும் பரவும்
குருபுங் கவஎன் குணபஞ் சரனே

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே

யாமோ தியகல் வியுமெம் மறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே நடவீர் நடவீ ரினியே

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதிகா வலசூ ரபயங் கரனே

வடிவுந் தனமும் மனமுங் குணமும்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியத் தமிலா அயில்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே.

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே





காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே.

அடியைக் குறியா தறியா மையினான்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே.

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே.

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியோ னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே

ஆதர ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவிநோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே

மின்னே நிகர்வாழ் கைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே

ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனவன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே

கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன் *
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்கரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லக்ருபா கரனே

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியெதப் பொருடான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே





ஆதா ளியையொன் றறியே னையறந்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே

மாவேள் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே

வினையோ டவிடுங் கதிர்வேல் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே

குறியைக் குறியா துகுறித் தறியும்
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூ திபிறந் ததுவே

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக கதயா பரனே

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே

ஆறா யையுநீத் ததன்மே னிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளேதா
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறு வுலகங் குளிர்வித்தவனே

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
செறிவன் றவரோ டுறும்வே லவனே

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையும் கிருபைசூழ் சுடரே

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே

உருவா யருவா யுலதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவா யருள்வாய் குகனே

---





## அருணகிரிநாதர்
# திருப்புகழ்

கதிர்காமம்

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் தனதானா

திருமகளு லாவு மிருபுயமு ராரி
 திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
 தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
 மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
 மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
 அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
 அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினை யிலாத தருவினைவி டாத
 இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
 இருதனவி நோதப் பெருமாளே

தனனதான தத்த தனதான
தனன தான தத்த தனதான

எதிரிலாத பத்தி தனைமேவி
 இனியதாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
 எனதுளே சிறக்க அருள்வாயே
கதிர் காம வெற்பி லுறவோனே
 கனமேரு வொத்த புயவீரா
மதுரவாணி யுற்ற கழலோனே
 வழுதி கூனி மிர்த்த பெருமாளே

அகரமும் ஆகி அதிபனும் ஆகி
அதிகமும் ஆகி அகமாகி
அயனென ஆகி அரியென ஆகி
அரனென் ஆகி அவர்மேலாய்
இகரமும் ஆகி எவைகளும் ஆகி
இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமுன் ஓடி வரவேணும்
மகபதி ஆகி மருவும் வலாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனம் உறை வேடன் அருளிய பூஜை
மகிழ்கதிர் காமம் உடையோனே
செக்கண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே

---

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா(து) உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்

திருச்சிற்றம்பலம்





உ
சிவமயம்
யாழ்ப்பாணத்து நல்லூர்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அருளிச் செய்த இரண்டாம் சைவவினாவிடை தொகுப்பு

1. **உலகத்துக்குக் கருத்தா யாவர்?**
சிவபெருமான்.

2. **சிவபெருமான் எப்படிப்பட்டவர்?**
நித்தியரும், சருவவியாபகரும், அநாதிமலமுத்தரும், சருவஞ்ஞரும், சருவகர்த்தாவும், நித்தியானந்தரும், சுவதந்திரருமாய் உள்ளவர்.

14. **சிவசத்தியாவது யாது?**
அக்கினியோடு சூடுபோலச் சிவத்தோடு பிரிவின்றி உள்ளதாகிய வல்லமை.

15. **சிவபெருமானுக்கு உரிய வடிவம் எவை?**
அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்றுமாம்.

16. **சிவபெருமான் இம்மூவகைத் திருமேனியுடையபொழுது எவ்வெப் பெயர் பெறுவர்?**
அருவத் திருமேனியையுடைய பொழுது சிவன் எனவும், அருவுருவத் திருமேனியையுடைய பொழுது சதாசிவன் எனவும், உருவத் திருமேனியையுடைய பொழுது மகேசுரன் எனவும் பெயர் பெறுவர்.

17. **சிவபெருமானுடைய உருவம் ஆன்மாக்களாகிய நம் போலிகளுடைய உருவம் போன்றதா?**
ஆன்மாக்களுடைய உருவம் இருவினைக்கு ஈடாகத் தோல் எலும்பு முதலிய தாதுக்களால் உண்டாகிய உருவம்; சிவபெருமானுடைய உருவம், ஆன்மாக்கள் செய்யுந் தியானம் பூசை முதலியவைகளின் பொருட்டுச் சிவசத்தியாகிய திருவருட்குணங்களுள் இன்னது இன்னது இன்ன இன்ன அவயவம் என்று பாவிக்கப்படும் உருவம்.

**25. ஆன்மாக்கள் எடுக்கும் சரீரம் எத்தனை வகைப்படும்?**
தூலசரீரம், சூக்கும சரீரம் என இரண்டு வகைப்படும்.

**28. ஆன்மாக்கள் எப்படிப் பிறந்திறந்து உழலும்?**
நல்வினை தீவினை என்னும் இருவினைக்கு ஈடாக, நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும், எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதத்தையும் உடையவகளாய்ப் பிறந்திறந்து உழலும்.

**30. எழுவகைப் பிறப்புக்களாவன யாவை?**
தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். இவ்வெழு வகையினுள்ளும் முன் நின்ற ஆறும் இயங்கியற் பொருள்கள். இறுதியில் நின்ற தாவரங்கள் நிலையியற் பொருள்கள். இயங்கியற் பொருளின் பெயர் சங்கமம், சரம். நிலையியற் பொருளின் பெயர் தாவரம், அசரம்.

**36. ஆன்மாக்கள் வினைகளைச் செய்வதற்கும் வினைப்பயன்களை அநுபவித்தற்கும் இடம் எவை?**
இருவினைகளைச் செய்தற்கும் இருவினைப் பயன்களை அநுபவித்தற்கும் இடம் பூமி, நல்வினைப் பயனை அநுபவித்தற்கு இடஞ் சுவர்க்க முதலிய மேலுலகங்கள், தீவினைப் பயனை அனுவித்தற்கு இடம் இருபத்தெட்டுக் கோடி நரகங்கள்.

**37. பூமியிலே பிறந்த ஆன்மாக்கள் சரீரத்தை விட்டவுடனே யாது செய்யும்?**
நல்வினை செய்த ஆன்மாக்கள், தூல சரீரத்தை விட்டவுடனே,சூக்கும சரீரத்தோடு பூதசார சரீரமாகிய தேவ சரீரத்தை எடுத்துக்கொண்டு, சுவர்க்கத்திலே போய், அந்நல்வினைப் பயனாகிய இன்பத்தை அநுபவிக்கும். தீவினை செய்த ஆன்மாக்கள், தூல சரீரத்தை விட்டவுடனே, சூக்கும சரீரத்தோடு பூத சரீரமாகிய யாதனா சரீரத்தை எடுத்துக்கொண்டு, நரகத்திலே போய், அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை அனுபவிக்கும். இப்படி யன்றி ஒரு தூல சரீரத்தை விட்டவுடனே பூமியிலே தானே ஒரு யோனிவாய்ப்பட்டு, மற்றொரு தூல சரீரத்தை எடுப்பதும் உண்டு.





**38. சுவர்க்கத்திலே இன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**
தொலையாது எஞ்சிநின்ற கன்மசேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து மனிதர்களாய்ப் பிறக்கும்.

**39. நரகத்திலே துன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**
தொலையாது எஞ்சிநின்ற கன்மசேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து,முன்பு தாவரங்களாயும், பின்பு நீர்வாழ்வனவாயும், பின்பு ஊர்வனவாயும், பின்பு பறவைகளாயும், பின்பு விலங்குகளாயும் பிறந்து, பின்பு முன் செய்த நல்வினை வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும்.

**40. எழுவகைப் பிறப்பினுள்ளும் எந்தப் பிறப்பு அருமையுடையது?**
பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெற்றுய்தற்குக் கருவியாதலால் மனிதப் பிறப்பே மிக அருமை யுடையது.

**108. சிவபெருமானைச் சிவாகம விதிப்படி வழிபடுதற்கு யோக்கியதையைப் பிறப்பிப்பது யாது?**
சிவதீக்ஷை.

**109. சிவதீக்ஷை பெற்றபின் அவசியமாக அநுட்டிக்கப்படும் கருமங்கள் எவை?**
இயமநியமங்களும்,சந்தியாவந்தனம், சிவலிங்கபூசை,தேவார திருவாசக பாராயணம், சிவாலய கைங்கரியம், சிவாலய தரிசனம், குருவாக்கிய பரிபாலனம், இயன்ற மட்டும் மாகேசுர பூசை முதலியவை களுமாம்.(கைங்கரியம் - தொண்டு)

**110. இயமம் என்பன எவை?**
கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர்மனைவியரையும் பொதுமகளிரையும் விரும்பாமையாகிய ஆண்டகைமை, இரக்கம், வஞ்சனையில்லாமை, பொறையுடைமை, மனங்கலங்காமை, அற்பாகாரம், சுசியுடைமை என்னும் பத்துமாகும்.

**111. நியமம் என்பன எவை?**
தவம், மனமுவந்திருத்தல், கடவுள் உண்டென்னும் விசுவாசம், பாவத்துக்குப் பயந்துதேடிய பொருளைச்

சற்பாத்திரமாயுள்ளவர்க்குக் கொடுத்தல்,தன்னின் மூத்தோரை வழிபடுதல்,உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மை நூல்களைக் கேட்டல், குலஞ் செல்வம் அதிகாரம் முதலியவைகளினாலே கெருவம் இன்றி அடங்கியொழுகுதல், தக்கனவும் தகாதனவும் பகுத்தறிதல், செபம், விரதம் என்னும் பத்துமாம்.

**112. அநுட்டிக்கலாகாத கருமங்கள் எவை?**
சிவநிந்தை, குருநிந்தை, சிவனடியார்நிந்தை, சிவசாத்திரநிந்தை, தேவத்திரவியங்களை உபயோகஞ் செய்தல், உயிர்க்கொலை முதலியவைகளாம்.

**113. அநுட்டானத்தில் வழுவிய பாவங்கள் எப்படி நீங்கும்?**
அறியப்பட்ட பாவங்கள் பிராயச் சித்தங்களினாலே நீங்கும், அறியப்படாத பாவங்கள் அந்தியேட்டிக் கிரியையினாலே நீங்கும்.

**114. தீக்ஷை பெற்றுத் தத்தமக்கு விதிக்கப்பட்ட சைவாசாரங்களை அநுட்டியாது விடுத்தவர் யாது பெறுவர்?**
பைசாசபுவனத்திற் பிசாசுகளாய் அங்குள்ள போகங்களை அநுபவிப்பர்.

**115. சிவதீக்ஷை பெற்றுச் சிவபெருமானை வழிபடுவோர்கள் யாது பெயர் பெறுவார்கள்?**
சைவர் என்னும் பெயர் பெறுவார்கள்.

**130. ஆசாரியராவார் யாவர்?**
சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றுக்கொண்டு,நித்திய கருமங்களோடு தீக்ஷை, பிரதிட்டை முதலிய கிரியைகளுஞ் செய்பவர்.

**131. ஆசாரியராதற்கு யோக்கியர் யாவார்?**
பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருள்ளும் , மனக்குற்றங் களும் உடற்குற்றங்களும் இல்லாதவராய், நிகண்டு கற்று இலக்கிய வாராய்ச்சி செய்து இலக்கணமுந் தருக்கமும் நீதிநூல்களுஞ் சிவபுராணங்களும் படித்தறிந்தவராய், தேவார திருவாசகங்களைப் பண்ணோடு ஓதினவராய், சைவாகமங்களை ஓதி, அவைகளால் உணர்த்தப்படும் நான்கு பாதங்களையும் அறிந்தவராய்,சீடர்களுக்கு நல்லொழுக்கத்தையுஞ் சைவ சமயத்தையும் போதித்தலின்கண் அதிசமர்த்தராய் உள்ளவர்.





**132. ஆசாரியாதற்கு யோக்கிய ரல்லாதவர் யார்?**
நான்கு வருணத்துக் குட்படாதவன், கணவன் இருக்கக் கள்ளக்கணவனுக்குப் பிறந்தவனாகிய குண்டகன், கணவன் இறந்தபின் கள்ளக்கணவனுக்கு விதவையிடத்துப் பிறந்தவனாகிய கோளகன், வியபிசாரஞ் செய்த மனைவியை விலக்காத வன்,குருடன்,ஒற்றைக் கண்ணன், செவிடன், முடவன், சொத்திக்கையன், உறுப்புக் குறைந்தவன், உறுப்பு மிகுந்தவன், தீரா வியாதியாளன், பதினாறு வயசுக்கு உட்பட்டவன், எழுபது வயசுக்கு மேற்பட்டவன், கொலை களவு முதலிய தீயொழுக்க முடையவன், சைவாகமவுணர்ச்சியில்லாதவன் முதலானவர்.

**144. எந்த நிற விபூதி தரிக்கத் தகும்?**
வெண்ணிற விபூதியே தரிக்கத் தகும். கருநிற விபூதியும், செந்நிற விபூதியும், புகைநிற விபூதியும், பொன்னிற விபூதியும் தரிக்கலாகாது.

**145. விபூதியை எப்படி எடுத்து வைத்துக் கொள்ளல் வேண்டும்?**
புதுவஸ்திரத்தினாலே வடித்தெடுத்துப் புதுப்பாண்டத்தினுள்ளே இட்டு,மல்லிகை,முல்லை,பாதிரி,சிறுசண்பகம்,முதலிய சுகந்த புஷ்பங்களை எடுத்து அதனுள்ளே போட்டுப்,புதுவஸ்திரத் தினாலே அதன் வாயைக் கட்டி வைத்துக் கொள்ளல் வேண்டும்.

**146. விபூதியை எதில் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும்?**
பட்டுப் பையிலேனும், சம்புடத்திலேனும், வில்வக் குடுக்கையிலேனும்,சுரைக் குடுக்கையிலேனும்,
எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும். குடுக்கைகளின்றிப் பிறவற்றில் உள்ள விபூதியைத் தரிக்கலாகாது.

**147. விபூதியை எந்தத் திக்கு முகமாக இருந்துகொண்டு தரித்தல் வேண்டும்?**
வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்துகொண்டு தரித்தல் வேண்டும்.

**148. விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்?**
நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும்.இப்படியன்றி, நடுவிரல் ஆழிவிரல்களினால்

இடப்பக்கந் தொடுத்திழுத்துப் பெருவிரலினால் வலப்பக்கந் தொடுத்திழுத்துத் தரித்தலுமாம். வாயங்காந்து கொண்டும், தலை நடுங்கிக் கொண்டும், கவிழ்ந்து கொண்டுந் தரிக்கலாகாது. ஒரு விரலாலேனும் ஒருகையாலேனும் தரித்தலாகாது

**149. விபூதி நிலத்திலே சிந்தினால் யாது செய்தல் வேண்டும்?**
*சிந்திய விபூதியை எடுத்துவிட்டு அந்தத் தளத்தைச் சுத்தி செய்தல் வேண்டும்.*

**151. எவ்வெக் காலங்களில் விபூதி அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்?**
சந்தியாகால மூன்றினும், சூரியோதயத்தினும், சூரியாஸ்தமயனத்தினும்,ஸ்நானஞ் செய்தவுடனும்,பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்துக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும் , மலசல மோசனஞ் செய்து சௌசம் பண்ணி ஆசமித்த பின்னும், தீக்ஷை யில்லாதவர் தீண்டிய போதும்,பூனை கொக்கு எலி முதலியன தீண்டிய போதும் விபூதி அவசியமாகத் தரித்தல் வேண்டும்.

**152. விபூதி தரியாதவருடைய முகம் எதற்குச் சமமாகும்?**
சுடுகாட்டுக்குச் சமமாகும். ஆதலினால், விபூதி தரித்துக் கொண்டே புறத்திற் புறப்படல் வேண்டும்.

**153. ஆசாரியராயினுஞ் சிவனடியாராயினும் விபூதி தந்தால், எப்படி வாங்கித் தரித்தல் வேண்டும்?**
மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி வாங்கித் தரித்துக்கொண்டு, முன்போல் மீட்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

**154. எப்படிப்பட்ட விபூதி தரிக்கலாகாது?**
ஒரு கையால் வாங்கிய விபூதியும், விலைக்குக் கொண்ட விபூதியும், சிவதீக்ஷை யில்லாதார் தந்த விபூதியுந் தரிக்கலாகாது.

**155. சுவாமி முன்னும் சிவாக்கினி முன்னும் குருமுன்னும் சிவனடியார் முன்னும் எப்படி நின்று விபூதி தரித்தல் வேண்டும்?**
முகத்தைத் திருப்பிநின்று தரித்தல் வேண்டும்.





**156. சுவாமிக்குச் சாத்தப்பட்ட விபூதிப் பிரசாதம் யாவராயினுங் கொண்டுவரின் யாது செய்தல் வேண்டும்?**
கொண்டுவந்தவர் தீக்ஷை முதலியவற்றினாலே தம்மின் உயர்ந்தவராயின், அவரை நமஸ்கரித்து வாங்கித் தரித்தல் வேண்டும்; அப்படிப்பட்டவரல்லாயின், அவ்விபூதிப் பிரசாதத்தை ஒரு பாத்திரத்தில் வைப்பித்து, அதனைப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து நமஸ்கரித்து எடுத்துத் தரித்தல் வேண்டும்.

**163. விபூதிதாரணம் எதற்கு அறிகுறி?**
ஞானாக்கினியினாலே தகிக்கப்பட்ட பசுமல நீக்கத்தில் விளங்குஞ் சிவத்துவப்பேற்றிற்கு அறிகுறி.

**165. உருத்திராஷந் தரித்தற்கு யோக்கியர் யாவர்?**
மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசாரமுடையவராய் உள்ளவர்.

**167. எவ்வெக் காலங்களில் உருத்திராஷம் அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்?**
சந்தியாவந்தனம், சிவமந்திரசெபம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலயதரிசனம், சிவபுராணம் படித்தல், சிவபுராணங் கேட்டல், சிராத்தம் முதலியவை செய்யுங் காலங்களில் அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்; தரித்துக் கொள்ளாது இவை செய்தவருக்குப் பலம் அற்பம்.

**171. உருத்திராஷந் தரிக்கத் தக்க தானங்கள் யாவை?**
குடுமி, தலை, காதுகள், கழுத்து, மார்பு, புயங்கள், கைகள், பூணூல் என்பவைகளாம்.

**172. இன்ன இன்ன தானங்களில் இத்தனை இத்தனை மணி தரித்தல் வேண்டும் என்னும் நியமம் உண்டோ?**
ஆம்; குடுமியிலும் பூணூலிலும் ஒவ்வொரு மணியும், தலையிலே இருபத்திரண்டு மணியும், காதுகளிலே ஒவ்வொரு மணி அல்லது அவ்வாறு மணியும், கழுத்திலே முப்பத்திரண்டு மணியும், புயங்களிலே தனித்தனி பதினாறு மணியும், கைகளிலே தனித்தனி பன்னிரண்டு மணியும், மார்பிலே நூற்றெட்டு மணியும் தரித்தல் வேண்டும். குடுமியும் பூணூலும் ஒழிந்த மற்றைத் தானங்களிலே அவ்வத் தானங் கொண்ட அளவு மணி தரித்தலும் ஆகும்.

**174. உருத்திராஷதாரணம் எதற்கு அறிகுறி?**
சிவபெருமானுடைய திருக்கண்ணிற் றோன்றுந் திருவருட் பேற்றிற்கு அறிகுறி.

**176. ஸ்ரீ பஞ்சாஷர செபத்துக்கு யோக்கியர் யாவர்?**
மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசார முடையவராய், சிவதீஷை பெற்றவராய் உள்ளவர்.

**180. செபத்துக்கு எதைக் கொண்டு உரு எண்ணல் வேண்டும்?**
செபமாலையைக் கொண்டாயினும், வலக்கை விரலிறையைக் கொண்டாயினும் உரு எண்ணல் வேண்டும்.

**182. செபமாலைக்கு எத்தனை மணி கொள்ளத் தகும்?**
இல்வாழ்வான் இருபத்தேழு மணியும், துறவி இருபத்தைந்து மணியுங் கொள்ளத் தகும். இல்லாழ்வான் நூற்றெட்டு மணி ஐம்பத்து நான்கு மணிகளாலுஞ் செபமாலை செய்து கொள்ளலாம்.

**186. செபமாவது யாது?**
தியானிக்கப்படும் பொருளை எதிர்முக மாக்கும் பொருட்டு அதனை உணர்த்தும் மந்திரத்தை உச்சரித்தலாம்.

**187. மந்திரம் என்பதற்குப் பொருள் யாது?**
நினைப்பவனைக் காப்பது என்பது பொருள். ஆகவே, மந்திரம் என்னும் பெயர், நினைப்பவனைக் காக்கும் இயல்புடைய வாச்சியமாகிய சிவத்துக்குஞ் சிவசக்திக்குமே செல்லும்; ஆயினும், வாச்சியத்துக்கும் வாசகத்துக்கும் பேதமில்லாமை பற்றி,உபசாரத்தால் வாசகத்துக்குஞ் செல்லும்; எனவே மந்திரம் வாச்சியமந்திரம் வாசகமந்திரம் என இரு திறப்படும் என்றபடி யாயிற்று. (மந் – நினைப்பவன், திர – காப்பது)

**193. எந்தத் திக்குமுகமாக எப்படி இருந்து செபித்தல் வேண்டும்?**
வடக்குமுகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும், மரப்பலகை, வஸ்திரம், இரத்தின கம்பளம்,மான்றோல், புலித்தோல், தருப்பை என்னும் ஆசனங்களுள் இயன்ற தொன்றிலே, முழந்தாள் இரண்டையும் மடக்கி, காலோடு காலை அடக்கி, இடத் தொடையினுள்ளே வலப் புறங்காலை வைத்து, இரண்டு கண்களும் மூக்கு நுனியைப் பொருந்த, நிமிர்ந் திருந்துகொண்டு, செபித்தல் வேண்டும்.





**194. எப்படி இருந்து செபிக்க லாகாது?**
சட்டையிட்டுக் கொண்டும், சிரசில் வேட்டி கட்டிக் கொண்டும், போர்த்துக்கொண்டும், குடுமியை விரித்துக்கொண்டும், கௌபீனந் தரியாதும், வேட்டி தரியாதும், விரலிலே பவித்திரந் தரியாதும், பேசிக்கொண்டும், இருளில் இருந்துகொண்டும், நாய் கழுதை பன்றி முதலியவற்றையும், புலையர் முதலாயினோரையும் பார்த்துக் கொண்டுஞ் செபிக்கலாகாது.செபஞ் செய்யும்போது, கோபம், களிப்பு, கொட்டாவி, தும்மல், நித்தரை, சோம்பல், வாதம் முதலியவை ஆகாவாம்.

**195. செபமாலை கொண்டு எப்படிச் செபித்தல் வேண்டும்?**
பிறர் கண்ணுக்குப் புலப்படா வண்ணம் பரிவட்டத்தினால் மூடப்பட்ட செபமாலையை, வாசகமாகச் செபிக்கிற், சுட்டுவிரலிலும், மந்தமாகச் செபிக்கின் நடுவிரலிலும், மானசமாகச் செபிக்கின் ஆழிவிரலிலும் வைத்து, சிபெருமானுடைய திருவடிகளை மனசிலே தியானித்துக் கொண்டு, பெருவிரலினாலே நாயக மணிக்கு அடுத்த முகமேனோக்கிய மணியை முதலாகத் தொட்டு, ஒவ்வொரு மணியாகப் போகத்தின் பொருட்டுக் கீழ்நோக்கித் தள்ளியும்,முத்தியின் பொருட்டு மேனோக்கித் தள்ளியுஞ் செபித்து, பின்பு நாயகமணி கைப்பட்டதாயின், அதனைக் கடவாது திரும்ப மறித்து வாங்கி, அதனைத் திரும்பக் கையில் ஏறிட்டுச் செபித்தல் வேண்டும். செபிக்கும்போது, செபமாலையில் மணிகள் ஒன்றோடொன்று ஓசைப்படிற் பாவமுண்டாம்.

**197. ஸ்ரீ பஞ்சாஷரசெபம் எவ்வெக் காலங்களிலே விசேஷமாகச் செய்யத் தக்கது?**
அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, விதிபாதயோகம், பன்னிரண்டு மாசப்பிறப்பு,கிரகணம், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம் முதலாகிய புண்ணிய காலங்களிலே புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, தியானஞ் செப முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும். சித்திரை, ஐப்பசி என்னும் இவ்விரண்டு மாசப்பிறப்பும் விஷு எனப்படும். இவைகளிலே, மாசம் பிறத்தற்கு முன் னெட்டு நாழிகையும் பின் னெட்டு நாழிகையும் புண்ணியகாலம். ஆடி மாசப்பிறப்புத் தஷிணாயனம் எனப்படும்; இதிலே மாசம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். தை மாசப் பிறப்பு உத்தராயணம் எனப்படும்; இதிலே, மாசம் பிறந்த பின் பதினாறு நாழி வகை புண்ணிய காலம். கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும்

இந்நான்கு மாசப் பிறப்பும் விட்டுணுபதி எனப்படும். இவைகளிலே, மாசம் பிறக்கு முன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். ஆனி,புரட்டாதி, மார்கழி, பங்குனி, என்னும் இந்நான்கு மாசப் பிறப்பும் சடசீதிமுகம் எனப்படும். இவைகளிலே, மாசம் பிறந்த பின் பதினாறு நாழிகை புண்ணிய காலம். சூரிய கிரகணத்திலே பரிசகாலம் புண்ணிய காலம். சந்திர கிரகணத்திலே விமோசன காலம் புண்ணிய காலம். அர்த்தோதயமாவது தை மாசத்திலே ஞாயிற்றுக் கிழமையும் அமாவாசையுந் திருவோண நக்ஷத்திரமும் விதிபாதயோகமுங் கூடிய காலம். மகோதய மாவது தை மாசத்திலே திங்கட்கிழமையும் அமாவாசையுந் திருவோண நக்ஷத்திரமும் விதிபாதயோகங் கூடிய காலம்.

**206. திருக்கோவிலுள்ளிருக்குஞ் சிவலிங்க முதலிய திருமேனிகள் எல்லாராலுமே வழிபடற் பாலனவா?**

ஆம்; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் வழிபடற் பாலனவேயாம்; ஆயினும், அவ்வழிபாடு அவரவர் கருத்து வகையால் வேறுபடும்; படவே, அவருக்குச் சிவபெருமான் அருள் செய்யும் முறைமையும் வேறுபடும்.

**220. சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொண்டவர் பூசை பண்ணாது புசிக்கின் என்னை?**

பூசை பண்ணாது புசிப்பது பெருங் கொடும் பாவம்; அப்படிப் புசிக்கும் அன்னம் புழுவுக்கும், பிணத்துக்கும், மலத்துக்கும் சமம்; அப்படிப் புசித்தவனைத் தீண்டல் காண்டல்களும் பாலம்; ஆதலால் ஒரோவிடத்துப் பூசை பண்ணாது புசித்தவன், ஆசாரியரை அடைந்து அதற்குப் பிராயச்சித்தஞ் செய்து கொள்ளல் லேண்டும்.

**222. சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொண்டவர் சனன மரணாசௌசங்களில் யாது செய்தல் வேண்டும்?**

திடபத்தியுடையவர் ஸ்நானஞ் செய்து ஈரவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு; தாமே சிவபூசை பண்ணலாம்; ஸ்நானஞ் செய்தமை முதற் பூசை முடிவுவரையுந் தாமரையிலையில் நீர் போல அவரை ஆசௌசஞ் சாராது. திடபத்தி யில்லாதவர்,ஆசௌசம் நீங்கும் வரையும், தம்முடைய ஆசாரியரைக்





கொண்டாயினுந் தம்மோடு ஒத்தாரைக் கொண்டாயினுந் தம்முடைய பூசையைச் செய்வித்துத் தாம் அந்தரியாகம் செய்து கொண்டு. அப்பூசை முடிவிலே புற மண்டபத்தினின்று புட்பாஞ்சலித் திரயஞ் செய்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

**223. வியாதியினாலே தங் கைகால்கள் தம்வச மாகாதிருப்பின் யாது செய்தல் வேண்டும்?**

தம்முடைய ஆசாரியரைக் கொண்டாயினும், தம்மோடொத்தாரைக் கொண்டாயினும், தம் பூசையைச் செய்வித்துத் தாம் அந்தரியாகஞ் செய்தல் வேண்டும்.

**224. சிவபூசை யெழுந்தருளப் பண்ணிக்கொண்ட பெண்கள் பூப்பு வந்தபோது யாது செய்தல் வேண்டும்?**

மூன்று நாளும் பிறர் தண்ணீர் தர ஸ்நானஞ் செய்து கொண்டு, அந்தரியாகஞ் செய்தல் வேண்டும். நான்காநாள் ஸ்நானஞ் செய்து, பஞ்சகவ்வியமேனும் பாலேனும் உட்கொண்டு, மீட்டும் ஸ்நானஞ் செய்து, சிவபூசை செய்தல் வேண்டும். அம்மூன்று நாளும் அந்தரியாகஞ் செய்யாதொழியின், அக்குற்றம் போம்படி அகோரத்தை ஆயிரம் உருச் செபித்தல் வேண்டும்.

**225. பெண்கள் தாம் பிரசவித்த சூதகம், தமக்குரியார் இறந்த ஆசௌசம், வியாதி இவைகள் வரின், யாது செய்தல் வேண்டும்?**

வருணத்தாலுந் தீக்ஷையாலுந் தம்மோடொத்தவரைக் கொண்டு பூசை செய்வித்தல் வேண்டும்.

**226. ஆசௌசம் வியாதி முதலியவை வந்தபோது பிறரைக் கொண்டு பூசை செய்வித்தவர் யாவரும், ஆசௌச முதலியவை நீங்கிய பின் யாது செய்தல் வேண்டும்?**

பிராயச்சித்தத்தின் பொருட்டு அகோரத்தை முந்நூறுருச் செபித்துத் தாம் பூசை செய்தல் வேண்டும்.

**230. நாடோறும் நியமமாக எந்த நேரத்திலே நித்திரை விட்டெழுதல் வேண்டும்?**

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்குமுன் நித்திரை விட்டெழுவது உத்தமம். மூன்றேமுக்கால் நாழிகைக்கு முன் எழுவது மத்திமம். உதயத்தில் எழுவது அதமம்.

**231. நித்திரை விட்டெழுந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?**
சலம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்து, முகத்தையுங் கைகால்களையுங் கழுவி, ஆசமனம் பண்ணி, வடக்குமுகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும் இருந்து, விபூதி தரித்துக்கொண்டு, குரு உபதேசித்த பிரகாரஞ் சிவபெருமானைத் தியானித்துச் சிவமூலமந்திரத்தை இயன்றமட்டுஞ் செபித்து, அருட் பாக்களினாலே உச்சவிசையோடு தோத்திரஞ் செய்தல் வேண்டும்.

**252 குளிர்ந்த சலத்திலே ஸ்நானஞ் செய்யமாட்டாத பிணியாளர் யாது செய்தல் வேண்டும்?**
ஸ்நானஞ் செய்தவர் சுத்தி செய்யப்பட்ட தானத்திலே சுத்தி செய்யப்பட்ட பாத்திரத்தில் வைத்த வெந்நீரை, அவர் ஒரு பாத்திரத்தில் விட விட எடுத்து ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினால் ஈரத்தைத் துவட்டி ,உலர்ந்த வஸ்திரந் தரித்துப் பதினொரு மந்திரத்தை ஒருதரஞ் செபித்துக்கொண்டு, சந்தியாவந்தன முதலியன செய்யலாம்.

**253. வியாதியினாலே ஸ்நானஞ் செய்யமாட்டாதவர் யாது செய்தல் வேண்டும்?**
கழுத்தின் கீழ், அரையின்கீழ், கால் என்னும் இவைகளுள் ஒன்றை இயன்றபடி சலத்தினாலே கழுவிக் கொண்டு,கழுவாமல் எஞ்சிய உடம்பை ஈர வஸ்திரத்தினால் ஈரம் படும்படி துடைத்து, அவ்வீரத்தைத் துவட்டித், தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துப் பதினொரு மந்திரத்தை ஒருதரஞ் செபித்துக்கொண்டு, சந்தியாவதன முதலியன செய்யலாம். இந்த ஸ்நானங் காபில ஸ்நானம் எனப் பெயர் பெறும்.

**256. தீண்டலினாலே எவ்வெப்பொழுது குற்றமில்லை?**
சிவதரிசனத்திலும், திருவிழாவிலும், யாகத்திலும்,விவாகத்திலும், தீர்த்த யாத்திரையிலும் வீடு அக்கினி பற்றி எரியுங் காலத்திலும், தேச கலகத்திலும் சன நெருக்கத் தீண்டலினாலே குற்றமில்லை.

**269. போசனம் எப்படிப் பண்ணல் வேண்டும்?**
இரண்டு கால்களையும் முடக்கி இடமுழந்தாளின் மேலே இடக்கையை ஊன்றிக்கொண்டிருந்து, விதிப்படி அன்ன முதலியவற்றைச் சுத்திசெய்து, சிவபெருமானுக்கும் அக்கினிக்குங் குருவுக்கும் நிவேதனம் பண்ணி, அன்னத்திலே பிசையத்தக்க





பாகத்தை வலக்கையினாலே வலப்பக்கத்திலே வேறாகப் பிரித்துப் பருப்பு நெய்யோடு பிசைந்து, சிந்தாமற் புசித்தல் வேண்டும்; அதன்பின் சிறிது பாகத்தை முன்போலப் பிரித்துப், புளிக்கறியோடாயினும் ரசத்தோடாயினும் பிசைந்து புசித்தல் வேண்டும். அதன்பின் மோரோடு பிசைந்து புசித்தல் வேண்டும். கறிகளை இடையிடையே தொட்டுக் கொள்ளல் வேண்டும். இலையிலுங் கையிலும் பற்றறத் துடைத்துப் புசித்தபின், வெந்நீரேனுந் தண்ணீரேனும் பானம் பண்ணல் வேண்டும். உமிழத் தக்கதை, இலையின் முற்பக்கத்தை மிதத்தி, அதன்கீழ் உமிழதல் வேண்டும்.

**271. புசிக்கும்போது அன்னத்திலே மயிர், ஈ, எறும்பு கொசுகு முதலியன காணப்படின், யாது செய்தல் வேண்டும்?**
அவைகளைச் சிறிதன்னத்தோடு புறத்தே நீக்கிவிட்டுக் கை கழுவிக்கொண்டு, சலத்தினாலும் விபூதியினாலுஞ் சுத்திபண்ணிப் புசித்தல் வேண்டும்.

**274. போசனஞ் செய்தபின் வாக்குச்சுத்தியின் பொருட்டு யாது செய்தல் வேண்டும்?**
இல்வாழ்வார் தாம்பூலம் ஒருதர மாத்திரம் புசிக்கலாம். துறவிகள் கிராம்பு, ஏலம், கடுக்காய், சுக்கு, வான்மிளகு என்பவைகளுள் இயன்றதொன்றைப் புசித்தல் வேண்டும்.

**275. இராத்திரியில் எத்தனை நாழிகையினுள்ளே புசித்தல் வேண்டும்?**
எட்டு நாழிகையினுள்ளே புசித்தல் உத்தமம். பதினொரு நாழிகையளவேல் மத்திமம். பதினான்கு நாழிகையளவேல் அதமம். அதன்மேற் புசிக்கலாகாது.

**276. போசன காலத்தில் விளக்கவியின் யாது செய்தல் வேண்டும்?**
போசனம் பண்ணாது, அவ்வன்னத்தை வலக்கையினாலே மூடி, விளக்கேற்றி வருமளவும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை மானசமாகச் செபித்துக் கொண்டிருந்து விளக்கேற்றியபின் பானையில் அன்னத்தை இடுவித்துக் கொள்ளாது, அவ்வன்னத்தையே புசித்துக் கொண்டு எழும்பல் வேண்டும்.

**277, எப்படிச் சயனித்தல் வேண்டும்?**
கிழக்கேயாயினும் மேற்கேயாயினுந் தெற்கேயாயினும் தலை வைத்துச் சிவபெருமானைச் சிந்தித்துக்கொண்டு, வலக்கை

மேலாகச் சயனித்தல் வேண்டும். வடக்கே தலை வைத்தலாகாது. வைகறையிலே நித்திரை விட்டெழுந்துவிடல் வேண்டும். சந்தியாகாலத்தில் நித்திரை செய்தவன் அசுத்தன்; அவன் ஒரு கருமத்துக்கும் யோக்கியனாகான்;அவன் தான் செய்த புண்ணியத்தை இழப்பன்;அவன் வீடு சுடுகாட்டுக்குச் சமம்

**278, இரவிலே காலம்பெறச் சயனித்து வைகறையிலே விழித்தெழுந்து விடுதலினாற் பயன் என்னை?**

சூரியன் உதிக்க ஐந்து நாழிகை உண்டென்னுங் காலம் பிராமீ முகூர்த்தம் எனப் பெயர் பெறும். சிவத்தியானத்துக்கு மனந்தெளிவது அக்காலத்தேயாம். அன்றியும், அக்காலத்தில் விழிக்கின் நோய்கள் அணுகாவாம் . இராநித்திரைப் பங்கமும், வைகறை நித்திரையும், பகல் நித்திரையும், பற்பல வியாதிகளுக்குக் காரணம்.

**286, கடவுள் பூசைக்குப் பத்திர புஷ்பங்கள் எடுக்க யோக்கியர் யாவர்?**

நான்கு வருணத்துட் பட்டவராய்ச் சிவதீக்ஷை பெற்றவராய், நியமாசாரமுடையவராய் உள்ளவர்.

**288, கடவுட் பூசைக்கு ஆகாத பூக்கள் எவை?**

எடுத்துவைத் தலர்ந்த பூவும், தானே விழுந்து கிடந்த பூவும், பழம்பூவும், உதிர்ந்த பூவும், அரும்பும், இரவில் எடுத்த பூவும், கை சீலை எருக்கிலை ஆமணக்கிலை என்பவற்றிற் கொண்டு வந்த பூவும், காற்றினடிப்பட்ட பூவும், புழுக்கடி எச்சம் சிலந்திநூல் மயிர் என்பவற்றோடு கூடிய பூவும், மோந்த பூவுமாம். திருக்கோயிலுள்ளும் அதன் சமீபத்தினும் உண்டாகிய பத்திர புஷ்பங்கள் ஆன்மார்த்த பூசைக்கு ஆகாவாம்.

**289 இன்ன இன்ன தேவருக்கு இன்ன இன்ன பத்திரபுஷ்பம் ஆகா என்னும் நியமம் உண்டோ?**

ஆம்; விநாயகருக்குத் துளசியும், சிவபெருமானுக்குத் தாழம்பூவும்,உமாதேவியாருக்கு அறுகும் நெல்லியும், வைரவருக்கு நந்தியாவர்த்தமும், சூரியனுக்கு வில்வமும், விஷ்ணுவுக்கு அக்ஷதையும்,பிராமணருக்குத் தும்பையும் ஆகாவாம்.





**290 வில்வம் எடுக்கலாகாத காலங்கள் எவை?**

திங்கட்கிழமை, சதுர்த்தி, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, அமாவாசி,பௌர்ணிமை, மாசப்பிறப்பு என்பவைகளாம். இவையல்லாத மற்றைக் காலங்களிலே வில்வம் எடுத்து வைத்துக் கொள்ளல் லேண்டும்.

**291. துளசியெடுக்கலாகாத காலங்கள் எவை?**

ஞாயிற்றக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, திருவோண நக்ஷத்திரம், சத்தமி, அட்டமி, துவாதசி, சதுர்த்தசி, அமாவாசி, பௌர்ணிமை, விதிபாதயோகம், மாசப்பிறப்பு, பிராதக்காலம், சாயங்காலம், இராத்திரி என்பவைகளாம்.இவையல்லாத மற்றைக் காலங்களிலே துளசி எடுத்து வைத்துக் கொள்ளல் வேண்டும். இரண்டிலை கீழே உள்ள துளசிக்கதிர் எப்போதும் எடுக்கலாம்.

**292. இன்ன இன்ன பத்திர புஷ்பம் இவ்வளவு இவ்வளவு காலத்துக்கு வைத்துச் சாத்தலாம் என்னும் நியமம் உண்டா?**

ஆம்; வில்வம் ஆறு மாசத்திற்கும், வெண்டுளசி ஒரு வருஷத்திற்கும், தாமரைப்பூ ஏழு நாளிற்கும், அலரிப்பூ மூன்று நாளிற்கும் வைத்துச் சாத்தலாம்.

**293. பத்திர புஷ்பம் எப்படி எடுத்தல் வேண்டும்?**

சூரியோதயத்துக்கு முன்னே ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துச், சந்தியதவந்தன முடித்து, இரண்டு கைகளையுங் கழுவித், திருப்பூங்கூடையை எடுத்து ஒரு தண்டு நுனியிலே மாட்டி உயரப் பிடித்துகொண்டாயினும், அரைக்கு மேலே கையிலே பிடித்துக்கொண்டாயினும் திருநந்தவனத்திற் போய்ச் சிவபெருமானை மறவாத சிந்தையோடு பத்திர புஷ்பமெடுத்து அவைகளை பத்திரத்தினாலே மூடிக் கொண்டு, திரும்பி வந்து கால்களைக் கழுவிக் கொண்டு உள்ளே புகுந்து, திருப்பூங்கூடையைத் தூக்கி விடல் வேண்டும்.

**294, பத்திர புஷ்பம் எடுக்கும் போத செய்யத் தகாத குற்றங்கள் எவை?**

பேசுதல், சிரித்தல், சிவபெருமானுடைய திருவடிகளிலேயன்றிப் பிறவற்றிலே சிந்தை வைத்தல், கொம்புகள் கிளைகளை முறித்தல், கைகளை அரையின் கீழே தொங்க விடுதல், கைகளிலே உடம்பையேனும் வஸ்த்திரத்தையேனும் தீண்டுதல் என்பவைகளாம்.

கொழும்பு தமிழ்

**295. திருமாலை எப்படிக் கட்டல் வேண்டும்?**

திருமாலைக் குறட்டைச் சலத்தினால் அலம்பி இடம் பண்ணித், திருப்பூங்கூடையிலுள்ள பத்திரபுஷ்பங்களை எடுத்து அதில் வைத்துக் கொண்டு, மௌனியாய் இருந்து, சாவதானமாக ஆராய்ந்து, பழுதுள்ளவைகளை அகற்றிவிட்டு, இண்டை, தொடை, கண்ணி பந்து தண்டு முதலிய பல வகைப்பட்ட திருமாலைகளைக் கட்டல் வேண்டும்.

**298. திருவிளக்குத் திரி என்ன நூல் கொண்டு எப்படிப் பண்ணல் வேண்டும்?**

தாமரை நூல், வெள்ளெருக்குநூல், பருத்திநூல், என்பவைகளுள் இருபத்தோ ரிழையாலேனும் பதியாலேனுங் ஏழிழையாலேனுங் னாங்கிழை கர்ப்பூரப்பொடி கூட்டித் திரி பண்ணல் வேண்டும்.

**299. மாவிளக்கு எப்படி இடுதல் வேண்டும்?**

பகலிலே போசனஞ் செய்யாது, சனிப் பிரதோஷத்திலுஞ் சிவராத்திரியினுஞ் செஞ்சம்பாவரிசி மாவினாலே அகல் பண்ணிக் கபிலைநெய் மூன்று நாழியேனும், ஒன்றரை நாழியேனும், முக்கால் நாழியேனும் வார்த்துக்கைப் பெருவிரற் பருமையுடைய வெண்டாமரை நூற்றிரியிட்டுத் திருவிளக்கேற்றல் வேண்டும்.

**300. எந்தத் தோத்திரங்களை எப்படிப் பாடல் வேண்டும்?**

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் அருட்பாக்களை மனங்கசிந்துருக, கண்ணீர் வார, உரோமஞ் சிலிர்ப்பப் பண்ணோடு பாடல் வேண்டும்.

**301. ஆனந்தக் கூத்து எப்படி ஆடல் வேண்டும்?**

உலகத்தார் நகைக்கினும் அதனைப் பாராது, நெஞ்சம் நெக்குருக, கண்ணீர் பொழிய, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, கைகளைக் கொட்டித் தோத்திரங்களைப் பாடிக் கால்களைச் சதிபெற வைத்து, ஆனந்தக் கூத்தாடல் வேண்டும்.

**319. திருக்கோயிலுக்கு எப்படிப் போதல் வேண்டும்?**

ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துச் சந்தியாவந்தன முதலியன முடித்துக் கொண்டு, தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம் முதலியன வைக்கப்பட்ட பாத்திரத்தைத் தாமே எடுத்துக் கொண்டேனும், பிறரால்





எடுப்பித்துக்கொண்டேனும், வாகனாதிகளின்றி நடந்துபோதல் வேண்டும்.

**320. திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே யாது செய்தல் வேண்டும்?**

கால்களைக் கழுவி ஆசமனஞ் செய்து, தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்துச், சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே போதல் வேண்டும்.

**321. திருக்கோயிலுள்ளே போனவுடன் யாது செய்தல் வேண்டும்?**

பலிபீடத்தையுந் துவசத்தம்பத்தையும் இடபதேவரையுங் கும்பிட்டுப், பலிபீடத்துக்கு இப்பால், வடக்கு நோக்கிய சந்நிதியாயினும் மேற்கு நோக்கிய சந்நிதியாயினும் இடப்பக்கத்திலும், கிழக்கு நோக்கிய சந்நிதியாயினும் தெற்கு நோக்கிய சந்நிதியாயினும் வலப்பக்கத்திலும் நின்று, அபிஷேக சமயம் நிவேதன சமயமல்லாத சமயத்திலே, ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், மூன்றுதரமாயினும், ஐந்துதர மாயினும், ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும் பண்ணல் வேண்டும். நமஸ்காரம் ஒருதரம் இருதரம் பண்ணல் குற்றம்.

**322. அட்டாங்க நடஸ்காரமாவது யாது?**

தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டவயமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

**323. இந்த நமஸ்காரம் எப்படிப் பண்ணல் வேண்டும்?**

பூமியிலே சிரசை வைத்து, மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னம் இடக்கையை பின்னும் நேரே நீட்டிப், பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும், இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்கி நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதை பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்தல் வேண்டும்.

**324. பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?**

தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்தவயமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

**325. நமஸ்காரம் பண்ணிய பின் யாது செய்தல் வேண்டும்?**

எழுந்து, இரண்டு கைகளையுங் குவித்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை

உச்சரித்துக் கொண்டு கால்களை மெல்ல வைத்து மூன்றுதரமாயினும் ஐந்துதர மாயினும் ஏழுதரமாயினம் ஒன்பதுதரமாயினும் பதினைந்த தரமாயினும் இருபத்தொரு பிரதஷிணம் பண்ணி, மீட்டுஞ் சந்நிதானத்திலே நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

**326. சுவாமி சந்நிதானங்களை எந்த முறையாகத் தரிசனஞ் செய்தல் வேண்டும்?**

முன்பு துவாரபாலகரை வணங்கி, பின்பு கணநாயகராகிய திருநந்திதேவரை வணங்கித் துதித்து, "பகவானே, உம்முடைய திருவடிகளை அடைந்து அடியேன் உள்ளே புகுந்து சிவெபருமானைத் தரிசித்துப் பயன் பெறும் பொருட்டு அநுமதி செய்தருளும்" என்று பிரார்த்தித்துக் கொண்ட, உள்ளே போய், முன் விக்கினேசுரரைத் தரிசனஞ் செய்து, பின் சிவலிங்கப் பெருமான் சந்நிதியும் உமாதேவியார் சந்நிதியையும்அடைந்து, ஆதிசைவரைக் கொண்டு அருச்சனை செய்வித்துப் பழம் பாக்கு வெற்றிலை முதலியனவற்றை நிவேதிப்பித்துக் கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப்பண்ணித் தரிசனஞ் செய்து விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு, அதன்பின் சபாபதி தஷிணாமூர்த்தி சோமாஸ்கந்தர் சந்திரசேகரர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையுஞ் சமயகுரவர் நால்வரையுந் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

**327. விக்னேசுரரைத் தரிசிக்கும் பொழுது யாது செய்தல் வேண்டும்?**

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்தெழுந்து கும்பிடல் வேண்டும்.

**328, தரிசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?**

பிரதஷிணஞ் செய்து சண்டேசுரர் சந்நிதியை அடைந்து கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து மூன்று முறை கைக்கொட்டிச் சிவதரிசனம் பலத்தைத் தரும்பொருட்டுப் பிரார்த்தித்து வலமாக வந்து இடபதேவருடைய இரண்டு கொம்பி னடுவே சிவலிங்கப் பெருமானைத் தரிசித்துப் பலிபீடத்துக்கு இப்பால் மும்முறை நமஸ்கரித்து எழுந்து இருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை நூறுதரமும் அகோர மந்திரத்தை நூறுதரமும் செபித்துக் கொண்டு எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.





**330. நித்தியமும் நியமமாக ஆலய தரிசனஞ் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும்?**

சோமவாரம், மங்களவாரம், சுக்கிரவாரம், பிரேதாஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயகசட்டி, கந்தசட்டி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

**331. பிரதோஷ காலத்திலே சிவலிங்கப்பெருமானை எப்படி தரிசித்தல் வேண்டும்?**

இடபதேவரை தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரை தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, கோமுகையைக் கடவாது, முன் சென்ற வழியே திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து அங்கு நின்றும் திரும்பி, இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, அங்கு நின்றுந் திரும்பி, வந்து இடப தேவரை தரிசியாது இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, திரும்பி வந்து இடப தேவரை தரிசித்து, அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடுகூட ஹர ஹர என்று சொல்லிச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்கல் வேண்டும்.

**333. திருக்கோவிலிலே செய்யத் தகாத குற்றங்கள் யாவை?**

ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சிலுமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்குநீர் சிந்துதல், பாக்கு வெற்றிலையுண்டல், போசனபானம் பண்ணுதல், ஆசனத் திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக் கொண்டிருத்தல், மயிர் கோதி முடித்தல் , சூதாடல், சிரசிலே வஸ்திரந் தரித்துக் கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக் கொள்ளுதல், போர்த்துக் கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், பாதரக்ஷையிட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுத்தல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி துவசத்தம்பம் பலிபீடம் இடபம் விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல், வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்குங் குறுக்கே போதல், ஒரு தரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒரு தரம் இரு தரம் வலம் வருதல், ஓடி வலம் வருதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையே நமஸ்கரித்தல், அகாலத்திலே தரிசிக்கப்போதல், திரை விட்ட பின் வணங்குதல்,

அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்குதல், முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் வணங்குதல், திருவிளக் கவியக் கண்டுந் தூண்டாதொழிதல், திருவிளக்கில்லாதபொழுது வணங்குதல் உற்சவங் கொண்டருளும் பொழுது அங்கேயன்றி உள்ளே போய் வணங்குதல் முதலியவைகளாம். இக்குற்றங்களுள் ஒன்றை அறியாது செய்தவர் அகோரமந்திரத்தில் ஆயிரம் உருச் செபிக்கின் அக்குற்றம் நீங்கும். இக்குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்.

**337. சிவபத்தர்கள் சிவபெருமான் எனக் கருதப்படுதற்குக் காரணம் என்ன?**

சிவபெருமான் வேறற அதிட்டித்து நிற்கப்பெறுவனவாய்க் கண்டவுடனே சிவபெருமானை நினைப்பிப்பனவாய் உள்ள திருவேடங்களை யுடையமையும், நாடோறும் ஸ்ரீகண்டநியாசம் பஞ்சப்பிரமஷடங்கநியாசம் அஷ்டத்திரிம்சத்கலாநியாசங்கள் வாயிலாகச் செய்யுஞ் சிவோகம் பாவனையும், பிரசதாயோகஞ் செய்தலும்,தம்மில் இரண்டற இயைந்த சிவத்தோடு கலந்து நிற்கும் தன்மையுமாம். சிவபத்தரைச் சிவெமனக் கண்டு வழிபடுவதற்கு, வேடம், பாவனை, செயல், தன்மை என்னும் இந்நான்கனுள் ஒன்றே யமையும்.

**338. சிவனடியாரை வழிபடாது சிவலிங்கத்தை மாத்திரம் வழிபடலாகாதா?**

ஒருவன் ஒரு பெண்ணிடத்து அன்புடைமை அவளுடைய சுற்றத்தரைக் கண்டபொழுது அவனுக்கு உண்டாகும் அன்பினளவு பற்றியே தெளியப்படும். அது போல, ஒருவன் சிவபெருமானிடத்து அன்புடைமை அவருடைய அடியாரைக் கண்டபொழுது அவனுக்கு உண்டாகும் அன்பினளவு பற்றியே தெளியப்படும். ஆதலினாலே சிவனடியாரிடத்து அன்பு செய்யாது அவமானஞ் செய்து விட்டுச் சிவலிங்கப்பெருமானிடத்தே அன்புடையவர் போல் ஒழுகுதல், வயிறு வளர்ப்பின் பொருட்டும் இடம்பத்தின் பொருட்டும் நடித்துக் காட்டும் நாடகமாத்திரையேயன்றி வேறில்லை.

**339. சிவபக்தர்களோடு இணங்குதலாற் பயன் என்ன?**

காமப்பற்றுடையவருக்கு, அச்சம்பந்த முடையவருடைய இணக்கம் அக்காமத்தை வளர்த்தலால் அவ்விணக்கத்தில் விருப்பு மிகுதியும், அவரல்லாத பிறருடைய இணக்கம் அக்காமத்தைக் கெடுத்தலால் அவ்விணக்கத்தில் வெறுப்பு மிகுதியும் உண்டாகும். அது





போல சிவபத்தி யுடையவருக்கு, அச்சம்பந்தமுடையவருடைய இணக்கம் அச்சிவபத்தியை வளர்த்தலால் அவ்விணக்கத்தில் விருப்பு மிகுதியும், அவரல்லாத பிறருடைய இணக்கம் அச்சிவபத்தியைக் கெடுத்தலால் அவ்விணக்கத்தில் வெறுப்பு மிகுதியும் உண்டாகும்.

**348. ஒருவர் தம்மைப் பிறர் வணங்கும் வணக்கத்தை எப்படிப் புத்தி பண்ணல் வேண்டும்?**

"இவ்வணக்கம் நமக்கன்று , நம்மிடத்து வேறற நிற்குஞ் சிவெபருமானுக்கேயாம்" என்று புத்தி பண்ணல் வேண்டும். அப்படிச் செய்யாதவர் சிவத்திரவியத்தைக் கவர்ந்தவராவர்.

**349. குருவுக்குஞ் சிவனடியாருக்குஞ் செய்யத் தகாத குற்றங்கள் யாவை?**

கண்டவுடன் இருக்கைவிட்டெழாமை, அவர் எழும் பொழுது உடனெழாமை, அவர் திருமுன்னே உயர்ந்த ஆசனத்திலிருத்தல், காலை நீட்டிக் கொண்டிருத்தல், சயனித்துக் கொள்ளுதல், வெற்றிலைப் பாக்கு புசித்தல், போர்த்துக் கொள்ளுதல், பாதுகையோடு செல்லல், சிரித்தல், வாகனமேறிச் செல்லல், அவராலே தரப்படுவதை ஒரு கையால் வாங்குதல், அவருக்குக் கொடுக்கப்படுவதை ஒரு கையாற் கொடுத்தல், அவருக்கு புறங்காட்டல், அவர் பேசும் போது பராமுகஞ் செய்தல், அவர் கோபிக்கும் போது தாமுங் கோபித்தல், அவருடைய ஆசனம், சயனம், வஸ்திரம், குடை, பாதுகை முதலியவைகளைத் தாம் உபயோகித்தல், அவைகளைத் தங் காலினாலே தீண்டுதல், அவர் திருநாமத்தை மகிமைப் பொருள்படும் அடைமொழியின்றி வாளாச்சொல்லல், அவரை யாராயினும் நிந்திக்கும் பொழுது காதுகளைப் பொத்திக் கொண்டு அவ்விடத்தினின்று நீங்கிவிடாது கேட்டுக் கொண்டிருத்தல் முதலியவைகளாம்.

**350. குரு முன்னுஞ் சிவனடியார் முன்னும் எப்படி விண்ணப்பஞ் செய்தல் வேண்டும் ?**

வஸ்திரத்தை ஒதுக்கிச் சரீரத்தைச் சற்றே வளைத்து வாய்புதைத்து நின்று, அவரை "சுவாமி" என்பது முதலிய சொற்களினாலே உயர்த்தியும், தன்னை "அடியேன்" என்பது முதலிய சொற்களினாலே தாழ்த்தியும், மெல்ல விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

**356. சிவசாத்திரம் படிக்கலாகாத காலங்கள் எவை?**
பிரதமை, அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, உத்தராயணம், தக்ஷிணாயனம், சித்திரைவிஷு, ஐப்பசிவிஷு, சந்தியாகாலம், ஆசௌசகாலம், மகோற்சவ காலம் என்பவைகளாகும்.

**369. மாகேசுரபூசைக்கு விலக்கப்பட்ட பதார்த்தங்கள் யாவை?**
உள்ளி, வெள்ளுள்ளி, உருண்டைசுரைக்காய், கொம்மடிக்காய், செம்முருங்கைக்காய், தேற்றாங்காய், அத்திக்காய், வெண்கத்தரிக்காய், பசளை, வள்ளி, கொவ்வை என்பவைகளாம்.

**370. மாகேசுரபூசை எப்படிச் செய்தல் வேண்டும்?**
மாகேசுரர்களை தூரத்தே கண்டவுடனே சிரசின் மீது அஞ்சலி செய்து, விரைந்தெதிர் கொண்டு அழைத்து வந்து, அவர்களுடைய திருவடிகளைத் தீர்த்தத்தினால் விளக்கி, அத்தீர்த்தத்தைச் சிரமேற் றெளித்து, அவர்களைப் பந்தியாக இருத்தி, ஓதுவார்கள் தேவாரம் பண்ணுடன் ஓத, அன்னங் கறி முதலியவற்றைப் படைத்து, பத்திரபுஷ்பங்களால் அருச்சனை செய்து, தூபதீபங் கொடுத்து, அவர்களெதிரே பூக்களைத் தூவி நமஸ்காரம் பண்ணி, எழுந்து நின்று, ஆசீர்வாதம் முற்றிய பின் திருவமுது செய்வித்தல் வேண்டும். அவர்கள் திருவமுது செய்து கரசுத்தி செய்து கொண்ட பின், அவர்களெதிரே இயன்ற தக்ஷிணை வைத்து நமஸ்காரஞ் செய்து, விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு, மீட்டும் நமஸ்காரஞ் செய்து, சேஷம் புசித்தல் வேண்டும்.

**376. மாகேசுர பூசை ஆவசியமாக எவ்வெக் காலங்களிலே செய்தல் வேண்டும்?**
தீக்ஷை பெற்றுக் கொண்ட பொழுதும், சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்துக் கொண்ட பொழுதும், விரதம் அநுட்டிக்கும் பொழுதும், உபவாசஞ் செய்து பாரணம் பண்ணும் பொழுதும், சிவசாத்திர சிவபுராணங்கள் படிக்க தொடங்கிய பொழுதும், படித்து முடித்த பொழுதும், புண்ணியஸ்தல யாத்திரைக்குப் புறப்படும் பொழுதும், புண்ணியஸ்தலத்தை அடைந்த பொழுதும், யாத்திரை செய்து திரும்பி வீடு சேர்ந்த பொழுதும், திருக்கோயிலிலே பிரதிட்டை சம்புரோக்ஷணம் மகோற்சவம் முதலியவை நடக்கும் பொழுதும், வியாதியினாலே பீடிக்கப்பட்டு மருந்து உட்கொள்ளத் தொடங்கும் பொழுதும், வியாதி நீங்கிய பொழுதும், மாகேஸ்வர பூசை ஆவசியமாகச் செய்தல் வேண்டும்.





**377. அவ்விசேஷ தினங்களில் மாகேசுரபூசை செய்பவர்களும் மாகேசுரபூசையிலே அருச்சனை யேற்று அமுது செய்யப் புகும் மாகேசுரர்களும் அத்தினத்திலே எப்படிப் பட்டவர்களாய் இருத்தல் வேண்டும்?**
மாகேசுரபூசைக்கு முன்னே யாதொன்றும் புசிக்கலாகாது. அன்றிரவிலே பசித்ததாயின் அன்னம் புசியாது பால் பழ முதலியவற்றுள் இயன்றது உட்கொண்டு, சுத்தர்களாகிச் சிவபெருமானையே சிந்தித்துக் கொண்டு நித்திரை செய்தல் வேண்டும். முதனாளிராத்திரியும் அப்படியே செய்தல் வேண்டும்.

**379. விரதமாவது யாது?**
மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலுங் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதல்.

**410. அன்பாவது யாது?**
ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையவராய்த் தமக்கு இனியவராய் உள்ளவரிடத்தே நிகழும் உள்ள நெகிழ்ச்சியாம்.

**411. உள்ளபடி ஆராயுமிடத்து நம்மோடு தொடர்ப்புடையவராய் நமக்கு இனியவராய் உள்ளவர் யாவர்?**
அநாதியே மலத்தினாலே மறைக்கப்பட்டுள்ள அறிவுந் தொழிலும் உடையவர்களாய்த் தம்வயத்தரவல்லாதவர்களாய் உள்ள பசுக்களாகிய நம்மோடு அநாதியே இரண்டறக் கலந்து நின்று, நமக்கெல்லாம் நித்தியானந்தப் பெருஞ் செல்வத்தைத் தந்தருள விரும்பி, தந்தொழில்களெல்லாந் தம்பயன் சிறிதும் குறியாது நம்பயன் குறித்த தொழில்களாகவே கொண்டு, பெத்த நிலையிலே தாம் நம்முள்ளே மறைந்து நமக்குப் பின்னாகியும், முத்தி நிலையிலே நம்மைத் தம்முள்ளே அடக்கித் தாம் நமக்கு முன்னாகியும், இப்படியே என்றும் உபகரிக்கும் இயல்புடைய பெருங் கருணைக் கடலாகிய பசுபதி சிவபெருமான் ஒருவரே; ஆதலினால், அவரொருவரே நம்மோடு என்றுந் தொடர்புடையவராய், நமக்கு நம்மினும் இனியவராய் உள்ளவர்; அவருக்கே நாமெல்லாம் உடைமைப் பொருள்; அவருக்கே நாமெல்லாம் மீளா அடிமை; ஆதலினால், அவரிடத்திற்றானே நாமெல்லாம் அன்பு செய்தல் வேண்டும்.

**415. சிவபெருமான் இம்மனித சரீரத்தை எதன் பொருட்டுத் தந்தருளினார்?**
தம்மை மனசினாலே சிந்திக்கவும், நாவினாலே துதிக்கவும், தம்மால் அதிட்டிக்கப்படும் குரு லிங்க சங்கமம் என்னும் மூவகைத் திருமேனியையுங் கண்களினாலே தரிசிக்கவும், கைகளினாலே பூசிக்கவும் கும்பிடவும், தலையினாலே வணங்கவும், கால்களினாலே வலஞ்செய்யவும், தமது பெருமையையுந் தமது சிவனடியார் பெருமையையும் காதுகளினாலே கேட்கவுமே இம்மனித சரீரத்தைத் தந்தருளினார்.

**416. இல்வாழ்க்கை முதலியவைகளிற் புகுந்து அவ்வவைகளுக்கு வேண்டுந் தொழில்கள் செய்வோருக்கு இடையறாத வழிபாடு எப்படிக் கூடும்? அவர் யாது செய்வார்?**
கழைக்கூத்தன் கூத்தாடும் பொழுதும் அவன் கருத்துஉடற்ளாப்பிலே வைக்கப்பட்டிருத்தல் போல, நாம் லௌகிக கருமஞ் செய்யும் பொழும் நமது கருத்துச் சிவபெருமானிடத்தே வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இப்படிச் செய்யாதொழியின், மரண காலத்திலே சிவத்தியானஞ் சித்திப்பது அரிதரிது.

**417. சிவபெருமானை வழிபடுவோர் மரிக்கும் பொழுது யாது செய்தல் வேண்டும்?**
சுற்றத்தாரிடத்தும் பொருளினிடத்துஞ் சற்றாயினும் பற்று வையாது, சுற்றத்தாரைத் தூரத்தே இருத்தி விட்டு, தாம்விபூதி தரித்து, மனங்கசிந்துருகக் கண்ணீர் பொழிய உரோமஞ் சிலிர்ப்பச் சிவெபருமானைத் தியானித்து, வேத சிவாகமங்களையேனும் தேவார திருவாசகங்களையேனும் சிவபத்தர்கள் ஓதக்கேட்டல் வேண்டும்.

**418. அவர் மரிக்கும் பொழுது யாது செய்தல் வேண்டும்?**
அவருடைய புத்திரர் முதலானவர்களுள்ளே சிவதீஷையுடையவர், மனம் ஒரு சிறிதுங் கலங்காது, அவர் நெற்றியிலே சிதம்பர முதலிய புண்ணிய ஸ்தலத்து விபூதி சாத்தி, அவருடம்பிலே வில்வத்தடி மண் பூசி, அவர் வாயிலே கங்கா தீர்த்தம் விட்டு, அவர் தலையைத் தமது மடிமீது கிடத்தி, அவர் செவியிலே அருமருந்தாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்





# அபிடேகப் பலன்கள்

சிவபெருமானக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் நிகழ்த்துப் பெறும் அபிடேகங்களால் வரும் இம்மை மறுமைப் பயன்கள் மிகப் பலவாம். முன்னோர்கள் அனுபவ பூர்வமாகக் கண்டு தெளிந்த அபிடேகப் பலன்கள் கீழ்வருமாறு

1. பால் – நீண்ட ஆயுள் அமையும்
2. தயிர் – நன்மக்கட்பேறு வாய்க்கும்
3. நெய் – வீடுபேறு நல்கும்
4. தேன் – குரல் இனிமை உண்டாகும்
5. பஞ்சாமிர்தம் – உடல் வலிமை தரும்
6. இளநீர் – போகம் வழங்கும்
7. எலுமிச்சம்பழம் – பகையை அழிக்கும்
8. கரும்பின் சாறு – நோய் தீர்க்கும்
9. திருமஞ்சனப்பொடி – கடன், நோய் தீர்க்கும்
10. சந்தனத் தைலம் – சுகம் தரும்
11. திருநீறு – போகம், மோட்சம் நல்கும்
12. பன்னீர் கலந்த சந்தனக் குழம்பு – திருமகள் கடாட்சம் உண்டாகும்
13. சொர்ணாபிஷேகம் – வியாபாரலாபம் தரும்
14. வலம்புரிச்சங்கம் – தீவினை நீங்கி நல்வினை நல்கும்.
15. கலசாபிடேகம் – நினைத்தவை நடக்கும்.

# திருமுறைத் தலங்கள்

## (பாடல் பெற்ற சிவாலயங்கள் மட்டும்)

"கடல்கண்டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார் என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடுதல் போல எல்லையற்ற பெருமைமிக்க தமிழகத்துத் திருத்தலங்களின் பெருமைகளை யெல்லாம், முற்றமுடிவுற எடுத்துச் சொல்லுவது, எவருக்கும் இயல்வது ஒன்றன்று. எனவே நாம் அனைவரும் நம்முடைய குறுகிய சிறிய வாழ்நாளில் பொன்னும் பொருளும் போகமும் பிறவுமே தேடி அலைந்துழலாமல், அவற்றிற்கு இடையிலேனும் இயன்ற பொழுதெல்லாம் தலயாத்திரையும் வழிபாடும் செய்வதற்குரிய வாய்ப்பு வசதிகளை, எவ்வாற்றானும் தேடி முயன்று அமைத்துக்கொண்டு இறைவனை வழிபடல் வேண்டும்."

"மூர்த்தி தலம் தீர்த்தம்
முறையாய்த் தொடங்கினர்க்கு ஓர்
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே"

தாயுமானவர்.

1. **திருக்கச்சி ஏகம்பம் (காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில்)**
செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் நகரத்தின் மையத்திலுள்ளது. இது பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்று. தேவியார் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட இறைவன் ஆற்றில் வெள்ளம் வருமாறு செய்ய தேவி இலிங்கத்தை தழுவி காத்தார் என்பது வரலாறு. (செங்கற்பட்டு மாவட்டம்)

2. **திருக்கச்சி மேற்றளி (திருமேற்றளீஸ்வரர் திருக்கோயில்)**
காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையத்தில் இத்தலம் உள்ளது. காஞ்சிபுரத்திலுள்ள திருமுறைத் தலங்கள் ஐந்தினுள் இதுவும் ஒன்று. திருமால் தவமிருந்து சிவசாருபம் பெற்றதாக வரலாறு. (செங்கற்பட்டு மாவட்டம்)





3. **ஓணகாந்தன்தளி (ஓணேஸ்வரர் காந்தேஸ்வரர் திருக்கோயில்)**
காஞ்சிபுரம், அரக்கோணம் பேருந்து பாதையிலுள்ள பஞ்சுப்பேட்டையில் இத்தலம் உள்ளது.
வாணாசுரனுடைய சேனாதிபதிகளான ஓணன், காந்தன் எனுமிருவர் வழிபட்ட தலம். சுந்தரர் பதிகம் பாடி இறைவனிடமிருந்து புளியங்காய்களை பொன்காய்களாக பெற்றார்.(செங்கற்பட்டு மாவட்டம்)

4. **கச்சி அனேகதங்காவதம் (அனேகதங்காதேஸ்வரர் திருக்கோயில்)**
காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து புத்தேரித் தெரு வழியாகக் கயிலாயநாதர் கோயில் அண்மையில் வயல் வெளியில் உள்ளது.
விநாயகர் சிவலிங்க திருமேனியை நிறுவி வழிபட்ட தலம். சுந்தரர் பாடல் பெற்றது.(செங்கற்பட்டு மாவட்டம்)

5. **கச்சிநெறிக் கரைக்காடு (திருக்காலிமேடு, திருகாலீஸ்வரர் திருக்கோயில்)**
காஞ்சிபுரம் தலைமை அஞ்சல் நிலையத்திற்கு எதிரிலுள்ள திருக்காலி மேட்டுப் பாதையில் உள்ளது.
இந்திரனும் புதனும் வழிபட்ட, சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.(செங்கற்பட்டு மாவட்டம்)

6. **குரங்கணில்முட்டம் (வாலீஸ்வரர் கொய்யாமலைநாதர் திருக்கோயில்)**
காஞ்சிபுரம், வந்தவாசி பாதையில் பாலாற்றைத் தாண்டி தூசி என்னும் கிராமத்திலிருந்து 2 கி.மீ தொலைவில் உள்ளது.
வாலி குரங்கு வடிவிலும், இந்திரன் அணில் வடிவிலும் எமன் முட்டம் (காகம்) வடிவிலும் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (வடஆற்காடு மாவட்டம்)

7. **மாகறல் (திருமாகறலீஸ்வரர் திருக்கோயில்)**
காஞ்சிபுரம் உத்திரமேரூர் (வழி) ஒரிக்கை பேருந்துப் பாதையில் செய்யாற்றின் கரையில் உள்ளது.
இராசேந்திர சோழனுக்கு பொன்உடும்பாகத் தோன்றி, அவன் துரத்த, புற்றில் ஓடி ஒளிந்து பின் சிவலிங்க வடிவமாக வழிபட்ட தலம். சம்பந்தரின் வினை தீர்க்கும் பதிகம் பாடப் பெற்ற தலம். (செங்கற்பட்டு மாவட்டம்)

**8. திரு வோத்தூர் (திரு வத்திபுரம் வேதபுரீஸ்வரர் திருக்கோயில்)**
காஞ்சியிலுள்ள செய்யாற்றுப் பகுதியில் ஆற்றங்கரையில் உள்ளது. சம்பந்தர் பாடல் பெற்றது. ஆண் பனை பெண் பனையான தலம். (வட ஆற்காடு மாவட்டம்)

**9. வன்பார்த்தான் பனங்காட்டூர் (திருப்பனங்காடு தாலபுரீஸ்வரர், கிருபாநாதேஸ்வரர் திருக்கோயில்)**
காஞ்சி-பெருங்கட்டூர் பாதையில் திருப்பனங்காடு கூரோடில் 2 கி.மீ. தொலைவிலுள்ளது.
சுந்தரர் பாடல் பெற்றது. அகஸ்தியர் பூசித்தபோது இறைவன் சடாமுடியிலுள்ள கங்கை தீர்த்தமாக வெளிப்பட்டது. (வடஆற்காடு மாவட்டம்)

**10. திருவல்லம் (திருவலம் வில்வநாதீஸ்வரர், வல்லநாதர் திருக்கோயில்)**
வடாற்காடு மாவட்டம், ஆற்காட்டிலிருந்து ராணிப்பேட்டை வழியாகக் காட்பாடி செல்லும் பாதையில் உள்ளது. வில்வகாட்டிலிருந்த பாம்பு புற்றிற்கு பசு நாள்தோறும் பாலைச் சொரிந்து வழிபட்டது. அதனால் புற்று கரைந்து சிவலிங்கம் தோன்றியது. சம்பந்தர் தேவாரம், அருணகிரிநாதர் திருப்புகழ் பாடல் பெற்றது.(வட ஆற்காடு)

**11. திருமாற்பேறு (திருமால்பூர் மணிகண்டேஸ்வரர் திருக்கோயில்)**
அரக்கோணம், காஞ்சிபுரம் இரும்புப் பாதையில் இத்தலம் உள்ளது. திருமால்பூர் நிலையத்திலிருந்து 5 கி.மீ. உள்ளே செல்ல வேண்டும்.
திருமால் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு இறைவனை அர்ச்சித்து வழிபட்டார், ஒருநாள் மலர் ஒன்று குறைய தன் கண்ணையே பறித்து மலராக இட்டு அர்ச்சித்து பேறு பெற்ற தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம். (வடஆற்காடு மாவட்டம்)

**12. திருவூறல்(தக்கோலம், ஜலநாதீஸ்வரர் திருக்கோயில்)**
சென்னையிலிருந்தும், காஞ்சிபுரத்திலிருந்தும் பேருந்து வசதி உண்டு. ஊருக்குப் பக்கத்தில் கல்லாறு ஓடுகிறது.
தக்கன் தலையைக் கொய்த தலம். தனக்கு அழிவு வரும் நிலையைக் கண்டு ஓலமிட்டதால் தக்கோலம் எனப் பெற்றது. சம்பந்தர் பாடல் பெற்றது. (வடஆற்காடு மாவட்டம்)





**13. இலம்மையங் கோட்டூர் (எலுமியன் கோட்டூர் அரம்பேஸ்வரர் திருக்கோயில்)**
சென்னையிலிருந்தும், காஞ்சியிலிருந்தும் செல்லம்பட்டிடை செல்லும் நகரப் பேருந்தில் சென்றால் அங்கிருந்து 1 கி.மீ. தொலைவிலுள்ளது.
அரம்பர் முதலானோர் வழிபட்ட தலம்.சம்பந்தருக்கு இறைவன் சிறுபிள்ளை போலவும், பின் முதியவர் போலவும் வழிமறித்த பின்பும் கோயிலை உணராத போது வெள்ளைப் பசு வடிவங்கொண்டு கோயிலை நோக்கிச் சென்று மறைந்தபோது சம்பந்தர் வியந்து பாடிய தலம். (செங்கற்பட்டு மாவட்டம்)

**14. திருவிற்கோலம் (திரிபுராந்தகேஸ்வரர் திருக்கோயில்)**
காஞ்சியிலிருந்து சுங்குவார் சத்திரம் வழியாகத் திருவள்ளூர் செல்லும் பாதையில் கூவம் கூட்ரோட்டிலிருந்து 1 கி.மீ. தொலைவிலுள்ளது.
திருவாலங்காடு நடராசருடன் நடனமாட சிலம்பு முத்துகள் வீழ்ந்த இடம். சம்பந்தர் பாடல் பெற்றது. (செங்கற்பட்டு மாவட்டம்)

**15. திருவாலங்காடு (வடாரண்யேசுவரர் திருக்கோயில்)**
சென்னையிலிருந்து திருவள்ளூர் வழியாக அரக்கோணம் பேருந்துப் பாதையில் இத்தலம் உள்ளது.
இறைவன் காளியுடன் நடனமாடிய தலம். காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து வந்து இறைவனை வழிபட்ட தலம். மூவர் பாடல் பெற்றது.( செங்கற்பட்டு மாவட்டம்)

**16. திருப்பாசூர் (திருப்பாச்சூர் வாசீஸ்வரர் திருக்கோயில்)**
சென்னை-திருத்தணி பேருந்துச் சாலையில் கடம்பத்தூர் சாலை பிரியுமிடத்தில் இத்தலம் உள்ளது.
பசுவொன்று மூங்கில்புற்றில் பால் சொரிய வேடுவர்கள் அப்பசுவை வெட்டிப் பார்க்க சிவலிங்கம் வெளிப்படலாயிற்று. கரிகாலன் இக்கோயிலை கட்டியதாக வரலாறு. திருமால், அம்பாள் இறைவனை வழிபட்டு வினை தீர்த்த தலம். சம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது.(செங்கற்பட்டு மாவட்டம்)

**17. திருவெண்பாக்கம் (பூண்டி நீர்த்தேக்கம் ஊன்றீஸ்வரர் திருக்கோயில்)**
திருவள்ளூரிலிருந்து செல்ல பேருந்து வசதியுள்ளது. பழைய கோயில் திருவிளம்புதூரிலுள்ளது.

சுந்தரருக்கு ஊன்றுகோலை இறைவன் தந்தருளிய தலம். 11ம் நூற்றாண்டைச் சேர்ந்தது இக்கோயில்.(செங்கற்பட்டு மாவட்டம்)

**18. திருக்கள்ளில் (திருக்கள்ளம் திருக்கண்டலம் சிவானந்தேஸ்வரர் திருக்கோயில்)**
சென்னை - பெரிய பாளையம் பேருந்துச் சாலையில் கன்னிப்புத்தூரை அடைந்து அங்கிருந்து 2 கி.மீ. தொலைவிலுள்ளது. (வெங்கல் கிராமத்திற்கும் கன்னிப்புத்தூருக்கும் அண்மையிலுள்ளது)
பிருகு முனிவர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (செங்கற்பட்டு மாவட்டம்)

**19. திருக்காளத்தி (காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயில்)**
திருப்பதியிலிருந்து 40 கி.மீ. தொலைவிலும், சென்னையிலிருந்து 110 கி.மீ. தொலைவிலுமுள்ளது.
பஞ்சபூத தலங்களிலொன்று. கண்ணப்பர் தொண்டாற்றி பேறு பெற்ற தலம். நால்வரால் பாடல் பெற்ற தலம். (சித்தூர் மாவட்டம் - ஆந்திரா)

**20. திருவொற்றியூர் (தியாகராஜசுவாமி திருக்கோயில்)**
சென்னை உயர்நீதிமன்ற பகுதியிலிருந்து பேருந்தில் ஏறி தேரடி நிறுத்தத்தில் இறங்கி கோயிலை அடையலாம்.
சுந்தரர் சங்கிலியாரை மணம்புரிந்த தலம். கலியநாயகனாரின் அவதாரத்தலம். பட்டினத்தது அடிகள் முத்தி பெற்ற தலம். மூவர் பாடல் பெற்ற தலம். (சென்னை மாவட்டம்)

**21. திருவலிதாயம் (பாடி வல்லீஸ்வரசுவாமி திருக்கோயில்)**
இக்கோயில் சென்னை- ஆவடிச்சாலையில் பாடி உள்ளது.

இராமர், ஆஞ்சனேயர், சூரியன் சந்திரன் முதலானோர் இறைவனை வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.(சென்னை மாவட்டம்)

**22. வட திரு முல்லைவாயில் (மாசிலாமணிஸ்வரர் திருக்கோயில்)**
பூந்தமல்லியிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேற்டைக்குச் செல்லும் பேருந்தில் சென்றால்ஆவடியை அடுத்து இத்தலத்தை அடையலாம்.
இத்தலம் கிருதயுகத்தில் இரத்தினபுரமாகவும் திரேயுதாயுகத்தில் வில்வவனமாகவும், துவாபரயுகத்தில் சண்பக வனமாகவும்,





கலியுகத்தில் முல்லைவனமாகவும் விளங்குகின்றது. சுந்தரரால் பாடல் பெற்றது. (செங்கற்பட்டு மாவட்டம்)

**23. திருவேற்காடு (வேதபுரீஸ்வரர் திருக்கோயில்)**
சென்னையிலிருந்து திருவேற்காட்டிற்கு பேருந்துகள் உள்ளன. கருமாரி அம்மன் கோயிலிலிருந்து 1கி.மீ. தொலைவில் இத்தலமுள்ளது.
அகத்தியருக்கு இறைவன் திருமணக் கோலக் காட்சி அருளிய தலம். நான்கு வேதங்களும் வழிபட்ட தலமிது. சம்பந்தரால்பாடல் பெற்றது. (செங்கற்பட்டு மாவட்டம்)

**24. மயிலாப்பூர் (கபாலீஸ்வரர் திருக்கோயில்)**
சென்னை நகரின் மையத்தில் இது அமைந்துள்ளது.
அம்பாள் மயில் வடிவங்கொண்டு வழிபட்ட தலம். வாயிலார் நாயனார் அவதரித்த தலம். சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கிய தலம். சம்பந்தரால் பாடல் பெற்றது. (சென்னை மாவட்டம்)

**25. திருவான்மியூர் (மருந்தீஸ்வரர் திருக்கோயில்)**
சென்னை நகரின் தென் கடைசிப் பகுதி.
வான்மீகி முனிவருக்கு இறைவன் நடனக் காட்சியருளிய தலம். காமதேனு பால் சொரிந்து வழிபட்ட சிறப்புடையது. அகத்தியருக்கு மூலிகைகளைப் பற்றி இறைவன் உபதேசித்தருளிய சிறப்புத் தலம். சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடல் பெற்றது. (சென்னை மாவட்டம்)

**26. திருக்கச்சூர் (கச்சபேஸ்வரர் திருக்கோயில்) (விருத்திட்ட ஈஸ்வரர்)**
சென்னைக்குப் பக்கத்திலுள்ள சிங்கப்பெருமாள் கோயிலிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் செல்லும் பேருந்துச் சாலையில் 1 1/2 கி.மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம்.
அந்தணர் வேடத்தில் வந்த இறைவன் சுந்தரரின் பசியைத் தீர்த்த தலம். திருமால் கச்சப வடிவில் (ஆமை) இருந்து இறைவனை வழிபட்ட தலம். சண்டேஸ்வரர் 4 முகத்துடன் காட்சி தரும் தலமிது. சுந்தரர் பாடல் பெற்றது. (செங்கற்பட்டு மாவட்டம்)

**27. திருஇடைச்சுரம் (திருவடிசூலம் ஞானபுரீஸ்வரர் திருக்கோயில்)**
செங்கற்பட்டிலிருந்து திருப்போரூர் செல்லும் பேருந்தில் ஏறி

திருவடிசூலம் சாலை நிறுத்தத்தில் இறங்கி 1 கி.மீ உள்ளே சென்றால் அடையலாம்.
கௌதம ரிஷியும், சனற்குமாரரும் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.(செங்கற்பட்டு மாவட்டம்)

28. **திருக்கழுக்குன்றம் (வேதகிரீஸ்வரர் திருக்கோயில்)**
செங்கற்பட்டிலிருந்து 14 கி.மீ. தொலைவிலுள்ளது.
மார்க்கண்டேயர் வழிபட்ட தலம். மூவர் பாடல்பெற்ற தலம். மாணிக்க வாசகருக்கு இறைவன் குருவடிவாய் காட்சி தந்த தலம்.(செங்கற்பட்டு மாவட்டம்)

29. **அச்சிறுபாக்கம் (அச்சரபாக்கம் ஆட்சீஸ்வரர் திருக்கோயில்)**
சென்னை - விழுப்புரம் பேருந்துச் சாலையில் மதுராந்தகத்தை அடுத்து இவ்வூர் உள்ளது.
விநாயகரை வணங்காது திரிபுரம் எரிக்கச் சென்ற இறைவனுடைய தேர் அச்சு முறிந்த இடம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். (செங்கற்பட்டு மாவட்டம்)

30. **திருவக்கரை (சந்திரசேகரேஸ்வரர் திருக்கோயில்)**
திண்டிவனம் -மயிலம் - வானூர் வழியாக பாண்டிச்சேரி செல்லும் பாதையில் சென்று பெரும்பாக்கம் எனுமிடத்திலிருந்து 7 கி.மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம்.
வக்கிரன் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தென் ஆற்காடு மாவட்டம்)

31. **திரு அரசிலி (ஒழிந்தியாப்பட்டு அரசலீஸ்வரர் திருக்கோயில்)**
திண்டிவனம்- பாண்டிச்சேரி (வழி) கிளியனூர் சாலையில் இடப்புறமாகப் பிரியும் கிளைப் பாதையில் 2 கி.மீ. சென்று இத்தலத்தை அடையலாம்.
சாளுவ மன்னனால் கட்டப்பட்டது. வாமதேவ முனிவர் வழிபட்டு பிரேதாஷ நாளில் பேறுபெற்றார். பிரேதாஷ வழிபாடு இத்தலத்தில் மிகவும் சிறப்புடையது. சம்பந்தர் பாடல் பெற்றது.(தென் ஆற்காடு மாவட்டம்)

32. **திரு இரும்பை மாகாளம் (இரும்பை மகாகாளேஸ்வரர் திருக்கோயில்)**
திண்டிவனம்-பாண்டிச்சேரி (வழி) கிளியனூர் சாலையில் திருச்சிற்றம்பலம் கூட் ரோடினைத் தாண்டி மேலும் சிறிது தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம்.





மகாகாளர் வழிபட்ட தலம். இங்கு சிவலிங்கத்தின் மேற்புறம் மூன்று பிளவுகளாக வெடித்து இவற்றில் ஒரு பிளவு வெளியில் விழுந்த விட்டதால் அந்த இடம் வழித்தெடுத்தாற் போலவுள்ளது. சம்பந்தர் பாடல் பெற்றது. (தென் ஆற்காடு மாவட்டம்)

33. **திருநெல்வாயில் அரத்துறை (திருவட்டுறை அனந்தீஸ்வரர், அரத்துறைநாதர் திருக்கோயில்)**
தொழுதூர்-விருத்தாச்சலம் பேருந்துச் சாலையில் தொழுதூரிலிருந்து 20 கி.மீ. தொலைவிலுள்ளது.
சம்பந்தருக்கு இறைவன் முத்துச் சிவிகையும், முத்துக்குடையும் சின்னங்களும் அருளினார். வான்மீகி முனிவர், வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.(தென் ஆற்காடு மாவட்டம்)

34. **பெண்ணாகடம் (பெண்ணாடம் பிரளயகாலேஸ்வரர் திருக்கோயில்)**
விருத்தாசலத்திலிருந்து திட்டக்குடி செல்லும் பாதையில் விருத்தாசலத்திலிருந்து 17 கி.மீ. தொலைவிலுள்ள தலம்.
தேவ கன்னியரும், காமதேனுவும், வெள்ளையானையும் வழிபட்ட தலம்.அப்பர் சூல இடபக் குறி பொறிக்குமாறு வேண்டிப் பெற்ற தலம். கலிக்கம்ப நாயனார் பேறு பெற்ற தலம். மெய்கண்டாரின் அவதாரத் தலம். சம்பந்தர், அப்பர் ஆகியோரின் பாடல் பெற்றது. (தென் ஆற்காடு மாவட்டம்)

35. **திருக்கூடலையாற்றூர் (நர்த்தனவல்லபேஸ்வரர் - நெறிகாட்டுநாதர் கோயில்)**
சேத்தியா தோப்பு-கும்பகோணம் பாதையில் குமாரகுடி வந்து ஸ்ரீமுஷ்ணம் பாதையில் பிரிந்து 2 கி.மீ. சென்று காவாலகுடி சாலையில் திரும்பி 2 கி.மீ. சென்று இத்தலத்தினை அடையலாம்.
சுந்தரருக்கு இறைவன் அந்தணர் வடிவில் வழிகாட்டிய தலமிது. பிரமனுக்கு இறைவன் நர்த்தனம் செய்து காட்டிய தலமிது. சுந்தரர் பாடல் பெற்றது.(தென் ஆற்காடு மாவட்டம்)

36. **திரு எருக்கத்தம்புலியூர் (ராஜேந்திரப்பட்டணம் நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்)**
விருத்தாசலம்-ஜயங்கொண்டம் பேருந்துச் சாலையிலுள்ள தலம். உருத்திரசன்மர் சிவனை வழிபட்டு ஊமை நீங்கப்பெற்ற தலம். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அவதாரப்பதி. சம்பந்தர் பாடல் பெற்றது. (தென் ஆற்காடு மாவட்டம்)

**37. திருத்தினை நகர்(தீர்த்தனகிரி சிவக்கொழுந்தீசர் திருக்கோயில்.**

கடலூர்-சிதம்பரம் பிரதான பாதையில் சிதம்பரத்திற்கு 28வது மைலில் ஆலப்பாக்கம்-புதுச்சத்திரம் இவற்றிற்கு,இடையில் மேட்டுப்பாளையம் எனுமிடத்திலிருந்து 5 கி.மீ. சென்று தானூரையடைந்து இடப்புறமாகச் செல்லும் பாதையில் சென்று இத்தலத்தினை அடையலாம்.

பெரியான் என்பவனிடம் இறைவன் அடியார்க்கு உணவு கேட்க அவன் எடுத்துவரும் சமயத்தில் அவனது நிலத்தில் தினை விளைந்திருக்குமாறு செய்தார். சுந்தரர் பாடல் பெற்ற தலம். வீரசேன மன்னனுக்கு வெண்குஷ்டம் நீங்கப் பெற்ற தலம். (தென் ஆற்காடு மாவட்டம்)

**38. திருச்சோபுரம் (தியாகவல்லி மங்களபுரீஸ்வரர் திருக்கோயில்)**

கடலூர்-சிதம்பரம் சாலையில் ஆலப்பாக்கம் ரயில்வே கேட்டைத் தாண்டி சென்று உப்பங்கழியை அடைந்து அங்கிருந்து தோணி மூலம் சவுக்குத் தோப்பைத் தாண்டிச் சென்றால் இத்தலத்தினை அடையலாம்.

அகத்தியர் வழிபட்ட தலம். திரிபுவனச் சக்கரவர்த்தியின் மனைவியான தியாகவல்லியார் திருப்பணி செய்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். (தென் ஆற்காடு மாவட்டம்)

**39. திரு அதிகை (திருவதிகை வீரட்டானம் வீரட்டேஸ்வரர் திருக்கோயில்.**

தென் ஆற்காடு மாவட்டம், பண்ருட்டியிலிருந்து 2 கி.மீ. தொலைவிலுள்ளது.

அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. சம்பந்தருக்கு திருநடனம் காட்டிய தலம். அப்பரின் சூலைநோய் நீங்கப்பெற்ற தலம். திலகவதியார் தொண்டாற்றிய தலம். சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான, உண்மை விளக்கம் நூலை அருளிய மனவாசங் கடந்தாரின் அவதாரத் தலமிது. திரிபுரத்தை எரித்த வீரச் செயல் நிகழ்ந்த தலம். மூவர் பாடல் பெற்ற தலமிது. (தென் ஆற்காடு மாவட்டம்)

**40. திருநாவலூர் (பக்தஜனேஸ்வரர் திருக்கோயில்)**

சென்னை-திருச்சி சாலையில் உளுந்தூர் பேட்டைக்கு முன்பாக மடப்பட்டு தாண்டி மெயின் ரோடில் உள்ள திருநாவலூரிலிருந்து





பண்ருட்டி சாலையில் 2 கி.மீ. சென்றால் இத்தலத்தினை அடையலாம்.

சுந்தரர் அவதரித்த தலம், சுக்ரன் வழிபட்ட தலம். சுந்தரர் பாடல் பெற்றது. அருணகிரிநாதரின் திருப்புகழும் உள்ளது.(தென் ஆற்காடு மாவட்டம்)

**41. திருமுதுகுன்றம் (விருதாச்சலம் விருத்தகிரீஸ்வரர், பழமலைநாதர் திருக்கோயில்)**

சென்னை-திருச்சி ரயில் மார்க்கத்தில் விழுப்புரத்தை அடுத்துள்ள ரயில் சந்திப்பு நிலையம்.

பிரமனும், அகத்தியரும் வழிபட்ட தலம். சுந்தரர் பரவையாருக்காக பொன் பெற்று, அப் பொன்னை மணிமுத்தாற்றில் இட்டு, திருவாரூர் கமலாலயத்தில் எடுத்துக் கொண்டார் என்பது தல வரலாறு. இத்தலத்தில் இறப்பவருக்கு, இறைவன் அவ்வுயிரைத் தன் தொடை மீது கிடத்தி மந்திர உபதேசம் செய்ய இறைவி முந்தானையால் விசிறி இளைப்பாறுகின்றாள் என்பது கந்தபுராண வரலாறு. மூவர் பாடல் பெற்ற தலம். (தென் ஆற்காடு மாவட்டம்)

**42. திருநெல் வெண்ணெய் (நெய்வெணை சொர்ணகடேஸ்வரர், நெல்வெண்ணெய்யப்பர் திருக்கோயில்)**

தென்ஆற்காடு மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டை பேருந்து நிலையத்தின் பக்கத்தில் செல்லும் திருவெண்ணெய் நல்லூர் சாலையில் இக்கிராமம் உள்ளது. உளுந்தூர் பேட்டை-திருக்கோயிலூர்(வழி) எலவாணார்கோட்டை சாலையில் எறையூர் அடைந்து அங்கிருந்து வடகுரும்பூர் வழியாக 4 கி.மீ. சென்று இத்தலத்தினை அடையலாம்.

சனகாதியோர் நால்வரும் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். (தென் ஆற்காடு மாவட்டம்)

**43. திருக்கோவலூர் (திருக்கோயிலூர் வீரட்டேஸ்வரர் திருக்கோயில்)**

திருவண்ணாமலையிலிருந்து 35 கி.மீ. தொலைவிலுள்ளது..

அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்று. அந்தகாசூரனை சம்ஹாரித்த தலமிது. மெய்ப்பொருள் நாயனார் ஆண்ட பதி இது. இராஜஇராஜ சோழன் பிறந்த ஊர். சம்பந்தர், அப்பர், பாடல் பெற்ற தலம். (தென் ஆற்காடு மாவட்டம்)

**44. அறையணி நல்லூர் (அரகண்ட நல்லூர் அதுல்ய நாதேஸ்வரர் திருக்கோயில்)**

திருக்கோயிலூருக்கு எதிர்க்கரையில் பெண்ணையாற்றின் கரையில் ஒரு சிறிய பாறை மேல் கோயில் உள்ளது.

நீலகண்ட முனிவர், கபிலர், பாண்டவர்கள் வழிபட்ட தலமிது. ரமணமகரிஷியை திருவண்ணாமலைக்கு வருமாறு அம்பாள் அவருக்கு உத்தரவிட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.(தென் ஆற்காடு மாவட்டம்)

**45. இடையாறு (எடையார் கிருபாபுரீஸ்வரர் திருக்கோயில்)**

திருக்கோயிலூரிலிருந்து திருவெண்ணெய் நல்லூர் வழியாக அரசூர் செல்லும் பாதையில் சித்தலிங்க மடத்தையடுத்து இடையாறு உள்ளது.

சுகர் முனிவர் வழிபட்ட தலம். சுந்தரர் பாடல்பெற்றது. (தென் ஆற்காடு மாவட்டம்)

**46. திருவெண்ணெய் நல்லூர் (அருட்துறைநாதர் வேணுபுரீஸ்வரர் திருக்கோயில்)**

விழுப்புரம் – திருச்சி சாலையில் அரசூர் சென்று வலப்புறமாகச் செல்லும் திருக்கோயிலூர் பாதையில் சென்று திருவெண்ணெய் நல்லூர் ரோடு ரயில் நிலையத்தை தாண்டிச் சென்றால் தலத்தினை அடையலாம். விழுப்புரத்திலிருந்து நகரப் பேருந்து வசதி உள்ளது.

சுந்தரரை தடுத்தாட்கொண்ட தலமிது. சிவஞான போதம் நூலை அருளிச் செய்த மெய்கண்ட தேவர் வாழ்ந்து உபதேசம் பெற்ற தலமிது. சுந்தரர் பாடல் பெற்றது.(தென் ஆற்காடு மாவட்டம்)

**47. திருத்துறையூர் (திருத்தளூர் சிஷ்ட குருநாதேஸ்வரர், பசுபதீஸ்வரர் திருக்கோயில்)**

பண்ருட்டி – புதுப்பேட்டை வழியாக அரசூர்சாலையில் 10 கி.மீ. சென்று மீண்டும் கரும்பூர் சாலையில் திரும்பி 5 கி.மீ. சென்று தலத்தினை அடையலாம். பண்ருட்டியிலிருந்து பஸ் உள்ளது. சுந்தரர் தவநெறி வேண்டிப்பெற்ற தலம். சிவஞான சித்தியார் எனும் நூலைப் பாடிய அருணந்தி சிவாசாரியார் அவதரித்த தலம். நாரதர், வசிட்டர், அகத்தியர், சூரியன் முதலானோர் வழிபட்ட தலமிது.(தென்ஆற்காடு மாவட்டம்)





**48. வடுகூர் (திருவாண்டார் கோயில் வடுகீஸ்வரர் திருக்கோயில்)**

விழுப்புரம் பாண்டிச்சேரி (வழி கோலியனூர் கண்டமங்கலம்) பேருந்துச் சாலையில் சென்று வளவனூர் தாண்டி சிறிது தூரம் சென்றால் இத்தலத்தினை அடையலாம்.

அஷ்ட பைரவர்களுள் ஒருவராகிய வடுக பைரவர் முண்டகன் என்னும் அசுரனைக் கொன்று பழிதீர வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (புதுவை மாநிலம்)

**49. திருமாணிகுழி (திருமாணி வாமனபுரீஸ்வரர் திருக்கோயில்)**

கடலூர் - குமணங்குளம் நகரப் பேருந்து இவ்வழியே செல்கிறது. கடலூர் நடுவீரப்பட்டி (வழி) திருவகீந்தபுரம் செல்லும் பேருந்துகளில் சென்றால் இத்தலத்தினை அடையலாம்.

(கடலூர்-பண்ருட்டி பேருந்திலும் செல்லலாம்)

திருமால் பிரம்மச்சாரியாக வந்து மாவலிபால் மூன்றடி மண்கேட்டு அவனையழித்த பழிதீர வழிபட்ட தலம். சம்பந்தர் பாடியது. சுந்தரர் கெடிலநதியில் நீராடி இறைவனை வழிபட்டார் (தென் ஆற்காடு மாவட்டம்)

**50. திருப்பாதிரிப்புலியூர் (திருப்பாப்புலியூர் பாடலேஸ்வரர் திருக்கோயில்)**

கடலூரின் புதிய நகரம்,தென் ஆற்காடு மாவட்டத்தின் தலைநகர் கடலூர்.

அப்பரை கல்லிலே கட்டி கடலிலே விட அது மிதந்து இத்தலத்தின் பக்கத்திலேயே கரை சேர்த்தது. சம்பந்தர், அப்பர் பாடல்கள் பெற்ற தலம். (தென் ஆற்காடு மாவட்டம்)

**51. திருமுண்டீச்சரம் (கிராமம் சிவலோகநாதர் திருக்கோயில்)**

திருக்கோயிலூரிலிருந்து திரு வெண்ணெய் நல்லூர் வழியாக அரசூர் செல்லும் பாதையில் சென்று திருவெண்ணெய் நல்லூரைத் தாண்டி 2 கி.மீ. சென்றால் இத்தலத்தினை அடையலாம்.(இவ்வூரை கிராமம் என்றே அழைக்கிறார்கள்). இறைவனின் காவலர்களான திண்டி, முண்டி வழிபட்ட தலம். சொக்கலிங்க மன்னன் குளத்தில் காணப்பட்ட தாமரை மலரில் லிங்கம் இருப்பதைக் கண்டு அதனை பிரதிஷ்டை செய்தான் என்பது வரலாறு. அப்பர் பாடியது. (தென் ஆற்காடு மாவட்டம்)

52. **புறவார் பனங்காட்டூர் (பனையபுரம் பனங்காட்டீஸ்வரர் திருக்கோயில்)**
திண்டிவனம்-விழுப்புரம் மெயின் ரோடில் விக்கிரவாண்டியைத் தாண்டி (தஞ்சாவூர்) சாலையில் திரும்பி 2 கி.மீ. சென்றால் இத்தலத்தினை அடையலாம். விழுப்புரம் – பாண்டி (திருக்கனூர் வழி) செல்லும் பேருந்தில் சென்று தலத்தினை அடையலாம். சூரியன் வழிபட்ட தலம், சமபந்தர் பாடல் பெற்றது.(தென் ஆற்காடு மாவட்டம்)

53. **திரு ஆமாத்தூர் (அபிராமேஸ்வரர் திருக்கோயில்)**
விழுப்புரம் சூரப்பட்டு பேருந்து இவ்வழியே செல்கிறது. திருவண்ணாமலை செஞ்சி பேருந்து சாலையில் 2 கி.மீ. சென்று திருஆமத்தூர் அடைந்து அங்கிருந்து இடப்புறமாக பிரிந்து 5 கி.மீ. சென்றால் இத்தலத்தினை அடையலாம்.
நந்தி. காமதேனு தவமிருந்து கொம்புகளைப் பெற்ற தலம். இராமர் வழிபட்ட தலம். உயிர்களுக்கு இறைவன்தாயாக இருந்து அருளும் தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. திருப்புகழ் பாடல் பெற்றது. (தென் ஆற்காடு மாவட்டம்)

54. **திருவண்ணாமலை(அருணாசலேஸ்வரர் திருக்கோயில்)**
வட ஆற்காடு மாவட்டத்தின் முக்கிய நகர்.
பஞ்சபூத தலங்களில் ஒன்று. அக்கினிக்குரிய தலம். ரமண மகரிஷி தவம் இருந்து அருள் பெற்ற தலம். அருணகிரி நாதரின் வாழ்வில் அருட்திருப்பம் ஏற்படக் காரணமான தலம். நினைக்க முத்திதரும் பதி. சம்பந்தர், அப்பர், மாணிக்க வாசகர் பாடல் பெற்றது. (வட ஆற்காடு மாவட்டம்.)

55. **கோயில் (சிதம்பரம் நடராசப்பெருமான் (சபாநாயகர்) திருக்கோயில்)**
தென் ஆற்காடு மாவட்டத்தின் முக்கிய நகராகும். சென்னையிலிருந்து 245 கி.மீ. தொலைவுலுள்ளது.
பஞ்சபூதத் தலங்களில் ஒன்று.இது ஆகாயத்தலம். சேக்கிழாருக்கு பெரிய புராணம் பாட அடியெடுத்து கொடுத்த தலம் திருப்பல்லாண்டு பாடி சேந்தனார் தடைப்பட்ட தேரை ஓடச் செய்தது, திருமுறைகளை வெளிப்படுத்தியது, மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வென்றது, சம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களை சிவகணங்களாகக் கண்டது, ஆகிய பெருமைகளைக் கொண்ட தலம். மூவர் பாடல் பெற்ற தலம். மாணிக்கவாசகர் திருவாசகம் அருளிய தலமிது. (தென் ஆற்காடு மாவட்டம்)





56. **திருவேட்களம் (பாசுபதேஸ்வரர் திருக்கோயில்)**
சிதம்பரத்திலிருந்து அண்ணாமலை நகர் செல்லும் சாலையில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் புகுந்து நேரே சென்றால் இதனை அடையலாம்.
அர்ச்சுனனுக்கு பாசுபதம் தந்தருளிய தலம். சம்பந்தர் இங்கு தங்கியிருந்து சிதம்பரத்தை தரிசனம் செய்தார். நாரதர் வழிபட்ட தலம் சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம். (தென் ஆற்காடு மாவட்டம்)

57. **திருநெல்வாயில் (சிவபுரி உச்சிநாத சுவாமி திருக்கோயில்)**
சிதம்பரம் அண்ணாமலை நகர் சாலையில் வந்து பல்கலைக்கழகத்துக்குள் நுழையாமல் வலப்புறமாக திரும்பி சுவரப்பட்டு சாலையில் சென்று, அது மெயின் ரோடில் சேருமிடத்தில் பேராம்பட்டு சாலையில் சென்றால் இத்தலத்தினை அடையலாம்.
கன்வமகரிஷி வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். (தென் ஆற்காடு மாவட்டம்)

58. **திருக்கழிப்பாலை (பால்வண்ணநாதசுவாமி திருக்கோயில்)**
சிவபுரிக்கு மிகவும் அருகில் 1/2 கி.மீ.ல் உள்ளது.
வால்மீகி முனிவர் வழிபட்டதலம். மூவர் பாடல் பெற்ற தலம். (தென் ஆற்காடு மாவட்டம்)

59. **திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம் சிவலோகத்தியாகர் திருக்கோயில்)**
சிதம்பரம், சீர்காழி சாலையில் கொள்ளிடம் புதிய பாலத்தைத் தாண்டி கொள்ளிடம் மெயின்ரோடில் இடப்புறமாக 8 கி.மீ. சென்றால் இத்தலத்தினை அடையலாம். (சிதம்பரம் – மகேந்திரப் பள்ளி பேருந்து இவ்வழியே செல்லும்)
சம்பந்தர் திருமணக் கோலத்துடன் சோதியுள் கலந்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

60. **திருமயேந்திரப்பள்ளி (மகேந்திரப்பள்ளி திருமேனியழகர் திருக்கோயில்)**
சிதம்பரம், சீர்காழியிலிருந்து நகரப்பேருந்துகள் செல்கின்றன. சிதம்பரத்திலிருந்து 11 கி.மீ. தொலைவிலுள்ளது. (ஆச்சாள்புரத்திலிருந்து 3 கி.மீ.)
இந்திரன், மயேன்திரன், சந்திரன் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

61. தென் திருமுல்லைவாயில் (திருமுல்லை வாசல் முல்லைவனநாதர் திருக்கோயில்)
சீர்காழியிலிருந்து 13 கி.மீ. தொலைவிலுள்ளது.
சோழ மன்னனின் பிரமகத்தி தோஷம் நீங்கிய தலம். மன்னனின் குதிரையின் கால்களை சுற்றி கொண்ட முல்லைக்கொடிகளை வெட்டிய போது லிங்கம் வெளிப்பட்டது. தவறுணர்ந்த மன்னன் தன் கழுத்தை வெட்டும்போது இறைவன் ரிஷபாரூடராய் காட்சிதந்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

62. திருக்கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை சுந்தரேஸ்வரர் திருக்கோயில்)
திருவெண்காடு - சீர்காழி சாலையில் மங்கை மடம் ஊரை அடைந்து அங்கிருந்து திரு நகரி போகும் சாலையில் சென்று கோனையாம் பட்டினத்திலிருந்து வலப் புறமாக சென்றால் இத்தலத்தினை அடையலாம். சீர்காழி - கோனையாம் பட்டினம் (வழி) அன்னப்பன் பேட்டை நகரப் பேருந்து செல்கிறது.
பராசர முனிவர் வழிபட்ட தலம், சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

63. திருச்சாய்க்காடு (சாயாவனம் சாயாவனேஸ்வரர் திருக்கோயில்)
சீர்காழி-பூம்புகார் சாலையில் இத்தலம் உள்ளது. திருவெண்காட்டியிலிருந்து 3 கி.மீ. தொலைவு.
இயற்பகை நாயனார் தம் மனைவியை இத்தலத்தெல்லை வரை அழைத்து வந்து இறைவனுடன் வழியனுப்பி வைத்தார் என்பது வரலாறு. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது இக்கோயிலுக்கு அருகில் சம்பாபதி அம்மன் கோயில் உள்ளது. (தஞ்சை மாவட்டம்)

64. திருப்பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம்பட்டினம் - பூம்புகார் பல்லவனேஸ்வரர் திருக்கோயில்)
தஞ்சாவூரிலிருந்து 108 கி.மீ. தொலைவிலுள்ளது .சீர்காழியிலிருந்து பேருந்து வசதிகள் உண்டு.
பட்டினத்தார், இயற்பகைநாயனார் அவதரித்த தலமிது. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)





65. திருவெண்காடு (சுவேதாரண்யேசுவரர் திருக்கோயில்)
மயிலாடுதுறை, மங்கைமடம் செல்லும் பேருந்து இவ்வழியே செல்கிறது.
இந்திரன், வெள்ளையானை வழிபட்டதலம். மூவர் பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்டம்)

66. கீழைத்திருக்காட்டுப்பள்ளி (ஆரண்யசுந்தரேசுவரர் திருக்கோயில்)
திருவெண்காட்டிலிருந்து இலையமுதுகுளபுரம் செல்லும் சாலையில் 1 1/2 கி.மீ. தொலைவிலுள்ளது.
விருத்திராசுரனைக் கொன்று பழி நீங்க இந்திரன் வழிபட்ட தலம். நண்டு பூசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

67. திருக்குருகாவூர் (திருக்கடாவூர் வெள்ளடையீஸ்வரர் திருக்கோயில்)
சீர்காழியிலிருந்து தென் திருமுல்லைவாயில் செல்லும் சாலையில் 6வது கி.மீ. இல் வடகால் எனும் ஊரின் சாலையில் குருகாவூருக்கு செல்லும் பாதை பிரிகிறது; அப்பாதையில் 1 கி.மீ.சென்றால் தலத்தினை அடையலாம்.
பசியோடிருந்த சுந்தரருக்கு இறைவன் கட்டமுதும் நீரும் தந்து பசிபோக்கிய தலம். சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

68. சீகாழி (சீர்காழி பிரமபுரீஸ்வரர், சட்டைநாதசுவாமி திருக்கோயில்)
சிதம்பரத்தை அடுத்துள்ள தலம். பல ஊர்களிலிருந்து பேருந்து வசதி உண்டு. தஞ்சை மாவட்டத்தின் முக்கிய நகரில் ஒன்றானது.
சம்பந்தரின் அவதாரத்தலம். ஞானப்பால் உண்டமை, பிரமன் வழிபட்டது. குருவான வியாழன் வழிபட்டு குருத்துவம் பெற்றமை, ராகு பூசித்தமை, புறாவடிவில் வந்த அக்கினியால் சிபி மன்னன் பேறு பெற்றமை ஆகிய அற்புதங்கள் நிகழ்ந்த தலம். மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

69. திருக்கோலக்கா (சப்தபுரீஸ்வரர் திருக்கோயில்)
சீர்காழியிலிருந்து 1 கி.மீ. தொலைவு.
சம்பந்தருக்கு தாளத்தை தந்தருளிய தலமிது. அகத்தியர், கண்வர்

வழிபட்ட தலமிது. சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**70. புள்ளிருக்கு வேளூர் (வைத்தீஸ்வரன் கோயில் வைத்தியநாதர் திருக்கோயில்)**

சீர்காழிக்கு அடுத்துள்ள தலம். சீர்காழிக்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் உள்ள ஊர்.

சூரபத்மனின் மார்பை பிளக்க முருகன் வேல் வாங்கிய தலம். புள் (சடாயு), இருக்குவேதம், வேள் (முருகன்), ஊர் (சூரியன்) ஆகியோர் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.(தஞ்சை மாவட்டம்)

**71. திருக்கண்ணார் கோயில் (குறுமாணக்குடி கண்ணாயிர முடையார் திருக்கோயில்)**

வைத்தீஸ்வரன் கோயில் – மயிலாடுதுறை பேருந்துப் பாதையில் பாகசாலை எனுமிடத்திலிருந்து 3 கி.மீ. சென்றால் இதனை அடையலாம்.

சம்பந்தர் பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்டம்)

**72. திருக்கடைமுடி (கீழையூர் கடைமுடிநாதர் திருக்கோயில்)**

மயிலாடுதுறை-பூம்புகார் சாலையில் மேலையூர் மேலப்பாதி தாண்டி கீழையூர் ஊரைத்தாண்டி கடந்து சற்று மேலே சென்று சத்திரம் எனுமிடத்திலிருந்து 2 கி.மீ. சென்று கீழையூர் பேருந்து நிலையத்திற்கப்பால் திரும்பிச் சென்றால் தலத்தினை அடையலாம்.

சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**73. திருநின்றியூர் (மகாலட்சுமீசர் திருக்கோயில்)**

வைத்தீஸ்வரன் கோயில்– மயிலாடுதுறை சாலை இடையிலுள்ள ஊர். மயிலாடுதுறையிலிருந்து 7 கி.மீ. தொலைவு.

மன்னன் ஒருவன் கோயிலைக் கட்டும் விருப்புடன் இங்குவந்து பூமியை இடித்துப் பார்த்போது சிவலிங்கம் வெளிப்பட்டடது. இடித்த இடி பட்டதினால் சிவலிங்கத்தின் உச்சியில் குழி இருப்பதை காணலாம். மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**74. திருப்புன்கூர் (சிவலோகநாதர் திருக்கோயில்)**

வைத்தீஸ்வரன் கோயில்–திருப்பனந்தாள் சாலையில் 3 கி.மீ.





சென்றால் சாலையில் ஒருபுறம் திருப்புன்கூர் கைகாட்டியும், மறுபுறம் திருப்புன்கூர் சிவலோகநாதர் கோயில் வளைவும் உள்ளது; அதனுள் 1 கி.மீ. சென்றால் தலத்தனை அடையலாம். நந்தனார் வணங்குவதற்காக இறைவன் நந்தியை விலகியிருக்குமாறு அருள் செய்த தலம். சுந்தரர்பால் கோபங்கொண்ட விறன்மிண்ட நாயனார்வழிபட்ட தலம். மூவர் பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்டம்)

**75. திருநீடூர் (அருட்சோமநாதர் திருக்கோயில்)**

மயிலாடுதுறை-நீடூர் பேருந்து வசதி உள்ளது. வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து திருப்பனந்தாள் சாலையில் பட்டவர்த்தி வந்து இடப்புறமாக திரும்பி மயிலாடுதுறை சாலையில் திரும்பி தலத்தினை அடையலாம்.

முனையடுவார் நாயனார் தொண்டு செய்து முத்திபெற்ற தலம். அப்பர், சுந்தரர் பாடல் பெற்றது.(தஞ்சை மாவட்டம்)

**76. திருஅன்னியூர் ( பொன்னூர் ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்)**

மயிலாடுதுறையிலிருந்து 8 கி.மீ., மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு செல்லும் பேருந்து இவ்வழியே செல்கின்றது. சூரியன், வருணன், அக்கினி முதலியோர் வழிபட்ட தலம். அப்பர், சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**77. திருவேள்விக்குடி (கல்யாண சுந்தரேசுவரர் திருக்கோயில்)**

குத்தாலத்திற்கு (தஞ்சை மாவட்டம்) பக்கத்தில் உள்ளது. மயிலாடுதுறை-மகாராஜபுரம் சாலையில் உள்ளது.

சிவபெருமானின் திருமணவேள்வி நடந்த தலம். நீண்டநாள் திருமணமாகாதவர்கள் இங்கு வந்து இறைவனை வழிபட்டால் திருமணமாகும் என்பது இத்தலச் சிறப்பு. சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**78. எதிர்கொள்பாடி (மேலைத் திருமணஞ்சேரி ஐராவதேஸ்வரர் திருக்கோயில்)**

குத்தாலத்திலிருந்து பந்த நல்லூர் செல்லும் பேருந்துச் சாலையில் வந்து அஞ்சார் வார்த்தலை என்னும் ஊரையடைந்து வாய்க்கால் பாலம் தாண்டி வலப்புறமாகத் திரும்பி சென்றால் தலத்தினை அடையலாம்.

வேள்விக்குடியில் திருமணஞ் செய்துகொண்டு அத்திருமணக்

கோலத்துடன் வந்த தன் அடியவனான அரசகுமாரனை அவனுடைய அம்மானைப் போல இறைவன் எதிர்கொண்டழைத்துச் சென்ற தலம். சுந்தரர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**79. திருமணஞ்சேரி (கீழைத்திருமணஞ்சேரி அருள் வள்ளல்நாத சுவாமி திருக்கோயில்)**

மயிலாடுதுறையிலிருந்து குத்தாலம் வழியாகத் திருமணஞ்சேரிக்கு பேருந்து உண்டு.

இறைவன் கல்யாண சுந்தரர் வடிவங்கொண்டு கோகிலாம்பிகையை திருமணஞ் செய்த தலம். ராகுதோஷத்தினால் பீடிக்கப்பட்டு மகப்பேறு கிட்டாதவர்கள் இங்குவந்து சப்த சாகரதீர்த்தத்தில் மூழ்கி ராகு பகவானுக்கு அபிஷேகம் செய்வதன் மூலம் தோஷம் நீங்கப் பெறும். சம்பந்தரும், அப்பரும் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**80. திருக்குறுக்கை (கொருக்கை வீரட்டேஸ்வரர் திருக்கோயில்)**

மயிலாடுதுறையிலிருந்து 12 கி.மீ. தொலைவு. மயிலாடுதுறை மணல்மேடு பேருந்துச் சாலையில் நீடூர் தாண்டி கொண்டல் ஊரையடைந்து கொருக்கை சாலையில் இடப்புறமாக 3 கி.மீ. சென்று பாலத்தை கடந்தால் இத்தலத்தை அடையலாம்.

அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. மன்மதனை எதிர்த்த தலம். திருமால், பிரமா, லட்சுமி முதலானோர் வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**81. திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு குற்றம் பொறுத்த நாதர் திருக்கோயில்)**

வைத்தீஸ்வரன் கோயில்–திருப்பனந்தாள் சாலையில் தலைஞாயிறு என்று கை காட்டி உள்ள இடத்திலிருந்து பிரியும் சாலையில் சென்றால் கோயிலை அடையலாம்.

இந்திரன், இறைவன் என்றறியாமல் அவர்மீது வச்சிரம் எறிந்த குற்றத்தைப் பொறுத்தருள் செய்தமையால் குற்றம் பொறுத்த நாதர் ஆனார். சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**82. திருக்குரக்குக்கா (திருக்குரக்காவல் குந்தளேஸ்வரர் திருக்கோயில்)**

வைத்தீஸ்வரன் கோயில் - திருப்பனந்தாள் சாலையில்





இளந்தோப்பு வந்து, அங்கு உள்ள மருத்துவமனைக் கட்டிடத்திற்குப் பக்கத்தில் செல்லும் சாலையில் 3 கி.மீ. உள்ளே சென்றால் கோயிலை அடையலாம்.

அநுமன் வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது (தஞ்சை மாவட்டம்)

**83. திருவாழ் கொளிப்புத்தூர் (திருவாளப்புத்தூர் மாணிக்கவண்ணர் திருக்கோயில்)**

வைத்தீஸ்வரன் கோயில்–திருப்பனந்தாள் சாலையில் இளந்தோப்பு தாண்டி மேலும் சென்றால் சாலையிலுள்ள இவ்வூரை அடைந்து இடப்புறமாகச் செல்லும் பாதையில் சென்று தலத்தை அடையலாம். (மயிலாடுதுறை–மணல்மேடு பேருந்து இவ்வழியே செல்லும்)

அருச்சுனனின் நீர் வேட்கையைத் தணித்த தலம். அருச்சுனனின் வாளை ஒளித்து பின் அவன் வேண்ட அதனை மீண்டும் ஒப்படைத்ததருளியதாக வரலாறு. சம்பந்தர்,சுந்தரர், பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**84. பழமண்ணிப்படிக்கரை(இலுப்பைக்கட்டு நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்)**

வைத்தீஸ்வரன் கோயில் – திருப்பனந்தாள் (வழி இளந்தோப்பு, வாளாப்புத்தூர்) சாலையில் மணல்மேடு அடைந்து பாப்பாக்குடியைத் தாண்டி சென்றால் இத்தலத்தினை அடையலாம்.

இறைவன் விஷத்தைப் பருகியபோது தேவி தன் கரத்தால் அவருடைய கழுத்தை பரிசித்த தலம். பாண்டவர்கள் வழிபட்ட தலம். சுந்தரர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**85. ஓமாம் புலியூர் (துயர்தீர்த்த நாதர் திருக்கோயில்)**

காட்டுமன்னார் குடியிலிருந்து அடிக்கடி பேருந்து வசதி உள்ளது. சாலை ஓரத்தில் இத்தலமுள்ளது.

வியாக்ர பாதர் வழிபட்ட தலம். இறைவன் தட்சிணாமூர்த்தியாக இருந்து இறைவிக்கு பிரணவப் பொருளை உபதேசித்த தலம். சம்பந்தர், அப்பர், பாடல் பெற்றது. (தென் ஆற்காடு மாவட்டம்)

**86. கானாட்டுமுள்ளூர் (கானாட்டம்புலியூர் பதஞ்சலிநாதர் திருக்கோயில்)**

காட்டுமன்னார்குடியிலிருந்து ஓமாம்புலியூர் செல்லும் சாலையில் மோவூர் தாண்டி முட்டம் என்ற இடத்தில் பிரியும் சாலையில் 3 கி.மீ. இடப்புறமாக சென்று ஊருள் புகுந்து செல்லும் சாலை வழியாக 1 கி.மீ.ல் இத்தலமுள்ளது. (சிதம்பரத்திலிருந்து பேருந்து உள்ளது)

மிகப் பழம்பெரும் கோயில், பாழைடந்த நிலையிலுள்ளது. சுந்தரர் பாடல் பெற்றது. (தென் ஆற்காடு மாவட்டம்)

**87. திருநாரையூர் (சௌந்தரநாத சுவாமி திருக்கோயில்)**

காட்டுமன்னார் கோயில் –சிதம்பரம் சாலையில் குமாரட்சியை அடுத்து சாலையில் 1 கி.மீ. சென்றால் தலத்தினை அடையலாம். நம்பியாண்டார் நம்பி அவதரித்த தலம். இங்குள்ள பொல்லாப் பிள்ளையாரின் அருளைக் கொண்டு தேவாரத் திருமுறைகளை தொகுத்தார். சம்பந்தர், அப்பர், பாடல் பெற்றது. (தென் ஆற்காடு மாவட்டம்)

**88. திருக்கடம்பூர் (மேலக்கடம்பூர் அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்)**

காட்டுமன்னார்குடி(கோயில்) எய்யலூர் சாலையில் வந்து தலத்தினை அடையலாம். கீழக் கடம்பூர் 2 கி.மீ. தாண்டி அதன் பிறகே மேலக் கடம்பூர் உள்ளது.

இந்திரன் வழிபட்டு அமுதகலசமும், முருகன் வழிபட்டு வில்லும் பெற்ற தலம். சம்பந்தர், அப்பர், பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்டம்)

**89. பந்தணை நல்லூர் (பந்த நல்லூர் பசுபதீஸ்வரர் திருக்கோயில்)**

மயிலாடுதுறை- திருப்பனந்தாள் பேருந்து இவ்வழியே செல்லும்.

காம்பீலி மன்னனின் மகன் குருடு நீங்கிய இடம். இதனால் தன் மகனுக்கு பசுபதி என்று பெயர் சூட்டி கோயில் திருப்பணிகளையும் செய்தான். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம்.(தஞ்சை மாவட்டம்)

**90. கஞ்சனூர் (அக்கினீஸ்வரர் திருக்கோயில்)**

கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது. திருவாவடுதுறைக்கு அருகில் உள்ள தலம்.

பராசருக்கு சித்தப்பிரமை நீங்கியது, பிரமனுக்கு திருமணக் காட்சி தந்தது. அக்கினிக் குண்டான சோகை நோயை தீர்த்தது. மானக் கஞ்சாற நாயனார் அவதரித்து வழிபட்டது போன்ற சிறப்புகள் உடைய தலம். அப்பர் பாடல் பெற்ற தலம்.(தஞ்சை மாவட்டம்)





**91. திருக்கோடிகா(திருக்கோடி காவல் கோடீஸ்வரர் திருக்கோயில்)**

கும்பகோணம்-கதிரா மங்கலம் சாலையில் சென்று இத்தலத்தை அடையலாம். மயிலாடுதுறை-குத்தாலம் (வழிகதிராமங்கலம்) சாலையில் சென்றும் இத்தலத்தை அடையலாம்.

கண்டராதித்த சோழன் மனைவியான செம்பியன் மகாதேவி இக்கோயிலை கற்றளியாக்கினார். சம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது.(தஞ்சை மாவட்டம்)

**92. திருமங்கலக்குடி (பிராணவரதேஸ்வரர் திருக்கோயில்)**

கும்பகோணம்-கதிராமங்கலம்-மயிலாடுதுறை பேருந்துச் சாலையில் இக்கோயில் உள்ளது.

குலோத்துங்கனின் மந்திரி வரிப்பணத்தைக் கொண்டு கோயிலைக் கட்டியதால் அவனுக்கு மரண தண்டனை அளித்து திருமங்கலக்குடியில் அடக்கம் செய்தபோது அவனது மனைவி தனக்கு மாங்கல்ய காப்பு தருமாறு வேண்டியதால் மீண்டும் உயிர்பெற்றான் என்பது தல வரலாறு. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.(தஞ்சை மாவட்டம்)

**93. திருப்பனந்தாள் (தாலவனேஸ்வரர் திருக்கோயில்)**

கும்பகோணத்திலிருந்தும், மயிலாடுதுறையிலிருந்தும் பேருந்து வசதி உள்ளது.

தாடகை என்னும் பெண் புத்திரப் பேறு வேண்டி மாலை சாத்தும்போது ஆடை நெகிழ இறைவன் தனது திருமுடியை சாய்த்து மாலையை ஏற்றருளினார். அன்று முதல் சாய்வாக இருந்த நிலையை குங்குலியக் கலய நாயனார் மாற்றினார். சம்பந்தர் பாடல் பெற்றது.(தஞ்சை மாவட்டம்)

**94. திருஆப்பாடி(திருவாய்ப்பாடி பாலுகந்தநாதர் திருக்கோயில்)**

கும்பகோணம்-திருப்பனந்தாள் சாலையில் சேங்கனூர் சாலையைத் தாண்டி திருவாய்ப்பாடி உள்ளது.

சண்டேசுவரர் வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**95. செய்ஞலூர் (சேங்கனூர் சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம்-திருப்பனந்தாள் சாலையில், நெடுங்கொல்லை கிராமம் தாண்டி சேங்கனூர் கூட்ரோட்டில் வலப்புறமாக பிரிந்து 1 கி.மீ. உள்ளே சென்றால் தலத்தினை அடையலாம்.

சண்டேசுவர நாயனாரின் அவதாரத் தலம், சிபி, அரிச்சந்திரன் வழிபட்டதலம், சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**96. திருந்துதேவன்குடி (திருத்தேவன்குடி கற்கடகேஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறையிலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும் பேருந்து உள்ளது.
நண்டு பூசித்த தலம். நோய் நீங்கப்பெற்ற மன்னன் இத்தலத்தில் செய்த அம்மன் பிரதிஷ்டை அருமருந்தம்மை யாகும்.சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**97. திருவியலூர்(திருவிசலூர் யோகனந்தீஸ்வரர் திருக்கோயில்)**
திருவிடை மருதூர்-வேப்பத்தூர் சாலையில் சென்றால் கோயிலை அடையலாம். கும்பகோணத்திலிருந்த நகரப் பேருந்து உண்டு.
உய்யவந்த நாயனார் அவதரித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**98. கொட்டையூர் (கோடீஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் -திருவையாறு சாலையிலுள்ளது. கும்பகோணத்திலிருந்து 4 கி.மீ. தொலைவு. கும்பகோணம் - சுவாமிமலை பேருந்து இவ் வழியே செல்கிறது.
ஆமணக்கு கொட்டைச் செடியின் கீழ் லிங்கம் வெளிப்பட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**99. இன்னம்பர் (இன்னம்பூர் எழுத்தறிநாதேஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் - திருவையாறு பாதையில் புளியஞ்சேரிசென்று அங்கு சாலையில் திருப்பிறம்பியம் கைகாட்டி இடத்திலிருந்து வலப்புறமாக 3 கி.மீ. சென்றால் கோயிலை அடையலாம்.
சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**100. திருப்புறம்பயம் (திருப்பிறம்பியம் சாட்சிநாதேஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் - திருவையாறு பாதையில் புளியஞ்சேரி சென்று சாலையில் திருப்பிறம்பியம் கைகாட்டி உள்ள இடத்திலிருந்து இன்னம்பூர் சென்று அங்கிருந்து 3 கி.மீ. சென்றால் கோயிலை





அடையலாம்.
செட்டிப் பெண்ணுக்கு இறைவன் சாட்சி சொன்ன தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**101. திருவிசயமங்கை (திருவிஜயமங்கை வியநாதேஸ்வரர் திருக்கோயில்)**
திருவைகாவூரிலிருந்து ஆற்றோரமாக இடப்புறமாக திருப்பிச் செல்லும் கிளைப்பாதையில் 2 கி.மீ. சென்று இத்தலத்தை அடையலாம்.
அர்ச்சுனன் (விஜயன்) வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்டம்)

**102. திருவைகாவூர்(வில்வவனேஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் - சுவாமிமலை பேருந்து இவ்வழியே செல்கிறது. சுவாமிமலையிலிருந்து நாகுகுடி செல்லும் பாதையில் சென்று இத்தலத்தை அடையலாம்.
சிவராத்திரிக்கு சிறப்புடைய தலம். சிவராத்திரி நாளில் புலிக்குப் பயந்த வேடன் வில்வமரத்தின் மேல் ஏறியிருந்து தூங்காமல் வில்வத்தை பறித்துப்போட இறைவன் காலையில் தோன்றி அருள் புரிந்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்டம்)

**103. வட குரங்காடுதுறை (ஆடுதுறை பெருமாள்கோயில் தயாநிதீஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் - திருவையாறு சாலையில் சுவாமிமலை உமையாள் புரம் ,கபிஸ்தலம், தாண்டி உள்ளிக்கடை என்னும் ஊரையடுத்து இத்தலம் உள்ளது. கும்பகோணத்திலிருந்து 20 கி.மீ. திருவையாற்றிலிருந்து 5 கி.மீ. தொலைவு.
வாலி வழிபட்ட தலம். கர்ப்பிணியின் தாகத்தைத் தீர்த்த தலம், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்டம்)

**104. திருப்பழனம் (ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் - திருவையாறு சாலையில் திருவையாற்றுக்கு அண்மையில் உள்ள தலம்.
சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று, சந்திரன் வழிபட்டதலம் சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**105. திருவையாறு (பஞ்சநதேஸ்வரர் திருக்கோயில்)**
தஞ்சை மாவட்டத்திலுள்ள முக்கிய நகரங்களில் ஒன்று.

தஞ்சாவூருக்கு 11 கி.மீ. தொலைவிலுள்ளது.
அப்பர் கயிலைக் காட்சியைக் கண்டு களித்த தலம் .சப்தஸ்தானத் தலங்களுள் இதுவும் ஒன்று. மூவர் பாடல் பெற்றது. 18 பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன. (தஞ்சை மாவட்டம்)

**106. திருநெய்த்தானம் (தில்லைஸ்தானம் நெய்யாடியப்பர் திருக்கோயில்)**
திருவையாற்றுக்கு மிக அருகாமையிலுள்ளது.
சரஸ்வதி, காமதேனு, கௌதம முனிவர் ஆகியோர் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**107. பெரும்புலியூர் (வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில்)**
திருவையாறு - கல்லணை - திருக்காட்டுப்பள்ளி செல்லும் சாலையில் தில்லை ஸ்தானத்திற்கு வலப்புறமாகப் பிரியும் கிளைச்சாலையில் 4 கி.மீ. சென்றால் கோயிலை அடையலாம். வியாக்கிரபாதர் வழிபட்ட தலம், சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**108. திருமழபாடி( வச்சிரதம் பேசுவரர் திருக்கோயில்)**
திருச்சிமாவட்டம் அரியலூரிலிருந்தும், திருச்சியிலிருந்தும் தஞ்சைமாவட்டம் திருவையாற்றிலிருந்தும் இத்தலத்திற்கு பேருந்து வசதி உள்ளது.
மார்க்கண்டேய முனிவரின் பொருட்டு இறைவன் மழு ஏந்தி நடனமாடிக் காட்சிதந்த தலம். திருமால், இந்திரன், வழிபட்ட, மூவர் பாடல் பெற்ற தலம். (திருச்சி மாவட்டம்)

**109. திருப்பழுவூர் (கீழப்பழுவூர் வடமூலேஸ்வரர் திருக்கோயில்)**
திருச்சி–அரியலூர் சாலையிலுள்ளது.
பரசுராமர் தன் தாயைக் கொன்ற பழிதீரும் பொருட்டு வழிபட்ட பதி. சம்பந்தர் பாடல்பெற்றது. (திருச்சி மாவட்டம்)

**110. திருக்கானூர் (செம்மேனிநாதர் திருக்கோயில்)**
திருக்காட்டுப் பள்ளியிலிருந்து காவிரி பாலத்தை தாண்டி வலப்புறமாகப் பிரிந்து செல்லும் கும்பகோணம், மயிலாடுதுறை சாலையில் சிறிது தூரம் சென்று இடப்புறமாகப் பாதையில் பிரியும் விஷ்ணம்பேட்டை அடைந்து அங்கிருந்து வயல்வெளி நடுவே சென்றால் கோயிலைஅடையலாம்.
அக்கனி வழிபட்ட தலம், சம்பந்தர், அப்பர், பாடல் பெற்றது.(தஞ்சை மாவட்டம்)





**111. அன்பிலாந்துறை (அன்பில் சத்தியவாகீஸ்வரர் திருக்கோயில்)**
திருச்சியிலிருந்தும், லால்குடியிலிருந்தும் பேருந்தில் செல்லலாம்.

வாசீக முனிவர், பிரமன் ஆகியோர் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர், பாடல் பெற்றது.(திருச்சி மாவட்டம்)

**112. திருமாந்துறை (ஆம்ரவனேசுவரர் திருக்கோயில்)**
லால்குடிக்குப் பக்கத்திலுள்ளது. திருச்சியிலிருந்தும், லால்குடியிலிருந்தும் செல்லலாம்.
சூரியன், சந்திரன், இந்திரன், வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். (திருச்சி மாவட்டம்)

**113. திருப்பாற்றுறை (திருப்பாலத்துறை ஆதிமூலநாதர் திருக்கோயில்)**
திருவானைனக்காவிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ளது.
திருவானைக்கா வழியாகக் கல்லணை செல்லும் பேருந்தில் சென்று பனையபுரம் என்ற இடத்தில் இறங்கி கொள்ளிடம் நோக்கி வரவேண்டும்.
மார்க்கணடேயர், சூரியன் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (திருச்சி மாவட்டம்)

**114. திருஆனைக்கா(திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்)**
திருச்சிக்குப் பக்கத்தில் உள்ள தலம். திருச்சியிலிருந்து நகரப் பேருந்து அடிக்கடி செல்கிறது.
பஞ்ச பூதத் தலங்களுள் ஒன்று. யானையும், சிலந்தியும் வழிபட்ட தலம். கோச்செங்கோட் சோழன் வழிபட்ட தலம். மூவர் பாடல் பெற்றது. (திருச்சி மாவட்டம்)

**115. திருப்பைஞ்ஞீலி (நீலகண்டேசுவரர் திருக்கோயில்)**
திருச்சியிலிருந்து மண்ணச்ச நல்லூர் வழியாக இத்தலத்தினை அடையலாம்.
அந்தணர் வடிவில் இறைவன் வந்து அப்பருக்கு பசி போக்கிய தலம். மூவர் பாடல் பெற்றது. (திருச்சி மாவட்டம்)

**116. திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி மாற்றறிவரதர் திருக்கோயில்)**
திருச்சி–சேலம் பேருந்துச் சாலையில் 12 கி.மீ. தொலைவு.

சுந்தரர் பொன் பெற்ற தலம். கொல்லி மழவனின் புதல்விக்கு நேர்ந்த முயலகன் நோயைச் சம்பந்தர் தீர்த்த தலம். சம்பந்தர், சுந்தரர், பாடல் பெற்றது. (திருச்சி மாவட்டம்)

**117. திரு ஈங்கோய்மலை(திரு விங்கநாதமாலை மரகதாசலஸ்வரர் திருக்கோயில்)**

திருச்சி-சேலம் பாதையில் முசிறிக்கு அண்மையில் இத்தலமுள்ளது. திருச்சி- நாமக்கல்-சேலம் பேரூந்தில் செல்லலாம். அகத்தியர் ஈ வடிவில் சென்று சுவாமியைத் தரிசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். (திருச்சி மாவட்டம்)

**118. திரு வாட்போக்கி (ஐயர்மலை ரத்னகிரீஸ்வரர் திருக்கோயில்)**

திருச்சி மாவட்டம் குளித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் வழியில் இத்தலம் உள்ளது.

அகத்தியர் இறைவனை நண்பகலில் தரிசித்த தலமிது. ஆரிய மன்னனுக்கு மாணிக்கம் கொடுத்தருளிய தலமிது. அப்பர் பாடல் பெற்ற தலமிது. (திருச்சி மாவட்டம்).

**119. கடம்பந்துறை (குளித்தலை கடம்பவனேஸ்வரர் திருக்கோயில்)**

திருச்சி-ஈரோடு பாதையில் உள்ளது.

கன்வமுனிவருக்கு இறைவன் கடம்பமரத்தில் காட்சிதந்த தலம். அப்பர் பாடல் பெற்றது. (திருச்சி மாவட்டம்)

**120. திருப்பராய்த்துறை (தாருகாவனேஸ்வரர் திருக்கோயில்)**

திருச்சி- ஈரோடு இரும்புப் பாதையில் உள்ளது. எலமனூர் புகைவண்டி நிலையத்தில் இறங்கிச் செல்லலாம். திருச்சியிலிருந்து கரூர், குளித்தலை செல்லும் பேரூந்துச் சாலையில் சென்று இத்தலத்தை அடையலாம்.

இறைவன் பிட்சாடனராய் சென்று தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அகற்றி அவர்கட்கு அருள்புரிந்த தலம். அப்பர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். (திருச்சி மாவட்டம்)

**121. கற்குடி(உய்யக்கொண்டான் திருமலை உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயில்)**

திருச்சி-வயலூர் சாலையில் இத்தலம் அமைந்துள்ளது.

நந்திவர்ம பல்லவனால் அமைக்கப்பெற்ற கோயில். மார்க்கண்டேயரை காப்பாற்றுவதாக உறுதியளித்து அருள் புரிந்த தலம். மூவர் பாடல் பெற்ற தலம். (திருச்சி மாவட்டம்)





**122. முக்கீச்சரம்(உறையூர்பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில்)**

திருச்சி நகரின் ஒரு பகுதி. திருச்சி ஜங்ஷனிலிருந்து ஏராளமான பேரூந்து உண்டு.

உதங்க முனிவருக்கு இறைவன் ஐந்து காலங்களில் ஐந்து வண்ணங்களோடு காட்சி நல்கிய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (திருச்சி மாவட்டம்)

**123. திரிச்சிராப்பள்ளி (திருச்சிராப்பள்ளி தாயுமானவர் திருக்கோயில்)**

நகரின் மையப்பகுதியான மலைக்கோட்டையில் அமைந்த தலமாகும்.

பெண்ணுக்கு மகப்பேறு காலத்தில் தாயாக வந்து உதவி புரிந்த தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம். (திருச்சி மாவட்டம்)

**124. திரு எறும்பியூர்(திரு வெறும்பூர் எறும்பீஸ்வரர் திருக்கோயில்)**

திருச்சி-தஞ்சை சாலையில் திருச்சிக்கு அண்மையில் அமைந்துள்ள தலமாகும்.

இந்திரனும், தேவர்களும், எறும்பு வடிவங்கொண்டு வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. (திருச்சி மாவட்டம்)

**125. திருநெடுங்களம் (நித்திய சுந்தரேசுவரர் திருக்கோயில்)**

திருச்சி-மெயின் கார்டு கேட்டிலிருந்து பேரூந்து உண்டு. திருச்சி-தஞ்சை சாலை துவாக்குடியிலிருந்து 4 கி.மீ. தொலைவு. சம்பந்தர் பாடல் பெற்றது. (திருச்சி மாவட்டம்)

**126. மேலைத் திருக்காட்டுப்பள்ளி (திருக்காட்டுப்பள்ளி அக்னீஸ்வரர் திருக்கோயில்)**

திருவையாறு-கல்லணை சாலையில் திருக்காட்டுப்பள்ளி அமைந்தள்ளது.

திருமால் பிரம்மன்,சூரியன், ஆகியோர் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர், பாடல் பெற்ற தலம்.(தஞ்சை மாவட்டம்)

**127. திரு ஆலம்பொழில் (திருவாலம்பொழில் ஆத்மநாதேசுவரர் திருக்கோயில்)**

திருக்கண்டியூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளிக்குச் செல்லும் சாலையில் உள்ள தலம். திருவையாற்றிலிருந்து பூதலூர் வழியாக திருச்சி செல்லும் பேரூந்தில் இத்தலத்திலேயே இறங்கலாம்.

அஷ்ட வசுக்கள் வழிப்பட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**128. திருப்பூந்துருத்தி (புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்)**
திருக்கண்டியூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளிக்கு செல்லும் சாலையில் கண்டியூரை அடுத்துள்ள தலம். திருக்கண்டியூரிலிருந்து 3 கி.மீ. தொலைவு.
அப்பர் உழவாரத் தொண்டு செய்த தலம் என்று எண்ணி காலால் மிதிக்க அஞ்சி வெளியில் நின்ற சம்பந்தருக்கு நந்தியை விலகி நிற்குமாறு அருளிய தலம். சம்பந்தரின் பல்லக்கை அப்பர் தோளில் சுமந்த தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**129. திருக்கண்டியூர் (பிரமசிரக்கண்டீஸ்வரர் திருக்கோயில்)**
தஞ்சை–திருவையாறு சாலையிலுள்ளது. தஞ்சையிலிருந்த 9 கி.மீ. திருவையாற்றிலிருந்த 3 கி.மீ. தொலைவு.
அட்ட வீரத் தலங்களில் ஒன்று. பிரமன் சிரத்தை தம் சூலத்தால் கண்டனம் செய்த தலம். சூரியன் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர், பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**130. திருச்சோற்றுத்துறை(சோற்றுத்துறைநாதர் கோயில்)**
திருவையாற்றிலிருந்து செல்லலாம். குடமுருட்டி ஆற்றின் கரையிலுள்ள தலம்.
அடியவர்களின் பசிதீர உணவு தரும் தலம். கௌதமர், இந்திரன் வழிபட்ட தலம்.மூவர் பாடல் பெற்றது.(தஞ்சை மாவட்டம்)

**131. திருவேதிகுடி (வேதபுரீசுவரர் திருக்கோயில்)**
திருக்கண்டியூரிலிருந்து 1 கி.மீ. தொலைவு. தஞ்சாவூர்–திருவையாறு சாலையிலுள்ள தலம்.
பிரமன் பூசித்த தலம், வேதம் வழிபட்ட தலம், சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம்.(தஞ்சை மாவட்டம்)

**132. தென்குடித் திட்டை (திட்டை வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம்–திருக்காவூர் பேருந்து இவ்வழியே செல்கிறது. வசிட்டர், பிரம்மன், திருமால், ஆதிசேஷன் வழிபட்ட தலம். உலகப் பிரளய காலத்தில் இப்பகுதி திட்டாகத் தோன்றியதென்றும்,





இறைவன் சுயமாக வெளிப்பட்டு அருள் புரிந்தார் என்பது வரலாறு. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**133. திருப்புள்ளமங்கை (பசுபதிகோயில் பசுபதீஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் –தஞ்சாவூர் இரும்புப் பாதையில் பசுபதிகோயில் புகைவண்டி நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவு. தஞ்சையிலிருந்து பேருந்து உண்டு.
அமுதத்தை கடைந்தபோது தோன்றிய விஷத்தை இறைவன் அமுது செய்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**134. சக்கரப்பள்ளி (ஐயம்பேட்டைசக்ரவாகேஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம்– தஞ்சாவூர்சாலையில் சற்று உள்ளடங்கி இத்தலமுள்ளது.
திருமால் வழிபட்டு சக்கராயுதம் பெற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**135. திருக்கருகாவூர் (திருக்களாவூர் கர்ப்பபுரீஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம்-மிலட்டூர் வழியாக தஞ்சாவூர் செல்லும் சாலையிலுள்ளது. தஞ்சையிலிருந்து பேருந்து உள்ளது.
பிரமன், கௌதமர், சந்திரன், வழிபட்ட தலம். இத்தலத்தை வழிபடும் பெண்களுக்கு சுகப் பிரசவம் உண்டாகும். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**136. திருப்பாலைத்துறை (பாலைவனேசுவரர் திருக்கோயில்)**
கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையில்சென்றால் இத்தலத்தை அடையலாம். குடமுருட்டி ஆற்றின் கரையில் உள்ளது. பாபநாசம் நிலையத்திலிருந்து 1 கி.மீ. சென்றால் இத்தலத்தினை அடையலாம்.
தௌமிய முனிவரின் ஆலோசனைப்படி அருச்சுனன் இத்தலத்திற்கு வந்துவழிபட்டு வில்வித்தை நுட்பங்களை கற்றான். தாருகா முனிவர்கள் இறைவனை அழிப்பதற்காக புலியினை ஏவ இறைவன் அப்புலியின்தோலை உரித்து அணிந்துகொண்ட தலம். அப்பர் பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்டம்)

**137. திரு நல்லூர் (பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில்)**
தஞ்சை-கும்பகோணம் சாலையில் சென்று பிரிகின்ற வலங்கைமான் சாலையில் 2 கி.மீ. சென்று இத்தலத்தை அடையலாம்.
அப்பருக்கு திருவடி சூட்டிய, அமர்நீதி நாயனாரை ஆட்கொண்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**138. ஆவூர்ப்பசுபதீச்சரம் (ஆவூர் பசுபதீஸ்வரர் கோயில்)**
கும்பகோணம்-மன்னார்குடி சாலையில் வலங்கைமான் வந்து அங்கிருந்து கோவந்தகுடி வழியாக இத்தலத்தை அடையலாம். கும்பகோணத்திலிருந்து பேருந்து உண்டு.
வசிட்டரின் சாபம் பெற்ற காமேதனு பிரமனின் அறிவுரைப்படி இங்கு வழிபட்டு சாபம் நீங்கிய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**139. திருச்சத்தி முற்றம் (சத்திமுத்தம் சிவக்கொழுந்தீசர் திருக்கோயில்)**
கும்பகோணம்- ஆவூர் நகரப் பேருந்தில் சென்றால் தலத்தை அடையலாம்.
இறைவனை தேவிவழிபட்டு தழுவி முத்தமிட்ட தலம். அப்பர் பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்ட்ம்)

**140. பட்டீச்சரம் (பட்டீஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் ஆவூர் சாலையில் சென்று இத்தலத்தினை அடையலாம். சக்திமுத்தம் இதன் அருகில் உள்ளது.
சம்பந்தருக்கு இறைவன் முத்துப்பந்தர் அருளிய தலம். காமதேனுவின் புதல்வியருள் பட்டி பூசித்த தலம். விசுவாமித்திரர் பிரம்மரிஷி பட்டம் பெற்றது இத் தலத்தில்தான். மார்க்கண்டேயர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**141. பழையாறை வடதளி (பழையாறை சோமேசர் திருக்கோயில்)**
கும்பகோணம் – ஆவூர் பாதையில் முழையூர் சென்று அவ்வழியாக இத்தலத்தை அடையலாம்.
அப்பர் உண்ணா விரதமிருந்த தலம். மங்கையர்க்கரசி ,அமர்நீதி நாயனார் அவதரித்த தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**142. திருவலஞ்சுழி (வலஞ்சுழிநாதர் திருக்கோயில்)**
சுவாமி மலைக்குப் பக்கத்திலுள்ள தலம். கும்ப் கோணத்திலிருந்து





பேருந்து உண்டு. காவேரி வலமாக சுழித்துச் செல்லுகின்ற இடம்.
ஆதிசேஷன், திருமால், பிரம்மா வழிபட்ட தலம். வெள்ளைப் பிள்ளையாரே இத்தலத்தின் சிறப்பு மூர்த்தியாவர். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**143. குடமூக்கு (கும்பகோணம் கும்பேசுவரர் திருக்கோயில்)**
தஞ்சாவூரிலிருந்து 39 கி.மீ. தொலைவு கும்பகோணம்.
பிரமனின் வேண்டுகோளுக்கிணங்கி இறைவன் தந்த அமுதகலசம் தங்கிய இடமாதலால் இத்தலம் கும்பகோணம் எனப் பெயர் பெற்றது. 12 வருடங்களுக்கொருமுறை இடம்பெறும் மகாமகம் மிகவும் சிறப்பானது. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**144. குடந்தைக் கீழ்க்கோட்டம் (நாகே சுவரசுவாமி திருக்கோயில்)**
கும்பகோணம் நகரில் அமைந்துள்ள தலமாகும்.
நரகாசுரன், சூரியன் வழிபட்ட தலம், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**145. குடந்தைக்காரோணம் (கும்பகோணம் சோமேசர் திருக்கோயில்)**
கும்பகோணத்தின் பொற்றாமரைக்குளத்தின் கீழ்க்கரையில் உள்ள தலம்.
மகாசங்கார காலத்தில் ஆன்மாக்களை இறைவன் ஐக்கியமாக்கி கொண்ட தலம் காரோணம் எனப்படும், அம்பிகை இறைவனை ஆரோகணித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**146. நாகேசுவரம்( நாகநாதசுவாமி திருக்கோயில்)**
கும்பகோணத்திற்கு வெகு அருகாமையில் உள்ளது.
சேக்கிழார் திருப்பணி செய்த தலம். ராகு கிரகத்திற்குரிய தலம். மூவர் பாடல் பெற்றது (தஞ்சை மாவட்டம்)

**147. திருவிடை மருதூர் (மகாலிங்கேஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை - கும்பகோணம் பேருந்துச் சாலையிலுள்ள தலம்
வரகுண பாண்டியனுக்கு பிரமகத்தி தோஷம் நீங்கியதலம் . மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**148. தென்குரங்காடு துறை (ஆபத்சகாயஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை-கும்பகோணம் சாலையில் உள்ள தலம். தென்னலக்குடியிலிருந்தும் 3 கி.மீ. தொலைவு. ஆடுதுறை பஸ் நிலையத்திலிருந்து கும்பகோணம் சாலையோரத்தில் வரும் குளத்தோடு இடப்புறமாக திரும்பி வலப்பக்கவீதி திரும்பினால் தலம் தென்படும்.
சுக்ரீவன் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது (தஞ்சை மாவட்டம்)

**149. திருநீலக்குடி (தென்னலக்குடி மனோக்ஞநாதசுவாமி திருக்கோயில்)**
கும்பகோணம்-காரைக்கால் சாலையில் கும்பகோணத்தை அடுத்துள்ளது. ஆடுதுறையிலிருந்தும் வரலாம்.
பாற்கடலில் அமுதுகடைந்த காலத்தில் தோன்றிய நஞ்சையுண்டு இறைவன் நீலகண்டராக எழுந்தருளிய தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**150. வைகல் மாடக்கோயில் (வைகல்நாதர் திருக்கோயில்)**
கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் பாதையில் திருநீலக்குடி தாண்டி பழியஞ்சிய நல்லூர் கூட்ரோடு எனுமிடத்தில் வலப்புறமாகப் பிரிந்து செல்லும் சாலையில் நாட்டார் வாய்க்காலைக் கடந்து பழியஞ்சிய நல்லூரை அடைந்து மேலும் 2 கி.மீ. சென்றால் தலத்தை அடையலாம்.
பிரமன் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**151. திருநல்லம் (கோனேரிராஜபுரம் பூமீஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் - வடமட்டம், ஆடுதுறை - வடமட்டம் செல்லும் பேருந்துகளில் சென்று கோனேரிராஜபுரம் கூட்ரோடில் இறங்கி 1 கி.மீ. நடந்து சென்றால் ஊரையடையலாம்.
சம்பந்தரின் வாக்குக்கேற்ப அந்தணர்கள் மிகுதியாக வளத்தோடு வாழ்கின்ற ஊராகத் திகழ்கின்றது. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**152. திருக்கோழம்பம் (திருக்குழம்பியம் கோழம்பநாதர் திருக்கோயில்)**
கும்பகோணம்- காரைக்கால் சாலையில் திருநீலக்குடியை அடுத்துள்ள எஸ். புத்தூர் வந்து அங்கிருந்து தலத்தினை அடையலாம்.





பசுவின் காற்குளம்பு இடறியபோது வெளிப்பட்ட மூர்த்தி இத்தலத்தில் உள்ளார். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**153. திருவாவடுதுறை (மாசிலாமணீசுவரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை – கும்பகோணம் சாலையில் சென்று இத்தலத்தை அடையலாம். சாலையில் ஆதின வளைவு உள்ளது.
இறைவி பசு வடிவில் வழிபட்ட தலம், சம்பந்தர் தன் தந்தையின் வேள்விக்காக பொற்கிளி பெற்றது, திருமூலர் திருமந்திரம் அருளிய தலம். திருமாளிகைத்தேவர் பல அற்புதங்களை நிகழ்த்திய தலம். சேரமான் பெருமான் நாயனார் ஆகியோர் வழிபட்ட தலம். மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**154. திருத்துருத்தி (குத்தாலம் உக்தவேதீஸ்வரர் ஆலயம்)**
மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையிலுள்ள தலம்.
சுந்தரருக்கு உண்டான உடற்பிணி இத்தலத்தீர்த்தத்தில் நீராட நீங்கியது. மூவர் பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்டம்)

**155. திருவழுந்தூர் (தேரழுந்தூர் வேதபுரீஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை – கும்பகோணம் சாலையில் வந்து, கோமல்ரோடில் திரும்பிச் சென்றால் மூவலூரையடுத்துத் திரு அழுந்தூர் வருகிறது.
கம்பர் அவதரித்த ஊர், அகத்தியர் இறைவனை வழிபடும் போது அதை யறியாத மன்னன் வான வெளியில் செலுத்திய தேர் அழுந்திய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**156. மயிலாடுதுறை (மயூரநாதசுவாமி திருக்கோயில்)**
கும்பகோணத்திற்கு அடுத்துள்ள நகர்.
அம்பாள் மயில் வடிவில் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**157. திருவிளநகர் (உசிரவனேஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் பொறையாறு சாலையில் 6 கி.மீ. தொலைவிலுள்ளது.
ஆற்று வெள்ளத்தை கடக்க முடியாத சம்பந்தர் இறைவனை வேண்ட, இறைவன் வேடன் போல் வந்து அவரை அக்கரையில்

சேர்த்து பின் மாயமாக மறைந்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

158 **திருப்பறியலூர் (கீழ்ப்பரசலூர் வீரட்டேஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை-தரங்கம்பாடி பாதையில் செம்பொன்னார் கோயிலை அடைந்து அவ்வூர் மெயின் ரோடில் நல்லாடை என்று கை காட்டும் பாதையில் வலது புறம் சென்று பரசலூர் என்று கைகாட்டி இடத்திலிருந்து திரும்பி 2.கி.மீ. சென்றால் தலத்தை அடையலாம்.
அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று, வீரபத்திரரை ஏவித் தக்கனை சம்ஹரித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

159. **திருச்செம்பொன்பள்ளி (செம்பனார் கோயில் சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறையிலிருந்து பொறையாறு செல்லும் பேருந்துப் பாதையில் உள்ளது.
இத்தலம் தாக்ஷாயணிக்கு அருள் புரிந்ததும், வீரபத்திரர் தோன்றியதுமாகிய சிறப்பினையுடையது. இந்திரன் விருத்திராசுரனைக் கொல்ல வச்சிராயுதம் பெற்ற தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

160. **திருநனிபள்ளி (புஞ்சை நற்றுணையப்பர் திருக்கோயில்)**
மயிலாடுதுறையிலிருந்து செல்லலாம். செம்பனார் கோவிலுக்கு அருகில் உள்ளது.
சம்பந்தரின் தாயார் பகவதியம்மையார் அவதரித்த பதி. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்).

161. **திருவலம்புரம் (மேலப்பெரும்பள்ளம் வலம்புரநாதர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை பூம்புகார்ச்சாலையில் சென்று காவிரி கடைமுக அணையை கடந்தும், சீர்காழி – காவிரி பூம்பட்டினம் பேருந்தில் மேலையூர் சென்று அங்கிருந்தும் இத்தலத்தை அடையலாம்.
திருமால் வழிபட்டு வலம்புரிச் சங்கினை பெற்றதலம் மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்.)





162 **திருத்தலைச்சங்காடு (தலைச்சங்காடு சங்காரண்யேஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறையிலிருந்து ஆக்கூர் வழியாகப் பூம்புகார் பாதையில் சென்று தலத்தினை அடையலாம். சீர்காழியிலிருந்து ஆக்கூர் செல்லும் பாதையிலும் சென்று இத்தலத்தைச் சேரலாம்.
திருமால் வழிபட்டு பாஞ்சசன்னிய சங்கைப்பெற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

163. **ஆக்கூர் (தான்தோன்றீசுவரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறையிலிருந்தும், சீர்காழியிலிருந்தும் ஆக்கூருக்கு நகரப் பேருந்து செல்கிறது.
சிறப்புலி நாயனார் அவதரித்த பதி. கபிலதேவ நாயனார் 11ம் திருமுறையில் இத்தலத்தைப் பாடியுள்ளார். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

164. **திருக்கடவூர் (திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை – தரங்கம் பாடி பேருந்துச் சாலையில் இத்தலம் உள்ளது. அடிக்கடி பேருந்து வசதி உண்டு.
அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று. மார்க்கண்டேயருக்காக இறைவன் எமனை உதைத்தருளிய தலம். குங்கிலியக்கலய நாயனார், காரி நாயனார் வாழ்ந்த தலம். அபிராமி அந்தாதி பாடப்பட்ட அற்புதப் பதி. மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

165. **திருக்கடவூர் மயானம் (பிரமபுரீசுவரர் திருக்கோயில்)**
திருக்கடவூருக்கு நேர் கிழக்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறை – வேப்பஞ்சேரி பேருந்து இவ்வழியே செல்லும்.
சிவன் பிரம்மனை நீறாக்கி மீண்டும் உயிர்பித்து அவருக்கு படைப்புத் தொழிலை அருளிய தலம். மூவர் பாடல் பெற்றதலம். (தஞ்சை மாவட்டம்)

166. **வேட்டக்குடி (சுந்தரேசுவரர் திருக்கோயில்)**
காரைக்காலுக்கு பக்கத்தில் உள்ளது. தரங்கம்பாடி – நாகபட்டினம் சாலையில் பூவம் கிராமத்தை தாண்டி வரிச்சுக்குடி கிளைப்பாதையில் 2 கி. மீ. சென்றால் தலத்தை அடையலாம். அருச்சுனன் தவம் செய்ய இறைவன் வேட வடிவில் அருள்

செய்ததாக புராண வரலாறு. சம்பந்தர் பாடல் பெற்றது. (காரைக்கால் வட்டம்)

**167. திருத்தெளிச்சேரி (கோயிற்பத்து பார்வதீஸ்வரர் திருக்கோயில்)**
காரைக்கால் நகரின் ஒரு பகுதியில் உள்ளது.
இத்தலம் தவம் செய்வதற்கு உகந்த இடம் என்பது புராண வரலாறு. புத்த நந்தியின் தலையில் இடிவிழச்செய்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (காரைக்கால் வட்டம்)

**168. தருமபுரம் (யாழ்மூரிநாதர் திருக்கோயில்)**
திருநள்ளாற்றிலிருந்து காரைக்கால் செல்லும் பேருந்தில் 2 கி. மீ. சென்று, வலப்பால் மாதா கோயில் உள்ள இடத்தில் வலப்புறமாக பிரியும் பாதையில் சென்றால் கோயிலை அடையலாம்.
திருநீலகண்டயாழ்ப்பாணரின் அவதாரத்தலம். எமன் வழிபட்டதலம். சம்பந்தரின் இசை, நீலகண்ட யாழ்ப்பாணரின் இசையில் அடங்காமையை வெளிப்படுத்திய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (காரைக்கால் வட்டம்)

**169. திருநள்ளாறு (தர்ப்பாரண்யேசுவரர் திருக்கோயில்)**
காரைக்கால் - கும்பகோணம் சாலையில் காரைக்காலிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ளது.
சிவத்தலமாயினும் இங்குள்ள சனிபகவான் சந்நிதி மிகவும் பிரசித்தி பெற்றது. இடையனுக்கு இறைவன் காட்சி தந்த தலம். மூவர் பாடல் பெற்றது. (காரைக்கால் வட்டம்)

**170. கோட்டாறு (கொட்டாரம் ஐராவதீஸ்வரர் திருக்கோயில்)**
காரைக்குடி - கும்பகோணம் சாலையில் திருநள்ளாறு தாண்டி அப்பகரத்தூர் சென்று, காளி கோயிலை அடைந்து, அவ்விடத்திலிருந்து பிரிந்து செல்லும் பாதை வழியாக - வயல் வழியாக 2 கி. மீ. நடந்து இக்கோயிலை அடையலாம்.
வெள்ளையானை வழிபட்ட தலம் சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)





**171. அம்பர் பெருந்திருக்கோயில் (அம்பல்பிரமபுரீசுவரர் திருக்கோயில்)**
அம்பர் மாகாளாத்திலிருந்து அதே சாலையில் மேலும் 1 கி. மீ. சென்றால் சாலையோரத்தில் இத்தலம் தென்படும்.
பிரமன் வழிபட்ட தலம், சோமாசிமாற நாயனார் வசித்த பதி. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**172. அம்பர் மாகாளம் (திருமாகாளம் மாகாளேஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை - திருவாரூர் சாலையில் பேரளம் தாண்டிப் பூந்தோட்டம் சென்று இடப்புறமாக ரயில்வே கேட்டைத்தாண்டி நேரே 4 கி. மீ. சென்றால் கோயிலை அடையலாம்.
சோமாசிமாறநாயனார் சோமயாகஞ் செய்த தலம் .சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**173. திருமீயச்சூர் (மேக நாதர் திருக்கோயில்)**
(இக்கோயிலுக்கான விளக்கம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.)

**174. திருமீயச்சூர் இளங்கோயில் (சகல புவனேஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை - திருவாரூர் சாலையில் பேரளம் வந்து இடப்புறமாகப் பிரியும் காரைக்கால் பாதையிற் செல்லாமல், வலப்புறமாகத் திரும்பும் திருவாரூர் சாலையில் திரும்பி சிறிது தூரம் சென்றதும் கடை வீதியில் பிரிந்து செல்லும் கம்பூர் பாதையில் சென்று ரயில்வே கேட்டைத் தாண்டி 2 கி.மீ. சென்றால் மீயச்சூரை அடையலாம். மீயச்சூர் கோயிலுக்குள்ளேயே இளங்கோயில் உள்ளது.
மீயச்சூர் கோயில் : சூரியன் வழிபட்டது. சம்பந்தர் பாடல் பெற்றது.
மீயச்சூர் இளங்கோயில் : காளி வழிப்பாட்டதலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**175. திலதைப்பதி (செதலபதி முத்தீஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை - திருவாரூர்சாலையில் பூந்தோட்டம் வந்து, அரிசிலாற்றுப் பாலங்கடந்து 2 கி. மீ. நடந்த பின்பு இடப்புறமாக வரும் இறக்கத்தில் இறங்கி மண்பாதையில் சிறிது தூரம் நடந்து செதலபதி அடையலாம்.

இராம லட்சுமணர்கள் தசரதனுக்கும், சடாயுவுக்கும் திலதர்ப்பணம் செய்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**176. திருப்பாம்புரம் (பாம்புரேஸ்வரர் திருக்கோயில்)**
திருமீயச்சூருக்கு பக்கத்தில் உள்ளது. காரைக்கால் கும்பகோணம் (வழி) பேரளம் சாலையில் கற்கத்தி வந்து அங்கிருந்து திரும்பி 2 கி.மீ. அச்சாலையில் வந்தால் ஊரையடையலாம்.
ஆதிசேஷன் வழிபட்ட தலம். நாகதோஷம் நீங்கவும், மகப்பேறு வாய்க்கவும், ராகு, கேது போன்ற சந்தர்ப்ப தோஷங்கள் விலகவும் இத்தலம் சிறந்தது. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**177. சிறுகுடி (சூட்சமபுரீசுவரர் திருக்கோயில்)**
பேரளத்தையடுத்துள்ள பூந்தோட்டம் வந்து அரசலாற்றுப் பாலத்தைக் கடந்து வலப்புறமாகப் பிரியும் கும்பகோணம், நாச்சியார் கோயில் சாலையில் சென்று கடகம்பாடி என்னும் ஊரையடைந்து அங்கிருந்து வலப்புறமாக பிரிந்து சிறுகுடிக்குச் செல்லும் சாலையில் 3 கி. மீ. சென்றால் தலத்தை அடையலாம்.
பண்ணன் எனும் கொடை வள்ளல் இத்தலத்தில் பிறந்தான். தேவி கைபிடியளவு மணலால் பிடித்து வைத்து மங்கள தீர்த்தம் உண்டாக்கி வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**178. திருவீழிமிழலை (நேத்ரார்ப்பணேஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறை - திருவாரூர் இரும்புப் பாதையில் பேரளத்தையடுத்துள்ள பூந்தோட்டம் நிலையத்திலிருந்து 10 கி. மீ. தொலைவில் உள்ள தலம். திருவாரூர், கும்பகோணத்திலிருந்து பேருந்து உண்டு.
திருமால் சக்கரம் வேண்டி பூசிக்கும்போது ஒருமலர் குறைய தன் கண்ணையே மலராக இட்டு அர்சித்ததலம். சம்பந்தருக்கும் அப்பருக்கும் இறைவன் படிக்காசு வழங்கி அடியாருக்கு அமுது படைத்த தலம். மூவர் பாடல் பெற்ற தலம் (தஞ்சை மாவட்டம்)

**179. வன்னியூர் (அன்னியூர் அக்னீஸ்வரர் திருக்கோயில்)**
திருவிழிமிழலையிலிருந்து 4 கி. மீ. தொலைவு. கும்பகோணம் அன்னியூர் பேருந்து செல்லும்.





காத்யாயணி மகளாக அம்பாள் தோன்றி இறைவனை மணக்க இத்தலத்தில் தவமிருந்து அவ்வெண்ணம் ஈடேறப் பெற்றார். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**180. கருவிலிக்கொட்டிடை (கருவேலி சற்குணநாதேஸ்வரர் திருக்கோயில்)**
பூந்தோட்டத்திலிருந்து நாச்சியார் கோயில் செல்லும் பேருந்துச் சாலையில் கூந்தலூரையடைந்து அரிசியாற்றுப் பாலத்தைக் கடந்து சென்றால் தலத்தையடையலாம்.
இந்திரன், உருத்திரகணத்தர் வழிபட்டது. சோழர்களின் திருப்பணி பெற்ற தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**181. பேணுபெருந்துறை (திருப்பந்துறை சிவானந்தேஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் – காரைக்கால் பேருந்து பாதையில் அமைந்துள்ள தலம்.
பிரமன், தேவி, முருகன் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**182. திருநறையூர்ச்சித்தீச்சரம் (திருநறையூர் சித்தநாதேஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் – நாச்சியார் கோயில் சாலையில் வந்து நாச்சியார் கோயிலின் முற்பகுதியாகிய திருநறையூர் இறங்கிக் கோயிலையடையலாம்.
துர்வாச முனிவரால் பறவை உருவச்சாபம் பெற்ற நரன் வழிபட்டதால் இத்தலத்திற்கு நரபுரம் என்றும் பெயர் .சம்பந்தர், சுந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**183. அரிசிற்கரைப்புத்தூர் (அழகாபுத்தூர் சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணத்திலிருந்து நாச்சியார் கோயிலுக்கு செல்லும் பேருந்து பாதையில் சென்றால் திருநறையூருக்கு முன்னாலேயே உள்ள இத்தலத்தையடையலாம்.
புகழ்த்துணைநாயனார் முத்திப்பேறு பெற்ற தலம். மூவர் பாடல் பெற்ற தலம் (தஞ்சை மாவட்டம்)

**184. சிவபுரம் (சிவகுருநாதசுவாமி திருக்கோயில்)**
கும்பகோணம் திருவாரூர் நெடுஞ்சாலையில் சாக்கோட்டை

சென்று மலையப்பநல்லூர் தாண்டி 1 கி. மீ. சென்றால் சிவபுரத்தை அடையலாம்.
திருமால் வெள்ளைப் பன்றி வடிவிலிருந்து பூசித்த தலம். குபேரன், இராவணன் வழிபட்ட தலம். இவ்வூரில் பூமிக்கடியில் சிவலிங்கம் இருப்பதால் சம்பந்தர் அங்கப்பிரதட்சணம் செய்து சுவாமியை தரிசனம் செய்த தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம். (தஞ்சை மாவட்டம்)

**185. திருக்கலய நல்லூர் (சாக்கோட்டை அமிர்தகலேஸ்வரர் திருக்கோயில்)**
கும்பகோணம் - மன்னார்குடி பேருந்துச் சாலையில் உள்ள தலம். கும்பகோணத்திலிருந்து 5 கி.மீ. தொலைவு.
இப்பகுதியில் பௌத்தர் வாழ்வதால் சாக்கியர் கோட்டை எனப்பட்டது. ஊழிக்காலத்தில் உயிர்களை அடக்கிய கலயம் இங்கு தங்கியதால் கலய நல்லூர் எனப்பட்டது. சுந்தரர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**186. கருக்குடி (மருதாந்தநல்லூர் சற்குணலிங்கேசுவரர் திருக்கோயில்)**
கும்பகோணம் : மன்னார்குடி சாலையிலுள்ளது.
இராமேசுவர வரலாறு இங்கும் சொல்லப்பட்டு அநுமத்லிங்கம் என்ற பெயரால் வழிபடப் பெறுகிறது. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**187. திருவாஞ்சியம் (ஸ்ரீவாஞ்சியம் வாஞ்சிநாத சுவாமி திருக்கோயில்)**
நன்னிலம் - கும்பகோணம் பேருந்தில் செல்வோர் அச்சுத மங்கலத்தில் இறங்கித் திருவாரூர் பாதையில் 2 கி.மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம்.
காசிக்கு சமமாக வழிபடும் தலங்களுள் இது ஒன்றாகும். திருமால் சிவனை வழிபட்டு, இலட்சுமி தம்மிடம் வாஞ்சையுடன் இருக்குமாறு வரம் பெற்ற தலம். எமன் வழிபட்ட தலம். எமனுக்கு இங்கு தனிக்கோயிலுள்ளது. இத்தலத்தில் இறப்பவர்க்கு எமவாதனையில்லை. மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)





**188. நன்னிலம் (மதுவனேஸ்வரர் திருக்கோயில்)**
மயிலாடுதுறையிலிருந்து - திருவாரூர் செல்லும் பேருந்து இவ்வழியே செல்கிறது. நன்னிலம் அரசு மருத்துவமனை எதிரில் செல்லும் வழியில் சென்றால் கோயிலை அடையலாம்.
விருத்திராசுரனின் துன்பம் தாளாது தேவர்கள் தேனீக்களாய் மாறியிருந்து வழிபட்ட தலம். சுந்தரர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**189. கொண்டீச்சரம் (திருக்கண்டீஸ்வரம் பசுபதீஸ்வரர் திருக்கோயில்)**
நன்னிலம் - நாகபட்டினம் சாலையில் வருவோர் நன்னிலத்திற்கு முன் தூத்துக்குடி (பஸ் ஸ்டாப்) எனுமிடத்தில் பிரியும் பாதையில் உள்ளே சென்றால் தலத்தை அடையலாம்.
காமதேனு வழிபட்ட தலம். உமை பசுவின் வடிவில் தன் கொம்பால் பூமியை கிளறியவாறே இறைவனைத் தேடியபோது குருதி பெருகி இறைவன் வெளிபட்டார். பசு தன்பாலையே பெருமான் மீது சொரிந்து புண்ணை ஆற்றியது என்பது தல வரலாறு. அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**190. திருப்பனையூர் (பனையூர் சௌந்தரேஸ்வரர் திருக்கோயில்)**
பேரளம் - திருவாரூர் சாலையில் சன்னாநல்லூரைக் கடந்து மேலும் சென்று பனையூர் கிளைப்பாதையில் 1 கி.மீ. சென்றால் தலத்தை அடையலாம்.
கரிகாலச் சோழன் வளர்ந்த ஊர். சுந்தரருக்கு இறைவன் நடனக் காட்சியருளிய தலம். சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**191. திருவிற்குடி (வீரட்டானேசுவரர் திருக்கோயில்)**
நாகபட்டினம் - திருவாரூர் (வழி) காரைக்கால் செல்லும் பேருந்தில் விற்குடி வந்து கூட்ரோடிலிருந்து 1 கி.மீ. சென்று கோயிலை அடையலாம். விற்குடி ரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவு.
அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று. சலந்தரனை சம்ஹரித்த தலம். சலந்தரன் மனைவியை திருமால் துளசியாக ஏற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**192. திருப்புகலூர் (அக்னீபுரீஸ்வரர் திருக்கோயில்)**
நன்னிலம், நாகபட்டினம் சாலையிலுள்ள தலம். சாலையோரத்தில்

கோயில் வளைவு உள்ளது. அதனுள் சென்றால் கோயிலை அடையலாம்.
அப்பர் இறைவனடி சேர்ந்த தலம். முருக நாயனார் அவதரித்த தலம். சுந்தரருக்கு இறைவன் செங்கற்களை பொன்னாக மாற்றிய தலம். மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**193. திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் (வர்த்தமானலிங்கம் திருக்கோயில்)**
திருப்புகலூர் கோயிலுக்குள்ளேயே இக்கோயில் அமைந்துள்ளது. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**194. இராமனதீச்சரம் (திருக்கண்ணபுரம் இராமனதீஸ்வரர் திருக்கோயில்)**
திருச்செங்காட்டங்குடியிலிருந்து 3 கி.மீ. தொலைவு. நன்னிலம். திருப்புகலூரிலிருந்து பேருந்து உண்டு.
இராமர் வழிபட வரும்போது நந்தி தடுத்ததாகவும், அம்பாள் கருணை கொண்டு நந்தியை தடுத்து காட்சி தந்ததாகவும் தல வரலாறு. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**195. திருப்பயற்றூர் (திருப்பயத்தங்குடி முக்தபுரீஸ்வரர் திருக்கோயில்)**
திருவிற்குடிக்கு அண்மையிலுள்ள தலம். திருவாரூர் – மயிலாடுதுறை சாலையில் மேலப் பூதனூர் அடைந்து அங்கிருந்து திருமருகல் சாலையில் சென்றால் தலத்தினை அடையலாம்.
வணிகனின் சுங்கமில்லாத மிளகு பொதிகளை பயறு மூட்டைகளாக மாற்றிய தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**196. திருச்செங்காட்டங்குடி (உத்தராபதீஸ்வரர் திருக்கோயில்)**
திருவாரூர்–திருமருகல் சாலையிலிருந்து சந்தைப் பேட்டை வழியாக திருமருகல் கால் நடை மருத்துவமனையை தாண்டி 3 கி.மீ. சென்றால் தலத்தை அடையலாம். திருவாரூரிலிருந்து பேருந்து உண்டு.
சிறுத்தொண்டரிடம் பிள்ளைக்கறியமுது கேட்டு அருள் புரிந்த தலம். பிள்ளையார் கயமுகாசுரனை கொன்ற பழிதீர வழிபட்ட தலம் சம்பந்தர், அப்பர பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)





**197. திருமருகல் (இரத்தின கிரீஸ்வரர் திருக்கோயில்)**
திருவாரூர் – மயிலாடுதுறை சாலையிலுள்ள தலம்.
பாம்பு கடித்து இறந்தவனை சம்பந்தர் பதிகம் பாடி உயிர் கொடுத்த தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**198. திருச்சாத்த மங்கை (சீயாத்தமங்கை அயவந்தீஸ்வரர் திருக்கோயில்)**
திருமருகல் – நாகூர் சாலையில் சீயாத்தமங்கை பிரிந்து செல்லும் சாலையில் எதிர்ப்புறமாக 1 கி.மீ. செல்ல வேண்டும்.
திருநீலநக்க நாயனாரின் அவதாரத்தலம் சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**199. நாகைக்காரோணம் (நாகபட்டினம் காயாரோகணேஸ்வரர் திருக்கோயில்**
தஞ்சாவூரிலிருந்து 79 கி.மீ. தொலைவு.
அகத்தியருக்கு திருமணக்காட்சியளித்த தலம். அதிபத்த நாயனார் அவதரித்த தலம். மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**200. சிக்கல் (நவநீதேஸ்வரர் திருக்கோயில்)**
திருவாரூர் – நாகபட்டினம் சாலையிலுள்ள தலம். நாகபட்டினத்திற்கு மிக அருகிலுள்ளது.
வசிட்டர், காமதேனுவின் வெண்ணெயினால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டு பூசைமுடிவில் அதை எடுக்க முயன்ற போது அது சிக்கிக் கொண்டதாக வரலாறு. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**201. கீழ்வேளூர் (கீவளூர் கேடிலியப்பர் திருக்கோயில்)**
திருவாரூர் – நாகபட்டினம் சாலையிலுள்ள தலம்.
அகத்தியருக்கு வலது பாத தரிசனம் தந்த தலம். முருகப் பெருமான் வழிபட்ட தலம். அவர் வழிபடும் போது ஐந்து திக்குகளிலும் காளி காவல் புரிந்ததாக வரலாறு. சம்பந்தர், அப்பர், பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**202. தேவூர் (தேவபுரீஸ்வரர் திருக்கோயில்)**
கீவளூர் – திருத்துறைப்பூண்டி சாலையிலுள்ளது. திருவாரூர் – வலிவலம் பேருந்து இவ்வழியே செல்லும்.
குபேரன் வழிபட்டு சங்க, பதுமநிதிகளை பெற்றதலம்.

விராடன் தன் மகள் உத்தரையுடன் இங்கு வந்து வழிபட்டான். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**203. திருப்பள்ளியின் முக்கூடல் (திருப்பள்ளிமுக்கூடல் முக்கோணநாதர் திருக்கோயில்)**

திருவாரூர் கடைத்தெருவிலிருந்து கேக்கரை ரோடு ரயில் பாதையை தாண்டி சிறிது தூரம் சென்று இடப்புறமாக 1 கி.மீ. சென்றால் தலத்தை அடையலாம்.

மூர்க்கரிஷி வழிபட்ட தலம். அப்பர் பாடல்பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**204. திருவாரூர் (தியாகராஜசுவாமி திருக்கோயில்)**

தஞ்சாவூரிலிருந்து சுமார் 55 கி.மி. தொலைவு.

பரவையார் அவதரித்த தலம். மனுநீதிச் சோழனுக்கு அருள் செய்த தலம், சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடிய தலம். மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**205. ஆரூர் அரநெறி (அகிலேஸ்வரர் திருக்கோயில்)**

திருவாரூர் கோயிலின் தெற்குச் சுவற்றில் உள்ளது.

நமிநந்தியடிகள் வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**206. ஆரூர்ப்பரவையுண்மண்டளி (தியாகேசர் திருக்கோயில்)**

திருவாரூர் கோயிலின் கீழவீதியில் தேரடியில் உள்ளது.

தண்டியடிகள், விறன்மிண்டர் வழிபட்டதலம் .அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**207. திருவிளமர் (விளமல், பதஞ்சலி மனோகரர் திருக்கோயில்)**

திருவாரூர் – தஞ்சாவூர் சாலையிலுள்ள திருவாரூருக்கு அடுத்துள்ள தலம்.

பதஞ்சலி முனிவர் வழிபட்ட தலம் .சம்பந்தர் பாடல் பெற்றது (தஞ்சை மாவட்டம்)

**208. கரவீரம் (கரையபுரம் கரவீரேஸ்வரர் திருக்கோயில்)**

திருவாரூர் – கும்பகோணம் சாலையில் வடகண்டம் எனும் ஊரையடுத்துள்ள தலம். வெட்டாற்றின் கரையுள்ளது.

கௌதமர் பூசித்த தலம். திருக்கண்ணமங்கை பெருமாள் கோயிலோடு இணைந்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)





**209. பெருவேளூர் (மணக்கால் ஐயன்பேட்டை அபிமுகேஸ்வரர் திருக்கோயில்)**

கும்பகோணம் – குடவாசல், திருவாரூர்ப் பேருந்து சாலையில், மணக்கால் என்ற இடத்தில் இறங்கி இடப்புறமாக 1/2 கி.மீ. சாலையில் சென்றால் கோயிலை அடையலாம்.

மோகினி வடிவெடுத்த திருமால் இறைவனை வழிபட்டு ஆண்வடிவினை பெற்ற தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**210 தலையாலங்காடு (நடனேஸ்வரர் திருக்கோயில்)**

திருவாரூர் – கும்பகோணம் பேருந்து சாலையில் தலையாலங்காடு அடைந்து (18 கி.மீ.) வாய்க்கால்கள் இரண்டைக் கடந்து சென்றால் கோயிலை அடையலாம்.

முயலகனை அடக்கி அவன் முதுகை நெரித்து இறைவன் நடனமாடிய தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**211. குடவாயில் (குடவாசல் கோணேசுவரர் திருக்கோயில்)**

திருவாரூரிலிருந்து 16 கி.மீ. தொலைவு. கும்பகோணத்திலிருந்து 15 கி.மீ. தொலைவு.

உலக பிரளய காலத்தில் இறைவன், உயிர்கள் அனைத்தையும் அமிர்த குடம் ஒன்றிலிட்டு அக்குடத்தின் வாயிலில் சிவலிங்கமாக இருந்து காத்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**212. திருச்சேறை (செந்நெறியப்பர் திருக்கோயில்)**

கும்பகோணத்திலிருந்து 15 கி.மீ. தொலைவு பேருந்து வசதி உண்டு.

சைவம், வைணவம் ஆகிய சமயங்களின் சிறப்பு வாய்ந்த தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**213. நாலூர் மயானம் (ஞான பரமேஸ்வரர் திருக்கோயில்)**

கும்பகோணம் – குடவாசல் சாலையில் திருச்சேறையை அடுத்துள்ள தலம்.

ஆபஸ்தம்பரிஷி வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**214. கடுவாய்க்கரைபுத்தூர் (ஆண்டார் கோயில் சொர்ணபுரீச வரர் திருக்கோயில்)**

குடவாசல், வலங்கைமான் பேருந்து சாலையில் இத்தலமுள்ளது காசியமுனிவன் வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்.)

**215. இரும்பூளை (ஆலங்குடி ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்)**

கும்பகோணம் – நீடாமங்கலம் சாலையிலுள்ள ஊர். பேருந்து வசதி உண்டு.

ஆலகால விஷத்தை உண்டு தேவர்களை இறைவன் காத்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**216. அரதைப்பெரும்பாழி (அரித்துவாரமங்கலம் பாதாளேஸ் வரர் திருக்கோயில்)**

தஞ்சையிலிருந்து இத்தலத்திற்கு பேருந்து வசதி உள்ளது. (வழி அம்மாபேட்டை). கும்பகோணம், மன்னார்குடி சாலையில் வெட்டாற்றைத் தாண்டி அம்மாபேட்டை சாலையில் சென்று பெருங்குடியைத்தாண்டி இத்தலத்தை அடையலாம்.

திருமால் பன்றி வடிவங் கொண்டு பள்ளம் பறித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்.)

**217. அவளிவணல்லூர் (சாட்சிநாதர் திருக்கோயில்)**

கும்பகோணம் – அம்மாபேட்டை பேருந்து இவ்வழியே செல்லும் அரித்துவாரமங்கலத்திலிருந்து 3 கி.மீ. தொலைவு.

அந்தணரின் மூத்த மகளுக்கு அம்மை போட்டு உருவம் மாறியதால் கணவன் இளையவளே என் மனைவி என கூறிய போது, இறைவன் தோன்றி அருள் புரிந்த தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**218. பரிதிநியமம் (பருதியப்பர் கோயில் பாஸ்கரேஸ்வரர் திருக்கோயில்)**

தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை பேருந்து சாலையில் மேலஉளூர் சென்று இத்தலத்தை அடையலாம். தஞ்சையிலிருந்து பேருந்து உண்டு.

சூரியன் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)





**219. வெண்ணி (கோயில் வெண்ணி வெண்ணிக்கரும்பேஸ்வரர் திருக்கோயில்)**

தஞ்சை திருவாரூர் சாலையில் சாலிய மங்கலத்தைக் கடந்து கோயில் வெண்ணியிலிருந்து 1/2 கி.மீ இடப்புறமாக சென்றால் தலத்தை அடையலாம்.

இருமுனிவர்கள் தமக்குள் மாறுபட்டுக் கூச்சலிட அவ்வழியே வந்த முசுகுந்தன் இருவரையும் சாந்தப்படுத்தி சுவாமி இருப்பதறிந்து கோயில் எடுப்பித்தான் என்பது தல வரலாறு. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**220. பூவனூர் (புஷ்பவனநாதர் திருக்கோயில்)**

மன்னார்குடி – அம்மாப்பேட்டை ; வலங்கைமான் – மன்னார்குடி பேருந்து இவ் வழியே செல்கிறது.

சுகப்பிரம்மரிஷி மலர்வனம் வைத்து வழிபட்ட தலம். விஷம் தோஷம் நீக்க வல்ல சாமுண்டீஸ்வர் சந்நிதி மிகவும் சிறப்பு வாய்ந்தது. அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**221. பாதாளேச்சரம் (பாமணி சர்ப்புரீஸ்வரர் திருக்கோயில்)**

மன்னார்குடிக்குப் பக்கத்தில் 2கி.மீ. ல் உள்ள ஊர்.

பாதாளத்திலிருந்து ஆதிசேஷன் வெளிப்பட்டு வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**222. திருக்களர் (பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோயில்)**

மன்னார்குடி–திருத்துறைப்பூண்டி சாலையில் மன்னார்குடியிலிருந்து 21 கி.மீ. தொலைவு.

பராசர முனிவன், கால பைரவர், துர்வாசர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**223. திருச்சிற்றேமம் (சித்தாய்மூர் சுவர்ணஸ்தாபனேஸ்வரர் திருக்கோயில்)**

திருவாரூர்-திருத்துறைப்பூண்டி சாலையில் ஆலத்தம் பாடியிலிருந்து 3.கி.மீ. செல்ல வேண்டும்.

பிரம்மரிஷி, சித்தர்கள் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**224. திருவுசாத்தானம் (கோயிலூர் மந்திரிபுரீஸ்வரர் திருக்கோயில்)**

முத்துப்பேட்டையிலிருந்து மன்னார் குடிசாலையில் 2 கி.மீ.

சென்றால் தலத்தை அடையலாம்.
விசுவாமித்திரருக்கு நடனக்காட்சி யருளிய தலம். இராமர் சேது அணை கட்டுவதற்காக இறைவனிடம் மந்திர உபதேசம் பெற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்.)

**225. இடும்பாவனம் (சற்குணேஸ்வரர் திருக்கோயில்)**
முத்துப்பேட்டை - வேதாரண்ய.ம் பேருந்துச் சாலையிலுள்ள தலம்.
இடும்பன் வழிபட்ட தலம். இடும்பனின் சகோதரி இடும்பையை வீமன் மணம் புரிந்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**226. கடிக்குளம் (கற்பகநாதர் குளம் கற்பகநாதர் திருக்கோயில்)**
முத்துப்பேட்டை - தேவதாரண்யம் சாலையிலுள்ள தலம்.
விநாயகர் இறைவனை வழிபட்டு மாங்கனி பெற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**227. தண்டலை நீள்நெறி (தண்டலைச்சேரி நீள்நெறிநாதர் திருக்கோயில்)**
திருவாரூர் - திருத்துறைப் பூண்டி சாலையிலுள்ள தலம். திருத்துறைப்பூண்டியிலிருந்து 3கி.மீ.
அரிவாட்டாய நாயனார் முத்தி பெற்ற தலம். சம்பந்தர் பாடியது. (தஞ்சை மாவட்டம்)

**228. கோட்டூர் (கொழுந்தீஸ்வரர் திருக்கோயில்)**
திருத்துறைப்பூண்டியிலிருந்தும், மன்னார் குடியிலிருந்தும் பேருந்து உண்டு
அரம்பையும், ஐராவதமும் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**229. திருவெண்டுதுறை (வண்டுறை வெண்டுறைநாதர் திருக்கோயில்)**
மன்னார்குடி - சேந்தங்குடி, மன்னார்குடி - வீராக்கி செல்லும் பேருந்துகள் இவ்வழியே செல்லும்.
பிருங்கிமுனிவர் வண்டு உருவில் இறைவனின் திருமேயின் இடையில் துளைத்துச் சென்று அவரை வலம் வந்ததால் அம்பிகை சாபம் தர, வண்டு உருவில் இத்தலத்தில் வழிபட்டார். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)





**230. கொள்ளம்பூதூர் (திருக்களம்பூர் வில்வாரண்யேசுவரர் திருக்கோயில்)**
கும்பகோணம், வழியாக குடவாசல் செல்லும் பேருந்தில் சென்று இத்தலத்தை அடையலாம்.
சம்பந்தர் அடியவரோடு ஓடம் ஏறி பதிகம் பாடிச்செலுத்தி மறுகரையை அடைந்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**231. பேரெயில் (ஓகைப்பேரையூர் ஜகதீஸ்வரர் திருக்கோயில்)**
திருவாரூர் - மன்னார்குடி சாலையில் கமலாபுரம் அடுத்து உள்ள மூலங்குடி வந்து அங்கிருந்து இத்தலத்தை அடையலாம். சோழநாட்டின் தலைநகரான திருவாரூரின் கோட்டையாக இத்தலம் விளங்கியது. அப்பர் பாடல் பெற்றது (தஞ்சை மாவட்டம்)

**232. திருக்கொள்ளிக்காடு (கள்ளிக்காடு அக்கீனீஸ்வரர் திருக்கோயில்)**
திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலை நெல்லிக்காவிலிருந்து தெங்கூர் சென்று கொள்ளிக்காடு செல்லும் பாதையில் 2கி.மீ. சென்று, அங்கிருந்து 3 கி.மீ. நடந்தே சென்று கீராலத்தூர் கிராமத்தை அடைந்து மேலும் அங்கிருந்து வயல் வெளியில் நடந்து சென்றால் இத்தலத்தை அடையலாம்.
சோழ மன்னனுக்கு சனிதோஷம் விலகிய தலம். இங்கு சனிபகவான் சந்நிதி விசேஷமானது. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**233. திருத்தெங்கூர் (திருத்தங்கூர் வெள்ளிமலைநாதர் திருக்கோயில்)**
திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் நெல்லிக்கா சென்று அங்கிருந்து 2 கி.மீ. சென்று இத்தலத்தை அடையலாம்.
ஊழிக்காலத்தில் கடல் பொங்கியெழுந்து அதனால் உலகம் கொள்ளப்பட்டும் இத்தலத்தில் மட்டுமே தெளிந்த நீர் தேங்கி நின்றதால் தேங்கூர் எனப்பட்டது. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**234. திருநெல்லிக்கா (நெல்லிவனேஸ்வரர் திருக்கோயில்)**
திருவாரூரிலிருந்து 14 கி.மீ. தொலைவு. பேருந்து வசதி உண்டு

துர்வாசருக்கு இறைவன் கோபத்தை நீக்கியருளிய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்.)

**235. திருநாட்டியத்தான்குடி (மாணிக்கவண்ணர் திருக்கோயில்)**
திருவாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் மாவூர்ரோடு வந்து அங்கிருந்து வடபாதி மங்கலம் செல்லும் பாதையில் சென்று இத்தலத்தை அடையலாம்.
கோட்புலி நாயனாரின் அவதாரத்தலம். அவரின் இரு புதல்விகளை சுந்தரர் தம் புதல்வியர்களாக ஏற்ற தலம். சுந்தரர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**236. திருக்காறாயில் (காறைவாசல் கண்ணாயிரமுடையார் திருக்கோயில்)**
திருவாரூர், திருநெல்லிக்கா, பேருந்து இவ்வழியே செல்லும். கபால முனிவருக்கு இறைவன் காட்சி தந்த தலம். பதஞ்சலிக்கு எழுவகைத் தாண்டவங்களையும் காட்டிய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**237. கன்றாப்பூர் (கோயில் கண்ணாப்பூர் நடுதறியப்பர் திருக்கோயில்)**
திருவாரூர் - திருத்துறைப் பூண்டி சாலையில் மாவூர் கூட்ரோடிலிருந்து பிரியும் சாலையில் மருதூருக்கடுத்துள்ள கோயில், கண்ணாப்பூர் கூட்ரோட்டின் இடப்புறமாக பிரியும் சாலையில் 1 கி.மீ. சென்று தலத்தை அடையலாம்.
வைணவனுக்கு மனைவியான சைவப்பெண் ஒருத்தி சிவலிங்க பூசை செய்வதைக் கண்டு அதனை கோடாறியால் வெட்ட இறைவன் வெளிப்பட்டு அருள் புரிந்த தலம். அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்.)

**238. வலிவலம் (இருதயகமலநாதேஸ்வரர் திருக்கோயில்)**
திருவாரூரிலிருந்து 10 கி.மீ. திருவாரூர், திருத்துறைப்பூண்டி (வழி ; கீவளூர்) சாலையிலுள்ளது தலம்.
கரிக்குருவி (வலியன்) பூசித்த தலம். மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**239. கைச்சினம் (கச்சனம் கைச்சின்னேஸ்வரர் திருக்கோயில்)**
திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையிலுள்ள தலம். பேருந்து வசதிகள் உண்டு.





இந்திரன் மணலால் லிங்கம் அமைத்து வழிபட்டு அதை எடுத்து வைக்கும் போது கை அடையாளம் சுவாமி மீது படிந்ததாக தல வரலாறு. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**240. திருக்கோளிலி (திருக்குவளை கோளிலிநாதேஸ்வரர் திருக்கோயில்)**
திருவாரூரிலிருந்து 19 கி.மீ. தொலைவு. பேருந்து வசதி உண்டு. சுந்தரர் நெல்மலையை எடுக்க ஆள் வேண்டிப் பாடிய தலம். பகாசுரனைக் கொன்ற வீமன் பாவம் நீங்க வழிபட்ட தலம். மூவர் பாடல் பெற்றதலம். (தஞ்சை மாவட்டம்)

**241. திருவாய்மூர் (வாய்மூர்நாதர் திருக்கோயில்)**
நாகபட்டினம் - திருத்துறைப்பூண்டி பேருந்துச்சாலையில் எட்டக்குடிக்கு பிரியும் சாலையில் திரும்பிச் சென்றால் தலத்தை அடையலாம்.
அப்பரை இறைவன் அழைத்த தலம். சூரியன் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**242. திருமறைக்காடு (வேதாரண்யம் வேதாரண்யநாதர் திருக்கோயில்)**
தஞ்சாவூரிலிருந்து 130 கி.மீ. தொலைவு.
வேதங்கள் வழிபட்ட தலம். ஏழு திருமுறைகளிலும் இடம்பெற்ற தலம். வேதங்களால் அடைக்கப்பட்ட கதவு திறக்கவும், அடைக்கவும் சம்பந்தரும், அப்பரும் பதிகம் பாடிய தலம். சேரமான் பெருமாள், சுந்தரருடன் வழிபட்ட தலம். மூவர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**243. அகத்தியான்பள்ளி (அகஸ்தியம்பள்ளி அகஸ்தியர் திருக்கோயில்)**
வேதாரண்யம் – கோடிக்கரை சாலையில் 1 1/2 கி.மீ.ல் உள்ளது. அகஸ்தியர் இறைவனின் திருமணக்கோலங்காணத் தவம் செய்த பதி. சம்பந்தர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**244. திருக்கோடி (கோடியக்கரை அமுதகடேஸ்வரர் திருக்கோயில்)**
வேதாரண்யத்திலிருந்து கோடியக்கரைக்கு பேருந்து உண்டு.

திருப்பாற்கடலை கடைந்த போது தோன்றிய அமுத கலசத்தை வாயு தேவருலகத்திற்கு எடுத்துச் சென்றபோது சிந்திய அமுதமே சிவலிங்கமாயிற்று என்பது தல வரலாறு. சுந்தரர் பாடல் பெற்றது. (தஞ்சை மாவட்டம்)

**245. திரு ஆலவாய் (மதுரை சோமசுந்தரப் பெருமான் திருக்கோயில்)**
சென்னையிலிருந்து 447 கி.மீ. தொலைவு.
இறைவன் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை நிகழ்த்திய தலமிது. மூவர் பாடல் பெற்றது. இத்தலத்தின் சிறப்புகள் திருவாசகத்துள் புகழப்பட்டுள்ளது. (மதுரை மாவட்டம்)

**246. திரு ஆப்பனூர் (ஆப்புடையார் கோயில்)**
வைகை ஆற்றுக்கு அருகிலுள்ள தலம். பேருந்து வசதி உண்டு. அர்ச்சகர் ஒருவர் உலையிலிட்ட ஆற்று மணலை இறைவன் அன்னமாக மாற்றிய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (மதுரை மாவட்டம்)

**247. திருப்பரங்குன்றம் (பரங்கிநாதர் திருக்கோயில்)**
மதுரைக்கு பக்கத்திலுள்ளது. பேருந்து வசதி உண்டு.
முருகன் தெய்வானையை மணம் புரிந்த தலம். இத்தலம் சிவத்தலமாயினும் இது முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகவே கருதப்படுகிறது. சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. (மதுரை மாவட்டம்)

**248. திரு ஏடகம் (திரு வேடகம் ஏடகநாதேஸ்வரர் திருக்கோயில்)**
மதுரை – சோழவந்தான் சாலையிலுள்ளது.
சம்பந்தர் ஆற்றிலிட்ட ஏடு எதிரேறிக்கரையடைந்த தலம். திருமால், பிரம்மா வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (மதுரை மாவட்டம்)

**249. கொடுங்குன்றம் (பிரான்மலை உமா மகேஸ்வரர் திருக்கோயில்)**
மதுரை (அண்ணாபேருந்து நிலையம்) பொன்னமராவதி செல்லும் பேருந்து இவ்வழியே செல்கிறது. மதுரையிலிருந்து சிங்கம்புணரி சென்றால் இத்தலத்திற்கு பேருந்து ஏராளம் உண்டு. சம்பந்தர் பாடல் பெற்றது. (பசும்பொன் தேவர் மாவட்டம்)





**250. திருப்புத்தூர் (திருத்தளிநாதர் திருக்கோயில்)**
மதுரைக்கும் காரைக்குடிக்கும் மத்தியிலுள்ளது.
பெருமான் ஆடியருளிய கௌரி தாண்டவத்தைக் கண்டு இலட்சுமி வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர், பாடல் பெற்றது. (பசும் பொன்தேவர் மாவட்டம்)

**251. திருப்புனவாயில் (திருப்புனவாசல் விருத்தபுரீஸ்வரர் திருக்கோயில்)**
அறந்தாங்கி, ஆவுடையார் கோயில் ஊர்களிருந்து இத் தலத்திற்கு வரலாம்.
வேதங்கள் வழிபட்ட தலம். கோயிலினுள் 14 சிவலிங்கங்கள் உள்ளன. சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்றது. (புதுக்கோட்டை மாவட்டம்)

**252. இராமேஸ்வரம் (இராமநாதசுவாமி திருக்கோயில்)**
சென்னையிலிருந்து 573 கி.மீ. தொலைவு.
இராவணனைக் கொன்ற பாவம் நீங்க இராமர் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிபட்ட தலம். இத்தலம் 12 ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்று. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது (இராமநாதபுரம் மாவட்டம்)

**253. திரு ஆடானை (திருவாடானை அஜகஜேஸ்வரர் திருக்கோயில்)**
காரைக்குடியிலிருந்து 20 கி.மீ. தொலைவு. தேவகோட்டையிலிருந்து 10 கி.மீ. தொலைவு.
வருணன் மகன் வாருணி துருவாசரின் சாபத்தின் மூலம் ஆனை உடலும், ஆட்டுத் தலையுமாய் இருந்து வழிபட்டு விமோசனம் பெற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (இராமநாதபுரம் மாவட்டம்)

**254. திருப்பெருந்துறை (ஆவுடையார் கோவில் ஆத்மநாத சுவாமி திருக்கோயில்)**
புதுக்கோட்டை, அறந்தாங்கியிலிருந்து இத்தலத்திற்கு வரலாம். பேருந்துவசதி உண்டு.
இறைவன் நரிகளைப் பரிகளாக்கிய தலம். மாணிக்கவாசகருக்கு குருந்தமர நிழலில் ஞானம் அளித்த தலம். (புதுக்கோட்டை மாவட்டம்.)

**255. திருக்கானப்பேர் - திருக்கானப்பேரூர் (காளையார்கோயில் காளேஸ்வரர் திருக்கோயில்)**
சிவகங்கை, தேவகோட்டை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து உண்டு.
சிவகங்கை சமஸ்தானத்தின் கோயில். இறைவன் காளை வடிவங்கொண்டு கையில் பொற்செண்டும் திருமுடியிற் சுழியும் கொண்டு சுந்தரருக்கு காட்சி தந்த தலம். சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. (இராமநாதபுர மாவட்டம்)

**256. திருப்பூவணம் (பூவணநாதர் திருக்கோயில்)**
மதுரை – மானாமதுரை பாதையிலுள்ளது.
சம்பந்தர், சுந்தரர், அப்பர் மூவரும் மறுகரையிலிருந்தே இவ் இறைவனை வழி படுவதற்கேதுவாக நந்தி சற்று சாய்ந்திருந்த தலம். மூவர் பாடல் பெற்ற தலம் (புதுக்கோட்டை மாவட்டம்.)

**257. திருச்சுழியல் (திருச்சுழி திருமேனிநாதர் திருக்கோயில்**
மதுரை, விருதுநகரிலிருந்து பேருந்து உண்டு.
சிவன் ஒரு சமயம் பிரளயத்தைச் சுழித்துப் பூமிக்குள் புகச் செய்தார் என்பது தல வரலாறு. சுந்தரர் பாடல் பெற்றது. (காமராசர் மாவட்டம்)

**258. திருக்குற்றாலம் (குற்றாலநாதர் திருக்கோயில்)**
தென் காசிக்கும் – செங்கோட்டைக்குமிடையிலுள்ள தலம்.
நடராசருக்குரிய பஞ்ச சபைகளுள் இத்தலம் சித்திரசபை. திருமால் வடிவிலிருந்த மூர்த்தியை அகத்தியர் சிவலிங்கமாக மாற்றிய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்)

**259. திருநெல்வேலி (நெல்லையப்பர் திருக்கோயில்)**
திருநெல்வேலி மாவட்டத்தலைநகரம்.
இறைவனுக்கு அமுதாக்குவதற்கு உலரப் போட்ட நெல் மழையினால் நனையாதவாறு வேலியிட்டு காப்பாற்றிய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (நெல்லை – கட்டபொம்மன் மாவட்டம்)

**260. திருப்புக்கொளியூர் (அவிநாசி அவிநாசியப்பர் திருக்கோயில்)**
கோவையிலிருந்து 35 கி.மீ. திருப்பூரிலிருந்து 10. கி.மீ. தொலைவு.





முதலையுண்ட பாலகனை சுந்தரர் பதிகம் பாடி மீட்ட தலம். சுந்தரர் பாடல் பெற்றது. (கோவை மாவட்டம்)

**261. திருமுருகன்பூண்டி (முருகநாதேஸ்வரர் திருக்கோயில்)**
அவிநாசியிலிருந்து 5 கி.மீ. தொலைவு.
முருகன் வழிபட்ட தலம். துர்வாசர் கற்பகவுலகிலிருந்து மாதவி மரத்தை இங்கு கொண்டு வந்ததாக வரலாறு. இறைவன் தன் பூத கணங்களை ஏவி சுந்தரரின் செல்வங்களை பறித்த தலம். சுந்தரர் பாடல் பெற்றது. (கோவை மாவட்டம்.)

**262. திருநணா (பவானி சங்கமேஸ்வரர் திருக்கோயில்)**
ஈரோட்டிலிருந்து 12 கி.மீ. தொலைவு.
குபேரன், விசுவாமித்திரர், முதலியோர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. (பெரியார் மாவட்டம்)

**263. கொடிமாடச் செங்குன்றூர் ( திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் திருக்கோயில்)**
ஈரோட்டிலிருந்து 18 கி.மீ. நாமக்கல்லிலிருந்து 32 கி.மீ. தொலைவு.
சிவத்தலமாகயிருப்பினும் முருகனுக்கு மிகவும் உகந்த தலம். மலைமீது அமைந்துள்ள தலம். இம்மலையே பார்ப்பதற்கு நாகம் போன்றிருக்கும். சம்பந்தர் பாடல் பெற்றது. (சேலம் மாவட்டம்)

**264 வெஞ்சமாக் கூடல் (வெஞ்சமாங் கூடலூர் விகிர்தநாதேஸ்வரர் திருக்கோயில்)**
கரூர்– ஆற்றுமேடு நகரப் பேருந்து இவ்வழியே செல்லும். வெஞ்சமன் எனும் வேடன் ஆண்ட தலம். சுந்தரரின் பாட்டில் மகிழ்ந்த இறைவன் கிழவி வேடம் பூண்டு சுந்தரரின் பிள்ளைகளை ஈடுகாட்டி பொன் கொடுத்தலம். சுந்தரர் பாடல் பெற்றது ( திருச்சி மாவட்டம்)

**265 திருப் பாண்டிக் கொடுமுடி ( கொடுமுடி மகுடேஸ்வரர் திருக்கோயில்)**
ஈரோட்டிலிருந்து 39 கிமீ. தொலைவு.
இது மும்மூர்த்திதலம். சுந்தரர் நமச்சிவாய பதிகம் பாடிய தலம். ஆதி சேஷனுக்கும் வாயுக்கும் இடையில் ஏற்பட்ட போட்டியில் ஆயிரம் சிகரங்களுள் ஒன்று 5 மணிகளாக

சிதறியது. அவற்றில் ஒன்று கொடு முடியாகவும் ஆயிற்று என்பது வரலாறு. மூவர் பாடல் பெற்றது. ( பெரியார் மாவட்டம்)

**266 கருவூர் (கரூர் பசுபதீஸ்வரர் திருக்கோயில்)**
திருச்சி – ஈரோடு பாதையிலுள்ளது.
புகழ்ச் சோழநாயனார் ஆண்டதலம், எறிபத்த நாயனார், கருவூர்த் தேவரின் பிறந்ததலம் சம்பந்தர் பாடல் பெற்றது.(திருச்சி மாவட்டம்)

**267 திரு அஞ்சைக்களம் ( ஸ்ரீ வாஞ்சிக்குளம் மகாதேவ சுவாமி திருக்கோயில்)**
திருச்சூரிலிருந்து ( கேரளா) 32 கி.மி தொலைவு.
சேரமான் பெருமான் ஆண்ட ஊர். கேரள பாணியில் அமைந்த தலம். சுந்தரர் பாடல் பெற்றது. (திருச்சூர் மாவட்டம்- கேரளா)

**268 திருக்கோகர்ணம் (மகாபலேஸ்வரர் திருக்கோவில்)**
பெங்களூர், மங்களூர் ஆகிய ஊர்களிலிருந்து கோகர்ணத்திற்கு பேருந்து செல்கிறது.
கைலையிலிருந்து கொண்டுவந்த சிவலிங்கத்தை இளைப்பாறும் பொருட்டு இத்தலத்தில் வைத்து சற்று இளைப்பாறிய இராவணன் மீண்டும் அதை எடுக்க முயன்ற போது சிவலிங்க பாணம் பசுவின் காதுபோல் குழைந்ததாக வரலாறு. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. ( கர்நாடகா)

**269 திருப்பருப்பதம் ( ஸ்ரீசைலம் மல்லகார்ஜுனேஸ்வரர் திருக்கோயில்)**
திருப்பதியிலிருந்து 500 கி.மீ தொலைவு.
சென்னையிலிருந்து இத்தலத்திற்கு பேருந்து உண்டு.
பன்னிரண்டு ஜோதிர் லிங்கத் தலங்களுள் ஒன்று. சிலாத முனிவர் தவம் செய்த தலம். நந்தி தேவர் தவம் செய்து இறைவனை சுமக்கும் ஆற்றலைப் பெற்றார். மூவர் பாடல் பெற்றது. ( கர்நூல் மாவட்டம்- ஆந்திரா)

**270 இந்திர நீலப் பருப்பதம் ( நீலாசலநாதர் கோவில்)**
இமயமலைச் சாரலில் உள்ள தலம்.
இந்திரனால் வழிபட்ட தலம். தென்கயிலாயமான காளாத்தியை தொழுதபின் அங்கிருந்தே இத்தலத்தை சம்பந்தர் போற்றிப் பாடினார்.





**271 அநேகதங்காபதம் ( அருள் மன்னேஸ்வரர் ஆலயம்)**
ஹரித்துவாரிலிருந்து கேதாரிநாத் செல்லும் வழியிலுள்ள கௌரி குண்டம் எனும் இடமே இது.
சூரியனும், சந்திரனும் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

**272 திருக்கேதாரம் (கேதாரேஸ்வரர் ஆலயம்)**
ஹரித்துவாரிலிருந்து 250 கி.மி தொலைவு.
ஆறுமாத காலம் தேவ பூஜை. ஆறுமாத காலம் மனித பூஜை நடைபெறும் தலம். பிருங்கி முனிவரின் பொருட்டு உமையம்மை இறைவனை வழிபட்டு இடப்பாகம் பெற்றார். சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. காளாத்தியிலிருந்தே இத்தலத்தை பாடி தொழுதனர்.

**273 நொடித்தான் மலை ( திருக்கயிலாயம்)**
இமய மலையின் வடக்கில் திபெத் நாட்டின் மேற்பால் அமைந்துள்ளது.
சிவன் உமையோடு உடனாகி எழுந்தருளியுள்ள மலை கயிலாயம். இயற்கையான கோயிலமைப்பில் பனி மூடியே சிவலிங்கமாக காட்சி அளிக்கிறது. மூவர் பாடல் பெற்றது.

**274 திருக்கோணமலை (திருக்கோணேஸ்வரர் திருக்கோயில்)**
இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது.
குளக்கோட்டு மன்னன் வழிபட்ட தலம். மிகப்பழைய காலத்து இதிகாச நிகழ்வுகள் இடம் பெற்ற திருத்தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

**275 திருக்கேதீச்சரம் (திருக்கேதீஸ்வரர் திருக்கோயில்)**
இலங்கையின் வட மாகாணத்தில் மன்னாரையடுத்து மாந்தை எனும் நகரில் பாலாவிக் கரையில் அமைந்துள்ளது.
கேது பூசித்த தலம். சம்பந்தர், சுந்தர் பாடல் பெற்றது.

**276 திரு இடைவாய் (விடைவாயப்பர் திருக்கோயில்)**
தஞ்சை மாவட்டம் கொரடாச் சேரியிலிருந்து கூத்தா நல்லூர் செல்லும் பாதையில் வெண்ணாற்றுப் பாலத்திற்கு அருகில் திரு விடைவாயில் வழியில் 2கி.மி சென்றால் தலத்தை அடையலாம்.

இது புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட திருமுறைத்தலம். மேடு ஒன்றை வெட்டும் போது உள்ளே கோயில் இருந்ததாகவும் அத்தலத்தைப் பற்றிய சம்பந்தர் தேவாரம் கல்வெட்டில் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. (1917ல் கண்டுபிடிக்கப்பட்டது) (தஞ்சை மாவட்டம்)*

277 **திருக்கிளியன்னவூர்**

இதுவும் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட திரு முறைத்தலம் பாண்டிச்சேரி இந்தலாஜி இன்ஸ்டியூட்டினர் 19?2ல் வெளியிட்டுள்ள (The Institute of Indology) சம்பந்தரது திருவிடை வாய் பதிகத்தை அடுத்து திருக்கிளியன்னவூர் என்னும் தலத்தின் பதிகத்தை வெளியிட்டனர். இத்தலம் எங்குள்ளது என்று குறிப்பிடவில்லை.

திருச்சிற்றம்பலம்.





# திருத்தொண்டர் குரு பூஜை

| அடியார் பெயர்கள் | மாதம் | நட்சத்திரம் |
|---|---|---|
| 1. சிறுத் தொண்டநாயனார் | சித்திரை | பரணி |
| 2. மங்கையர்க்கரசி | சித்திரை | ரோகிணி. |
| 3. விறன்மிண்ட நாயனார் | சித்திரை | திருவாதிரை |
| 4. இசை ஞானியார் | சித்திரை | சித்திரை |
| 5. திருக் குறிப்புத் தொண்டநாயனார் | சித்திரை | சுவாதி |
| 6. திருநாவுக்கரசு சுவாமிகள் | சித்திரை | சதயம் |
| 7. கழற்சிங்க நாயனார் | வைகாசி | பரணி |
| 8. நமிநந்தியடிகள் நாயனார் | வைகாசி | பூசம் |
| 9. சோமாசிமாற நாயனார் | வைகாசி | ஆயில்யம் |
| 10. முருக நாயனார் | வைகாசி | மூலம் |
| 11. திரு நீலநக்க நாயனார் | வைகாசி | மூலம் |
| 12. திரு நீலகண்ட யாழ்ப்பாண நாயனார் | வைகாசி | மூலம் |
| 13. திரு ஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் | வைகாசி | மூலம் |
| 14 மாணிக்க வாசக சுவாமிகள் | ஆனி | மகம் |
| 15. அமர் நீதி நாயனார் | ஆனி | பூரம் |
| 16. ஏயர்கோன் கலிக்காம நாயனார் | ஆனி | ரேவதி |
| 17. மூர்த்தி நாயனார் | ஆடி | கார்த்திகை |
| 18. புகழ்ச் சோழ நாயனார் | ஆடி | கார்த்திகை |
| 19. கூற்றுவ நாயனார் | ஆடி | திருவாதிரை |
| 20. பெருமிழலைக் குறும்ப நாயனார் | ஆடி | சித்திரை |
| 21. சேரமான் பெருமான் நாயனார் | ஆடி | சுவாதி |
| 22. சுந்தர மூர்த்தி நாயனார் | ஆடி | சுவாதி |
| 23. கலிய நாயனார் | ஆடி | கேட்டை |
| 24. கோட்புலி நாயனார் | ஆடி | கேட்டை |
| 25. செருத்துணை நாயனார் | ஆவணி | பூசம் |
| 26. அதிபத்த நாயனார் | ஆவணி | ஆயில்யம் |
| 27. புகழ்துணை நாயனார் | ஆவணி | ஆயில்யம் |
| 28. இளையான் குடிமாற நாயனார் | ஆவணி | மகம் |
| 29. குலச்சிறை நாயனார் | ஆவணி | அனுஷம் |
| 30. குங்குலியக்கலய நாயனார் | ஆவணி | மூலம் |
| 31. உருத்திரபசுபதி நாயனார் | புரட்டாசி | அஸ்வினி |
| 32. திருநாளைப்போவார் நாயனார் | புரட்டாசி | ரோகிணி |
| 33. ஏனாதி நாயனார் | புரட்டாசி | உத்திராடம் |

| | | |
|---|---|---|
| 34. நரசிங்க முனையரைய நாயனார் | புரட்டாசி | சதயம் |
| 35. திருமூல நாயனார் | ஐப்பசி | அஸ்வினி |
| 36. நெடுமாற நாயனார் | ஐப்பசி | பரணி |
| 37. இடங்கழி நாயனார் | ஐப்பசி | கார்த்திகை |
| 38. சத்தி நாயனார் | ஐப்பசி | பூசம் |
| 39. பூசலார் நாயனார் | ஐப்பசி | அனுஷம் |
| 40. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் | ஐப்பசி | மூலம் |
| 41. கணம்புல்ல நாயனார் | கார்த்திகை | கார்த்திகை |
| 42. மெய்ப்பொருள் நாயனார் | கார்த்திகை | உத்திரம் |
| 43. ஆனாய நாயனார் | கார்த்திகை | அத்தம் |
| 44 மூர்க்க நாயனார் | கார்த்திகை | மூலம் |
| 45. சிறப்புலி நாயனார் | கார்த்திகை | பூராடம் |
| 46. சடைய நாயனார் | மார்கழி | திருவாதிரை |
| 47. இயற்பகை நாயனார் | மார்கழி | உத்திரம் |
| 48. மானக்கஞ்சாற நாயனார் | மார்கழி | சுவாதி |
| 49. சாக்கிய நாயனார் | மார்கழி | பூராடம் |
| 50. வாயிலார் நாயனார் | மார்கழி | ரேவதி |
| 51. கண்ணப்ப நாயனார் | தை | மிருகசீரிடம் |
| 52. அரிவாட்ட நாயனார் | தை | திருவாதிரை |
| 53. சண்டேசுவர நாயனார் | தை | உத்தரம் |
| 54. திரு நீலகண்ட நாயனார் | தை | விசாகம் |
| 55. அப்பூதியடிகள் நாயனார் | தை | சதயம் |
| 56. கலிக்கம்ப நாயனார் | தை | ரேவதி |
| 57. எறிபத்த நாயனார் | மாசி | அத்தம் |
| 58. காரி நாயனார் | மாசி | பூராடம் |
| 59. கோச்செங்கோட் சோழநாயனார் | மாசி | சதயம் |
| 60. நேச நாயனார் | பங்குனி | ரோகிணி |
| 61. கணநாத நாயனார் | பங்குனி | திருவாதிரை |
| 62. முனையடுவார் நாயனார் | பங்குனி | பூசம் |
| 63. காரைக்கால் அம்மையார் | பங்குனி | சுவாதி |
| 64. தண்டியடிகள் நாயனார் | பங்குனி | சதயம் |

திருச்சிற்றம்பலம்

ராஜன் பிரின்டர்ஸ்
31, கிறூ லேன்,
கொழும்பு - 2.